வெளியீடு 15-4-99 Issued 15-4-99

15 செப 1999

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

C

வியாழக்கிழமை, மே 28, 1998 - தொகுதி 58 - எண் 1

**Thursday the 28th May, 1998—Volume 58 - No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

D
V211,31'N98
N98.58.1
219103

[Price Rs. 3.00

28–05–1998

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xv-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| *1.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-46 |
| *2.* **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| (அ) வாணியம்பாடி மற்றும் கோவை அருகே பூண்டி மலைப் பகுதிகளில் மக்கள் காலரா நோயால் பாதிப்பு | 46-51 |
| (ஆ) திருவில்லிபுத்தூர் நகர் பேயனாறு படுகையில் அரசாணையை மீறி மணல் எடுத்தல் | 51-58 |
| (இ) கடலூர், நாகை மாவட்டங்களில் அறுவடை செய்த நெல்லை விற்க முடியாமல் உள்ள நிலை | 57-58 |
| *3.* **தகவல் கோரல்--** | |
| (அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே நகைக் கொள்ளை | 58-59 |
| (ஆ) சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்யும்முன் அதுபற்றி அறிந்து கொள்ள உறுப்பினர்களுக்குப் போதிய அவகாசம் அளித்தல் | 87 |

பக்கங்கள்

4. விதி 110-ன்கீழ் அறிக்கை--

நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ளவிருக்கும் பணிகள் குறித்து மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் அறிக்கை ... 59-64

5. கவன ஈர்ப்பு--

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் பழுதடைந்த பாலங்கள் ... 65-69

(ஆ) முடநீக்குக் கருவிகள் உடல் ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்க 1997-98 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப் படாமல் சரண்டர் செய்யப்பட்ட நிலை ... 69-78

6. அறிக்கைகள் அளித்தல்--

(அ) மதிப்பீட்டுக் குழு ... 78

(ஆ) பொதுக் கணக்குக் குழு ... 78

(இ) பொது நிறுவனங்கள் குழு ... 79

(ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு ... 79

7. அறிவிப்பு--

(அ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.இ.) ... 79

(ஆ) நிகழ்ச்சி நிரலில் எஞ்சியுள்ள சட்டமுன்வடிவுகளை மறுநாள் எடுத்துக்கொள்ளுதல் ... 159-162

(இ) பேரவைக் கூட்டத் தொடர் நீட்டிப்பு ... 94

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--

(அ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 ... 80

(ஆ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 ... 80-81


2|9|03




பக்கங்கள்

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)--தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 ... 81-82

(ஈ) தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 ... 82-83

(உ) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 ... 83

(ஊ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 ... 83-84

(எ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 ... 84-85

(ஏ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 ... 85-86

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1998 ... 86-159

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி ... 86,127,152

டாக்டர் க. கிருஷ்ணசாமி ... 94-98

திரு. பெ.சு. திருவேங்கடம் ... 98-102

மாண்புமிகு திரு. கோ.சி. மணி ... 99-100

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் ... 102-108

திரு. ஜி. பழனிசாமி ... 108-113

திரு. பி. ஆர். சுந்தரம் ... 113-118

திரு. ம. அப்துல் லத்தீப் ... 118-122

திரு. சி. ஞானசேகரன் ... 122-127

பக்கங்கள்

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1998 — 151-152

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 151-152

(இ) இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 — 153-154

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 153-154

(ஈ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 — 155-157

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் — 155,156,157

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் — 155-156

(உ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 — 157-159

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் — 158,159

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- — 163-164



## தமிழ்நாடு அரசின் ஆளுநர் அமைச்சரவையும்

## ஆளுநர்--நீதிபதி செல்வி எம். பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :**
*பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.*

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :**
*தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.*

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :**
*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.*

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :**
*வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.*

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :**
*நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.*

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி : போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன் : நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்: தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா. நா. நேரு : உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் : பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் : தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி : கைத்தறி, துணித் தொழில், சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் : பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி : வனம், சின்கோனா, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி : வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

**19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :**
*கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் ரத்துணவு.*

**20. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம்.*

**21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :**
*கால்நடைப் பராமரிப்பு.*

**22. சமூக நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

**23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

**24. சுற்றுலாத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

**25. கதர்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

**26. மீன் வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—JUSTICE SELVI M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi :**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

**2. Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

**3. Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

**4. Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

**5. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Agriculture** | .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| 7. | **Minister for Public Works** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works. |
| 8. | **Minister for Transport** | .. **The Hon. Dr. K. Ponmudi :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority. |
| 9. | **Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 10. | **Minister for Tamil Official Language, Tamil Culture, Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments. |
| 11. | **Minister for Food, Public Distribution System and Co-operation.** | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 12. | **Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Labour** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf. |
| 14. | **Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits. |
| 15. | **Minister for Handlooms** | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles and Environmental Pollution Control. |
| 16. | **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 17. | **Minister for Forest and Printing** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Forest, Cinchona, Stationery and Printing and Government Press. |
| 18. | **Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 19. | **Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 20. | **Minister for Information and Publicity** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. |

21. **Minister for Animal Husbandry** .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry.

22. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme.

23. **Minister for Adi-Dravidar and Tribal Welfare** .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

24. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation.

25. **Minister for Khadi** .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan.

26. **Minister for Fisheries** .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation.



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

செயலாளர்

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன், பி.எஸ்சி., பி.எல். | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன், டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன், எம்.ஏ., எல்.எல்.பி. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ. நா. உமா, பி.ஏ. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |

| | | |
|---|---|---|
| 17. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 21. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 23. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 25. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| 28. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 29. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| 31. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. [illegible], பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. வி. | .. கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன். திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. நத்தம் |
| 19. | ஆருண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |

| | | |
|---|---|---|
| 21. | ஆல்பன், டாக்டர் வே. | .. திருவட்டாறு |
| 22. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 23. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |
| 24. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 25. | ஆனந்தன், திரு. பால. | .. வந்தவாசி (செ.வ.) |
| 26. | இரகுமான்கான், திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 27. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. மேலூர் |
| 28. | இராசமாணிக்கம், திரு. பி. | .. ஒரத்தநாடு |
| 29. | இராசன், திரு. வி. பி. | .. இராஜபாளையம் (செ.வ.) |
| 30. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. | .. ஆண்டிமடம் |
| 31. | இராமசாமி, டாக்டர் வை. | .. பண்ருட்டி |
| 32. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. திருவாடனை |
| 33. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. கம்பம் |
| 34. | இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. தொண்டாமுத்தூர் |
| 35. | இராமச்சந்திரன், திரு. மா. | .. திருவோணம் |
| 36. | இராமலிங்கம், திரு. ஏ. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 37. | இராமலிங்கம், திரு. செ. | .. திருவிடைமருதூர் |
| 38. | இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். | .. பள்ளிப்பட்டு |
| 39. | இராமஜெயம், திரு. ந.பூ. | .. மயிலாப்பூர் |
| 40. | இராஜ ரெட்டி, திரு. ச. | .. தளி |
| 41. | இராஜேந்தர், திரு. டி. | .. பூங்கா நகர் |
| 42. | இளங்கோ, திரு. கோ. | .. அவினாசி (செ.வ.) |
| 43. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| | உதயசூரியன், திரு. தா. | .. சங்கராபுரம் |
| | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 46. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 47. | கணேசன், திரு. கே. சி. | .. ஜெயங்கொண்டம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | .. சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. பாபநாசம் |
| 51. | கருப்புசாமி, திரு. டி. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 52. | கன்னையன், திரு. க. | .. தொட்டியம் |
| 53. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. கிருஷ்ணகிரி |
| 54. | காந்தி, திரு. ஆர். | .. இராணிப்பேட்டை |
| 55. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 56. | கிருஷ்ணன், திரு. எஸ். வி. | .. நாங்குநேரி |
| 57. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. வேடசந்தூர் |
| 58. | குண்டன், திரு. டி. | .. உதகமண்டலம் |
| 59. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. குத்தாலம் |
| 60. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |
| 61. | குழந்தை தமிழரசன், திரு | .. விருத்தாசலம் |
| 62. | கோதண்டம், திரு. ஏ. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 63. | கோபால், திரு. பா. | .. மேட்டூர் |
| 64. | கோபு, திரு. சி. | .. அணைக்கட்டு |
| 65. | கோமதி சீனிவாசன், திருமதி | .. வலங்கைமான் (செ.வ.) |
| 66. | கோவிந்தன், திரு. ப. | .. தாரமங்கலம் |

67. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

68. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்

69. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்

70. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்

71. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு

72. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்

73. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

74. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு

75. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)

76. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்

77. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)

78. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

79. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

80. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)

81. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

82. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்

83. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

84. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி

85. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

86. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி

87. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்

88. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



89. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்

90. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்

91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

92. சுந்தரம், திரு. சு. .. பொன்னேரி (செ.வ.)

93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

94. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்

95. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்

96. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்

97. சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. .. திருவள்ளூர்

98. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு

99. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி

100. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி

101. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி

102. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி

103. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)

104. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்

105. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை

106. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)

107. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை

108. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்

109. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

110. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

111. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
112. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
113. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
114. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
115. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
116. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
117. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
118. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
119. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
120. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
121. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
122. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
123. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
124. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
125. தனபாலன், திரு. கு.ர.கோ. .. சேலம்-1
126. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
127. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
128. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
129. திருஞானசம்பந்தம், திரு. எஸ். வி. .. பேராவூரணி
130. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
131. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
132. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
133. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி



135. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
136. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
137. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
138. நடராஜன், திரு. த. .. செஞ்சி
139. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
140. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
141. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
142. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
143. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
144. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
145. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
146. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
147. பத்மா, டாக்டர் .. நன்னிலம் (செ.வ.)
148. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
149. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
152. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
153. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
154. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
155. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
156. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். .. பவானி
157. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை

158. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
159. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
160. புரட்சிமணி, திரு. ச. .. மங்களூர் (செ.வ.)
161. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
162. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
163. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
164. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
165. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
166. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
167. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
168. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
169. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
170. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
171. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
172. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
173. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
174. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
179. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்



180. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
181. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
182. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
183. மனோகரன், திரு. கு. .. தருமபுரி
184. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
185. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
186. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
187. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ். எஸ். .. அரவக்குறிச்சி
188. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
189. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
190. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
191. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
192. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
193. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
194. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
195. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
196. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
197. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
198. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
199. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
200. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
201. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
202. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி

| | | |
|---|---|---|
| 203. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 204. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 205. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 206. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 207. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 208. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 209. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 210. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 211. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 212. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 213. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 214. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 215. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 216. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 217. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 218. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 219. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 220. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 221. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 222. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 223. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 224. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 225. வேணு, திரு. கி. | .. | கும்மிடிப்பூண்டி |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 14, வெகுதான்ய-திருவள்ளுவர் ஆண்டு 2029

## 1998 மே 28, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்* **திரு. பரிதி இளம்வழுதி** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*"நிலையில் திரியா(து) அடங்கியான் தோற்றம்*
*மலையினும் மாணப் பெரிது."*

உறுதியான உள்ளமும், அத்துடன் ஆர்ப்பாட்டமற்ற அடக்க உணர்வும் கொண்டவரின் உயர்வு, மலையைவிடச் சிறந்தது எனப் போற்றப்படும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் *641*, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**641--**

**உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்**

**7084*--**திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[1998 மே 28

(அ) திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, பழனி வட்டம், ஆயக்குடி பேரூராட்சி, பழைய ஆயக்குடியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக்கோரி கருத்துரு பெறப்பட்டால், உரிய தகுதியுள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய சார்பாக அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டே உயர்த்தித் தரப்படுமா என்று மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே 10-வது வகுப்பிலே படிக்கின்ற மாணவ மாணவியருடைய எண்ணிக்கை 76. அதைச் சுற்றியுள்ள பள்ளிக்கூடம், 3 கிலோ மீட்டரில் ஐ.டி.ஓ. மேல்நிலைப் பள்ளி, 5 கிலோ மீட்டரில் நகரசபை மேல்நிலைப் பள்ளி, 7 கிலோ மீட்டரில் அரசு மேல்நிலைப் பள்ளி, பழனி, 10 கிலோ மீட்டரில் இன்னொரு மகளிர் மேல்நிலைப் பள்ளி. இந்தச் சூழ்நிலையில், 76 பேர் உள்ள உயர்நிலைப் பள்ளிக் கூடத்தை மேல்நிலைப் பள்ளிக்கூடமாக உயர்த்துவதற்கு நிதி இடம் தருவது கடினம். முயற்சிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதற்கு கிராம மக்கள் கட்டுகின்ற பங்குத் தொகை சென்ற ஆண்டு ஒரு இலட்சம் ரூபாயாக இருந்தது. அது இரண்டு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே



1998 மே 28]

இருக்கின்ற மக்களெல்லாம் மிகுந்த நிதியாதாரமற்ற நிலையிலே இருக்கின்ற காரணத்தினால், அந்த இரண்டு இலட்சம் ரூபாயை கிராமத்தின் மூலமாகக் கட்டுவது சற்றுச் சிரமமாக இருக்கிறது என்று கருதுகின்ற காரணத்தினால், அரசு மீண்டும் பரிசீலனை செய்து ஒரு இலட்சம் ரூபாய் கட்டினால் போதும் என்கிற நிலையை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு இலட்சம் ரூபாயும் கட்டி, கட்டட வசதியும் இருப்பதாகத் தெரிவித்து, பெற்றோர் ஆசிரியர் கழகம் மேலும் பொறுப்பேற்றுக்கொண்டு வகுப்பறைகள் கட்டித் தருவதாகச் சொல்லி, 100 மாணவர்கள் அளவிற்கு 10-வது வகுப்பிலே படிக்கின்ற அளவில் மட்டும் விண்ணப்பங்கள் நூற்றுக்கு மேல் இருக்கின்றன. நாம் வழங்க இருப்பது 30, 40 பள்ளிக்கூடங்களுக்குத்தான். ஆகவே, மாவட்ட வாரியாக சூழ்நிலையைப் பார்த்து வழங்க வேண்டியிருக்கிறது. எங்காவது நிதி கட்ட முடியாத ஒரே ஒரு காரணத்தினால் தடைபடுவதாக இருக்குமானால், அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்கின்ற கேள்வி ஒரு பொதுவான கேள்வியாக இருந்தாலும், தமிழர்களுடைய உரிமைப் பிரச்சினை. மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில், துணை வேந்தரைத் தேர்வு செய்வதற்கான குழுவில் பாபுபால், ஐ.ஏ.எஸ். என்பவரை ஒரு செனட் உறுப்பினராகப் போட்டிருக்கிறார்கள். அவர் கேரளாவைச் சேர்ந்தவர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவது பற்றிய கேள்வி, உட்காருங்கள்.

வினா எண் 642, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[1998 மே 28

**642--**

**புதுசத்திரம் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்குதல்**

*9489--**திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

நாமக்கல் மாவட்டம், புதுசத்திரத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

1998-99 ஆம் கல்வி ஆண்டில் இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தக்கோரி கருத்துருக்கள் பெறப்பட்டால், உரிய தகுதி உள்ளதென உயர்மட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்படுமானால், மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 643, டாக்டர் வே. ஆல்பன், மாண்புமிகு மக்கள் நலவாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**643--**

**மருத்துவமனையை விரிவுபடுத்தி நவீனமாக்குதல்**

*6746--**டாக்டர் வே. ஆல்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவெட்டாறு தொகுதி, குலசேகரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி நவீனமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?



1998 மே 28]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) திருவெட்டாறு தொகுதி, குலசேகரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி நவீனமாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

முற்பகல் 9-35

**டாக்டர் வே. ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குலசேகரம் மருத்துவமனை அமைந்துள்ள இடம் மலைப்பகுதியைச் சார்ந்தது. மேலும், இந்த அரசு மருத்துவமனை அமைந்திருக்கும் இடத்தில் 5 அரசு ரப்பர் கழகங்கள் இருக்கின்றன. அதுவல்லாமலும், திருவெட்டாறு, குலசேகரம், பேச்சிப்பாறை ஆகிய மூன்று காவல் சரகங்களை உள்ளடக்கியதாகும். அங்கு நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் இல்லை. மேலும், மருத்துவ உதவிக்காக நோயாளிகள் அங்கு வரும்போது அவர்களை நாகர்கோவிலுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். சுமார் 4 கிலோமீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. எனவே, அந்த மருத்துவமனையில் நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறுவதற்காக உள்நோயாளிகளுக்கான இடவசதியும் எக்ஸ்-ரே போன்ற வசதிகளும் செய்துதர அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவெட்டாறு தொகுதி, குலசேகரம் அரசு மருத்துவமனை 26 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை. அதிலே ஆண்களுக்கு 10, பெண்களுக்கு 10, மகப்பேறுப் பிரிவுக்காக 6 என்று படுக்கை வசதிகள் ஏற்கெனவே செய்து தரப்பட்டுள்ளன. ஸ்கேன் வசதியும் செய்யப்பட்டுள்ளது. உதவி மருத்துவர்கள் மூவரும், செவிலியர் 4 பேரும் மற்றும் அனைத்துத் தொழிலாளர்களும் அங்கே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு தாலுகா மருத்துவமனையையும் மேம்படுத்த வேண்டும் என்று திட்டம் தீட்டி மத்திய அரசாங்கத்திடம் 190 கோடி ரூபாய் நிதியுதவி கேட்டிருக்கின்றோம். அந்த நிதியுதவி

[1998 மே 28

கிடைத்தவுடன் தமிழகத்திலுள்ள 156 தாலுகா மருத்துவமனைகளும் தரம் உயர்த்தப்படும். அப்போது குலசேகரம் அரசு மருத்துவமனையும் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினை குறித்து அவையினுடைய கவனத்தை நான் ஈர்க்க விரும்புகின்றேன். இன்றைக்கு, சென்னை பொது மருத்துவமனை, தமிழ்நாட்டிலே ஒரு Premier Institution முன்னோடியான மருத்துவமனையாகக் கருதப்படுகிறது. ஒரு பேப்பரில் செய்தியைப் போடுவது என்றால்கூட சென்னை பெரிய மருத்துவமனை என்றுதான் பொது மருத்துவமனையைக் குறிப்பிடுகிறார்களே தவிர பொது மருத்துவமனை என்று போடுவது இல்லை. அத்தகைய ஒரு முன்னோடியாக இருக்கக்கூடிய இந்த மருத்துவமனையை, தமிழ்நாடு அரசு Deemed University-நிகர்நிலைப் பல்கலைக்கழகமாக அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், அந்த மருத்துவமனையிலே பல்வேறு வசதிகள் இல்லை என்ற குறை இன்னும் இருக்கிறது என்று நாங்கள் அறிய வருகிறோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி கூட சென்ற வாரம் முதுகு வலியால் பாதிக்கப்பட்டபோது, ஒரு இன்வெஸ்டிகேஷனுக்காக MRI Scan எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். பொது மருத்துவமனைக்குச் சென்றபோது அந்த வசதி இல்லை. நாங்கள் அப்போலோ மருத்துவமனைக்கு எழுதித் தருகிறோம், நீங்கள் அங்கே சென்று எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் ஏற்படுகின்ற முன்னேற்றங்களிலே முதல் இடமாகத் திகழவேண்டிய அந்தப் பொது மருத்துவமனை, பவளவிழா கொண்டாடுகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய இந்த ஆட்சியிலே, எந்தவொரு குறையும் இல்லாமல், இன்றைக்குத் தமிழகத்திற்குத் தலைமை மருத்துவமனையாக இருக்கக்கூடிய சென்னை பொது மருத்துவமனையிலே அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி, எந்தவொரு தனியார் மருத்துவமனைக்கும் சற்றும் தாழாமல் இருப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன். அத்தோடு சிறுநீரகக் கற்களை அகற்றும்.....



1998 மே 28]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமன் அவர்கள் தெரிவித்ததைப் போல, சென்னை அரசு பொது மருத்துவமனையிலே அனைத்து வசதிகளையும் உண்டாக்கித் தரவேண்டும் என்று இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடனே எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கிறது. சி.டி. ஸ்கேன் போன்ற வசதிகளும் செய்து தரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் MRI Scan வசதி அங்கே இல்லை என்று குறிப்பிட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, சென்னை பொது மருத்துவமனையிலேயும், மதுரை பொது மருத்துவமனையிலேயும் உடனடியாக அந்தக் கருவிகள் அமைக்க வேண்டும் என்பதற்காக கடந்த ஆண்டு நிதியைத் தந்தார்கள். அதற்கான டெண்டர்கள் எல்லாம் கோரப்பட்டிருக்கின்றன. எந்த நிறுவனத்தினுடைய Scan-ஐ வாங்குவது என்பது குறித்து ஆலோசனைக்காக அமைக்கப்பட்டிருக்கிற அந்தக் குழு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. அநேகமாக மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பிறந்தநாளான ஜூன் 3-லிருந்து - ஜூன் மாதத்திற்குள்ளாக - அந்தக் கருவிகள் பொருத்தப்படும். சென்னை பொது மருத்துவமனையில் அனைத்து வசதிகளும் செய்து தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** நெல்லை மாவட்டத்தில், அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள வி.கே. புரம் நகரத்தில், கிட்டத்தட்ட 40,000 ஜனத்தொகை உள்ள அந்த நகரத்தில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை ஒன்று உள்ளது. அந்த ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் தற்போது மகப்பேறுப் பிரிவு என்று ஒன்று இல்லாத நிலையில், அங்குள்ள மக்கள் மற்ற நகரங்களுக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. எனவே, அந்த ESI மருத்துவமனையில் மகப்பேறுப் பிரிவு அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

[1998 மே 28

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அரசு பொது மருத்துவமனையில் படுக்கை வசதிகள் மிகவும் குறைவாக இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு வந்திருந்தபோது நேரிலேயே பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். எனவே, அவசரத்திற்கு 20 படுக்கைகள் மட்டுமாவது உடனடியாக வழங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரிக்கு நான் சுற்றுப்பயணம் சென்றிருந்தபோது மாண்புமிகு உறுப்பினரோடு அந்த மருத்துவமனையைப் பார்த்தேன். சில நோயாளிகள் கீழே படுக்க வைக்கப்பட்டிருந்தார்கள். இந்தக் குறையைப் போக்குவதற்காக உடனடியாகக் கட்டில்கள் வழங்க வேண்டும், மெத்தை வழங்க வேண்டுமென்று நான் ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறேன். இன்னும் 10, 15 நாட்களுக்குள் முதற்கட்டமாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தக் கட்டில்கள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவமனைகளை விரிவுபடுத்த வேண்டும். நவீனப்படுத்த வேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், மருத்துவமனைகளிலே போதிய டாக்டர்கள் இல்லாத குறைபாடு இருக்கிறது. போலி டாக்டர்களைக் கண்டுபிடித்து, அதற்குரிய நடவடிக்கைகளை மிகச் சிறப்பாக நம்முடைய அமைச்சர் அவர்களும், துறையும் மேற்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் கிராமங்களில் உள்ள மருத்துவமனைகளை நோக்கி மருத்துவர்கள் செல்லாத குறைபாடு இருக்கிறது. குறிப்பாக 1,000 பேர் மருத்துவர்களாக வெளியில் வந்தால் 300 பேர் வெளிநாட்டுக்கு மேற்படிப்பு படிக்கச் சென்றுவிடுகிறார்கள். 200 பேருக்கு மேலே இங்கேயே மேற்படிப்பு



1998 மே 28]

படிக்கிறார்கள். 200 பேர்கள்தான் கிராமத்தை நோக்கிச் செல்கிறார்கள். பாக்கி பேர் தனியார் மருத்துவமனைகளிலேதான் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆகவே, அவற்றையெல்லாம் போக்குவதற்கான முயற்சிகளை எடுக்க, டாக்டர்களை அதிக எண்ணிக்கையில் உருவாக்குவதற்கான முயற்சிகளை எடுக்க, மருத்துவக் கல்லூரிகளை அதிக எண்ணிக்கையில் உருவாக்குவதற்கான முயற்சிகளை எடுக்க, போதிய டாக்டர்களை அரசு மருத்துவமனைகளில் நியமிப்பதற்கான முயற்சிகளை எடுக்க அரசு ஆவன செய்ய முன்வருமா? அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப்போல இந்த மாநிலத்திலே அதிகமான எண்ணிக்கையிலே டாக்டர்களை உருவாக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில்தான், கடந்த ஆண்டு திருச்சியிலே ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கினோம். இந்த ஆண்டும் வேலூரிலேயும், தூத்துக்குடியிலேயும் இரண்டு மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதற்காக ஆணைகள் எல்லாம் வெளியிடப்பட்டு, அதற்காகத் தனி அதிகாரிகள்கூட நியமிக்கப்பட்டுவிட்டார்கள். அதேபோல் அடுத்த ஆண்டு இரண்டு மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதாக நாம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம். இருந்தாலும் தமிழ்நாட்டிலே இப்போது வேலையில்லாமல் இருந்து கொண்டிருக்கின்ற டாக்டர்கள் இருக்கிறார்கள். நமக்கு இருக்கிற பிரச்சினை, Service Commission மூலமாகத்தான் டாக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று இருக்கிற காரணத்தால், ஒவ்வொரு ஆண்டும் Service Commission தமிழக அரசாங்கத்திற்கு இத்தனை டாக்டர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, அந்த அடிப்படையிலே அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் அரசுக்கு ஒதுக்கித் தருகிறார்கள். அவர்களை நியமிக்கின்ற நேரத்தில் சில தனிப்பட்ட டாக்டர்கள் குறிப்பிட்ட கிராமங்களுக்குச் செல்ல மறுக்கிறார்கள். M.B.B.S. படித்த டாக்டர்கள் ஒரு கற்பனையிலே இருந்து, கிராமங்களுக்குப் போய்ப் பார்க்கின்றபோது அடிப்படை வசதிகள் அங்கே இல்லாத காரணத்தினால், நகர்ப்புறங்களிலே பணியாற்ற வேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்த மனப்பான்மையை மாற்றி

[1998 மே 28

கிராமங்களிலேயே தங்கி அவர்கள் வைத்தியம் பார்க்க எல்லா வசதிகளும் அங்கேயே அவர்களுக்குச் செய்து கொடுத்தால்தான் இந்தப் பிரச்சினை நீங்கும். அதற்காகத்தான் முதற்கட்டமாக எல்லா இடங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையங்களைக் கட்டி வருகிறோம். இந்த ஆண்டு எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் கட்டடம் கட்டி விடுவோம். எனவே, இந்தப் பிரச்சினை அதற்குப் பிறகு தீரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 644, திரு. லி. அய்யலுசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**644--**

**ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குதல்**

*8489-**திரு. லி. அய்யலுசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கோவில்பட்டி தொகுதி, கடலையூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கடலையூர் கிராமம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ளது. அவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை அடிப்படையில் தற்போது செயல்படும் 3 ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானது என்பதாலும், கடலையூர் கிராமத்திலிருந்து 7 கி.மீ. தொலைவிலேயே எட்டயபுரம் அரசு மருத்துவமனை செயல்படுவதாலும், கடலையூர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்படுவதாலும் அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.



1998 மே 28]

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கொடுக்கப்பட்டுவிட்டன. மேலும் இல்லை என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே கடலையூர் பகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் கொடுக்கப்பட்டு, அதைக் கட்டாமல் விட்டுவிட்டார்கள். மீனாட்சிபுரம், அய்யாகோட்டூர், கடலையூர், வரதன்பட்டி, சிறுமலைக்குன்று, லிங்கம்பட்டி, குலசேகரன்புரம் ஆகிய பஞ்சாயத்துக்கள் அங்கே உள்ளன. இப்பொழுது கடலையூருக்கு அருகிலுள்ள புதிய காலனிப் பகுதியில் சமத்துவபுரம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்கே மருத்துவமனை கட்டவேண்டுமென்று, அதற்கான இடங்களையெல்லாம் பார்வையிட்டுப் போயிருக்கிறார்கள். ஆகவே, கடலையூருக்கு அருகிலுள்ள புதிய காலனிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சமத்துவபுரத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தினை அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதியிலுள்ள மக்கள் பயனடைவார்கள். எனவே, மீண்டும் பரிசீலனை செய்து, அதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 1,05,538 பேர். அங்கே ஏற்கெனவே கீழஈரால், வில்லிச்சேரி, ஈராச்சி ஆகிய இடங்களில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கடலையூர் கிராமத்தின் மக்கள் தொகை 3,627 பேர்தான். 30,000 மக்கள் தொகை கொண்ட ஒரு இடத்தில்தான் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தினை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கம் வற்புறுத்துகின்ற காரணத்தினாலே, இப்போது இயலாது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை எதிர்காலத்தில் இந்த அரசு கவனத்திலே கொண்டு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தா. உதயசூரியன்.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு எட்டு

கிலோமீட்டர் இடைவெளி இருக்க வேண்டுமென்று விதி இருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஒரு இடம் வட்டமாக உருவாகின்றபோது, அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையம் அரசு மருத்துவமனையாக மாற்றப்படுகிறது. எனவே அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினை விதியை தளர்த்தி 6 கிலோமீட்டர், 7 கிலோமீட்டர் தொலைவில் இருக்கின்ற கிராமங்களில் அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது ஒட்டன்சத்திரம் தொகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தாலுகா மருத்துவமனையாக சென்ற ஆண்டு தரமுயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அங்கிருந்து அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினை அதே ஒன்றியத்திலுள்ள கே. விருப்பூர் என்ற ஊருக்கு மாற்றுவதற்கு நானும், இயக்குநர் அவர்களும் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தினை அந்த ஊருக்கு மாற்றி அமைத்துத்தர முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பரிந்துரையையும், இயக்குநர் அவர்களுடைய பரிந்துரையையும் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. என். பெரியசாமி.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தொகுதிக்கு உட்பட்ட முத்தையாபுரம் பஞ்சாயத்து ஏறத்தாழ 45,000 மக்கள் தொகை கொண்ட பகுதியாகும். அந்தப் பகுதிக்கு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று சென்ற ஆண்டே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்து இருந்தேன். அது என்ன நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தாலுகா மருத்துவமனை அமைவதாக இருந்தால், அந்தப் பகுதி ஒரு தாலுகாவினுடைய Head quarters ஆக இருக்க வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையம் அமைவதாக இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, அருகில் வேறு எந்த ஆரம்ப சுகாதார நிலையமும் இருக்கக்கூடாது. இந்த இலக்கணங்களுக்கெல்லாம் உட்படாததால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த இடத்திலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்கு அதிகாரிகள் தங்களுடைய இசைவைத் தரவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் தேவை என்று கேட்கின்ற காரணத்தினால், தற்போது 1408 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்ற இன்றைய சூழ்நிலையில், அவற்றை மேலும் விரிவுபடுத்தும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 30,000 பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று இங்கே அறிவித்தார்கள். ஆனால், தமிழகத்தினுடைய ஜனத்தொகையை நீங்கள் கணக்கெடுத்துப் பார்த்தால், இன்னும் அதிகமான மருத்துவமனைகள் வரவேண்டும். இப்பொழுது வேலூரில் ஒரு மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு தாங்கள் ஆணையிட்டிருக்கிறீர்கள். நன்றி. அந்தக் கல்லூரியில் Nephrology Department, அதேபோல், இதயப் பிரிவு என்று பல பிரிவுகளை ஏற்படுத்துவதற்குக் குறைந்தபட்சம் 50 கோடி ரூபாயாவது வேண்டும். அப்படி ஒதுக்கீடு செய்தால்தான் எல்லாத் துறைகளையும் செம்மையாக நடத்த முடியும். மேலும், MRI Scan ஒன்று எங்கள் வேலூருக்கு உடனடியாகத் தேவைப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை வாங்கித் தருவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் நிச்சயதார்த்தம் செய்திருக்கிறோம். திருமணம் ஆக வேண்டும். அதற்குப் பிறகு 10

மாதம் கழித்துக் குழந்தை பிறக்குமா என்று எதிர்பார்க்க வேண்டும். MRI Scan-ஐப் பொறுத்தவரையில், எல்லாக் கல்லூரிகளுக்கும் இப்போது வாங்கிக் கொடுப்பதற்கு நிதிநிலைமை இல்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் முதற்கட்டமாக சென்னை பொது மருத்துவமனை, மதுரை மருத்துவமனை ஆகிய இடங்களில் அமைத்துக் கொடுப்பதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட வேலூர் மருத்துவமனையில், இந்த ஆண்டு C.D. Scan ஒன்று ஏற்கெனவே பொருத்தப்பட்டிருக்கிறது. மருத்துவக் கல்லூரி வந்ததற்குப் பிறகு, இந்த நவீன வசதிகளை எல்லாம் செய்து தந்து, அவற்றைக் கொண்டு மக்கள் பயனடைவார்களேயானால், பிறகு MRI Scan வாங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 645, திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**645--**

### சிறப்புக் குடிநீர்த் திட்டம்

*2420--**திரு. சி. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

திருவள்ளூர் தொகுதியில் திருவள்ளூர் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குத் தற்போதுள்ள குடிநீர்த் திட்டத்தை மாற்றி, மக்கள் தொகைக்கு ஏற்ப சிறப்புக் குடிநீர்த் திட்டம் கொண்டு வரப்படுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் நகராட்சிக்குத் தற்போதுள்ள குடிநீர்த் திட்டத்தை மேம்படுத்திட, மக்கள் தொகைக்கு ஏற்ப சிறப்புக் குடிநீர்த் திட்டம் கொண்டுவர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், உள்ளாட்சி குறித்த மானியக் கோரிக்கையில் பேசும்போது, இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய கூட்டுக் குடிநீர்த் திட்டங்களினுடைய எண்ணிக்கையைப் பற்றி மிக விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். அப்போது அவர்கள் கூறும்போது, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே, அந்தக் குடிநீர்த் திட்டங்கள் எல்லாம் எப்போது எடுத்துக்கொள்ளப்படும்; எப்போது முடிக்கப்படும் என்று தெரிவிப்பதாகக் கூறியிருந்தார்கள். ஆனால், இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை. நாளையாவது, அவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தெரிவிக்கிறேன் என்று சொன்னேனே தவிர, சட்டமன்றத்திலே தெரிவிக்கிறேன் என்று சொல்லவில்லை. அறிவித்திருக்கிற எண்ணிக்கை அதிகம். நான் தினசரி காலையிலும் மாலையிலும் அதுபற்றிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன். இரண்டொரு நாட்களில் நீங்கள் வீட்டுக்குச் சென்றாலும், உங்கள் வீடு தேடி அந்தக் கடிதம் வரும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 646, திரு. தா. உதயசூரியன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**646--**

### செல்லம்பட்டியில் குடிநீர் வசதி

*4555--**திரு. தா. உதயசூரியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கள்ளக்குறிச்சி-சங்கராபுரம் ஒன்றியம், செல்லம்பட்டிக்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

[1998 மே 28

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம். தற்பொழுது இத்திட்டத்தில் இருந்த பழுதுகள் நீக்கப்பட்டு, குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 10 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்குத் தண்ணீர் ஏறுவது கிடையாது. சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட பணத்தில்--செல்லம்பட்டு என்று இரண்டு ஒன்றியங்களில் உள்ளது--கள்ளக்குறிச்சி ஒன்றியத்தில் ஒரு செல்லம்பட்டும், சங்கராபுரம் ஒன்றியத்தில் ஒரு செல்லம்பட்டும், ஆக சுருக்கமாக அவற்றை க.செல்லம்பட்டு என்றும் ச. செல்லம்பட்டு என்றும் சொல்வார்கள்; அப்படி ஒதுக்கப்பட்ட பணத்தில்-- 1½ இலட்சம் ரூபாய், 1½ இலட்சம் ரூபாய் என கிணறு வெட்டுவதற்காக அந்தந்த ஒன்றியத்திற்குக் கொடுத்திருக்கிறேன். ஆகவே, புதிதாக 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள பாதுகாக்கப்பட்டக் குடிநீர் கொடுப்பதற்கு, அங்கே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றைப் புதிதாகக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் அனைத்துத் துணைக் கேள்விகளுக்குமே பதில் அளிக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்ப்பது தவறு. மூலக் கேள்வி, கள்ளக்குறிச்சி--சங்கராபுரம் ஒன்றியம் செல்லம்பட்டியிலுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்க அரசு முன்வருமா என்பதுதான். இந்தப் பிரச்சினை முடிவுற்று, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 5-9-1996-லேயே இந்தக் கேள்வி கேட்கப்பட்டது, இப்போது அதன் வேலைகள் எல்லாம் முடிவுற்று, தண்ணீர் கொடுக்கப்பட்டு வருகிறது. அவர் இப்போது கேட்பது, புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பற்றிய கேள்வி. அதற்கு என்னால் இப்போது தகவல் அளிக்க இயலாது. தகவல் தற்போது இல்லை. தேவைப்படுகிறபோது, மறுகேள்வி கேட்டால், உறுப்பினர் கேள்விக்குப் பதில் அளிக்கலாம்.



1998 மே 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரிய அளவிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில், தமிழகத்திலே பல்வேறு பகுதிகளிலே மோட்டார்களை நிறுவி, தண்ணீர் பல்வேறு கிராமங்களுக்குச் சென்று கொண்டிருக்கக்கூடிய இந்தச் சூழ்நிலையில், மோட்டார்கள் பழுதடைந்துவிட்டால், அவற்றைச் சரி செய்வதற்கு 10 நாட்களுக்கு மேலாகக்கூடிய நிலை உள்ளது. மேலும், மாற்று மோட்டார் வைத்திருந்தாலும்கூட, அதுவும் பழுதடைந்திருக்கக்கூடிய நிலையிலே பல்வேறு பகுதிகள் இருப்பதை நான் பார்த்து வருகிறேன். குறிப்பாக, எனது தொகுதியான பவானி சட்டமன்றத் தொகுதியில், பவானி ஆற்றிலும், காவிரி ஆற்றிலும் உள்ள தண்ணீரைக் கொண்டு, குடிநீர்த் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலையில் தண்ணீர் செல்லக்கூடிய பல்வேறு கிராமங்களில் உடனடியாக நல்ல மோட்டார்களை நிறுவுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த மோட்டார் நல்ல மோட்டார் என்பதை அறிந்தால், விதிமுறைகளுக்குட்பட்டு அதையும்கூட வாங்கலாம். வாங்குகிற மோட்டார்கள் அத்தனையுமே பழுதில்லாமல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. மோட்டார்கள் பழுதடைந்து, உடனடியாக அதற்குத் தீர்வு செய்யவில்லை என்றால்தான் தவறே தவிர, மோட்டார் பழுதாவதற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை. பொதுவாக எல்லா இடங்களிலுமே சரியாக ஓடுகிறது. சில இடங்களில் மட்டும்தான் சரியாக ஓடவில்லை. அவருடைய தொகுதியிலே ஏற்கெனவே அவர் தெரிவித்து, பல மோட்டார்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. பல புதிய கருவிகள் வாங்கப்பட்டு இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அவை அவ்வப்போது ஏற்படுகிற நிகழ்வுகளே தவிர, அவற்றிற்கு உத்தேசமாகத்தான் நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர, அவை நிச்சயமாகப் பழுதடையாது என்ற உறுதியைத் தர இயலாது.

முற்பகல் 9-55 [1998 மே 28

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 647, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**647--**

**உழவர் மையம் மற்றும் உழவர் விவாத மன்றம்**

*9454-**திரு. பெ. ஆசையன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியம், ஆண்டிப்பட்டியில் மாவட்ட அளவிலான உழவர் மையம் மற்றும் உழவர் விவாதமன்றம் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. பெ. ஆசையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம் என்பது தலைவர் கலைஞர் அவர்களாலே புதிதாக உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்ற மாவட்டமாகும். அந்தப் பகுதியிலிருக்கின்ற மக்கள் அத்தனை பேரும் விவசாயத்தையே வாழ்க்கையின் ஆதாரமாக வைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே மானாவாரி சாகுபடிக்குரிய நிலங்கள் அதிகபட்ச அளவில் இருந்து வருகிற காரணத்தால், அந்தப் பகுதியிலே இந்த உழவர் மையமும், உழவர் விவாத மன்றமும் அத்தியாவசியமாகிறது. எனவே, வரும் ஆண்டில் வைகை அணையின் பாசனப் பகுதிகளை மையமாக வைத்து இந்த உழவர் மையமும், உழவர் விவாத மன்றமும் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் ஒரு அங்கமாக இருக்கும் Krishi Vigyan Kendra (KVK)



1998 மே 28]

என்ற அமைப்பு, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்குத் தொழில் நுட்பப் பயிற்சியைத் தற்போதும் வழங்கி வருகிறது. இப்போது தமிழகத்தில் 12 மாவட்டங்களில் இதுபோன்ற பயிற்சி முகாம்கள் நடைபெறுகின்றன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 23 இலட்ச ரூபாய் செலவில் ஏறத்தாழ இரண்டு இலட்சம் விவசாயிகளுக்கு உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 648, திரு. ச. அழகுவேலு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**648--**

**நன்செய் நிலங்களை வீட்டுமனைகளாக்குவதைத் தடுத்தல்**

*9964--**திரு. ச. அழகுவேலு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

கரும்பு, நெல் போன்ற பணப் பயிர்கள் விளையும் நன்செய் நிலங்களை வீட்டுமனைகளாக்கி விற்பனை செய்வதைத் தடுக்க சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ச. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலையுயர்ந்த நிலங்களை வீட்டு மனைகளாகப் போடுவதற்காக Real Estate நடத்தக்கூடியவர்கள் அரசாங்கத்தினுடைய அனுமதியை எதிர்பார்க்காமல் ஆங்காங்கே கற்களை நட்டு பிளாட்டுகளின் விலைகளை உயர்த்தி விடுகிறார்கள். இதைத் தடுக்க அரசாங்கம் முன்வரவேண்டும். அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

[1998 மே 28

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கென்று அரசு தனியாக ஒரு சட்டத்தை இயற்றமுடியாது. ஆனால் 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டப் பிரிவுகளின் அடிப்படையில் இதுபோன்று பிளாட் போட்டு அனுமதிக்காக வருகின்றபோது அனுமதி மறுக்கலாம். இன்னும் சொல்லப்போனால் அரசமைப்புச் சட்டப் பிரிவு 162-ன்கீழ் உள்ள அதிகாரத்தைக் கொண்டு சில நடவடிக்கைகள் எடுப்பதற்குக்கூட மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் மூலமே அதைச் செய்ய இயலும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு போகம், மூன்று போகம் நெல் உற்பத்தியாகக்கூடிய பல பகுதிகள், குறிப்பாகக் கொட்டாரத்திலிருந்து தக்கலை வரையிலும் உள்ள பகுதிகளில் தேசிய நெடுஞ்சாலையில் இருமருங்கிலும் பிளாட் போட்டு வியாபாரம் பண்ணுவது மருத்துவமனைகளைக் கட்டுவது, குடியிருப்புகளைக் கட்டுவது போன்றவை நடைபெறுவதால், அந்தப் பயிர்களுக்குத் தேவையான தண்ணீரைத் தரமுடியாமலும், உற்பத்தியைப் பெருக்க முடியாத சூழ்நிலையும் இருந்து வருகிறது. ஒரு பிரத்யேகமான சட்டத்தைக் கொண்டு வந்து இதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைத் தடுக்க வேண்டும் என்று மாநில அரசாங்கம் ஒரு சட்டத்தை இயற்றியது. ஆனால், இதை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் சிலர் வழக்கு தொடுத்து 14-11-1995-லே அந்த வழக்கிலே ஒரு தீர்ப்பைப் பெற்றார்கள். அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் ரெவின்யு ஆக்ட்-ன்கீழே இதுபோல தடை செய்கிற அதிகாரம் கிடையாது. அப்படித் தடை விதிக்க முடியாது. இதற்காக மாநில அரசாங்கம் சட்டம் இயற்ற இயலாது என்று உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது. ஆனால, அதே தீர்ப்பில் மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-ன்படி விளை நிலங்களாக இருந்தால் அதை மனை நிலங்களாக மாற்றுகின்றபோது அதற்கு அனுமதி மறுப்பதற்கு வழியிருக்கிறது. அதைப் பயன்படுத்துவதற்குத் தேவையான சட்டங்களைக் கொண்டு வரலாமே தவிர ரெவின்யு ஆக்ட்-ன்கீழ் கொண்டு வர முடியாது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.



1998 மே 28]

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 649, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**649--**

**கோவில் நிலத்தை ஏலம் விடுதல்**

*4132--**திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி ஒன்றியம், கத்தாரி கிராமம் அருள்மிகு பெருமாள் சுவாமி கோவில் நிலம், 6 ஆண்டுகளாக ஏலம் விடப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்நிலத்தை ஏலம் விட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி ஒன்றியம், கத்தாரி கிராமம் அருள்மிகு பெருமாள் சுவாமி திருக்கோயிலுக்கு சட்டப் பிரிவு 45(1)ன்கீழ் செயல் அலுவலர் நியமனம் செய்யப்பட்டு 2-4-1998 அன்று பொறுப்பேற்றுள்ளார். ஆலயத்திற்குச் சொந்தமான சர்வே எண் 84-ல் உள்ள 7.38 ஏக்கர் நிலத்தில் 6.91 ஏக்கர் நிலம் 27-3-1998 அன்று பொது ஏலததிற்குக் கொண்டு வரப்பட்டதில் ஏலத்தில் 17 நபர்கள் கலந்துகொண்டு உயர்ந்த ஏலம் கேட்ட திரு. நடராஜன், 1 ஆண்டுக்கு ரூ. 1700/- கேட்டபடியால் சாகுபடி உரிமை மட்டும் அவருக்கு விடப்பட்டுள்ளது. சிறு சிறு வீடுகளைக் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ள 11 நபர்கள் மீது 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டம் (திருத்தச் சட்டம் 39/96) சட்டப் பிரிவு 79 (ஆ)ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[1998 மே 28

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. மகேந்திரன் இருக்கையில் இல்லை.

வினா எண் 650, திரு. ஏ. ராசேந்திரன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**650--**

**குடிசைமாற்று வாரியத்தின் செயல் திட்டம்**

*2804*--**திரு. ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) குடிசை மாற்று வாரியத்தின் செயல் திட்டங்களை நகராட்சிகளிலும் குறிப்பாக, போரூர், களம்பூர், பென்னாத்தூர் பேரூராட்சிப் பகுதிகளில் நிறைவேற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கீழ் பென்னாத்தூர் பேரூராட்சிப் பகுதியில் மட்டும் இரண்டு குடிசைப் பகுதிகளுக்கு ரூ. 3 இலட்சத்து 46 ஆயிரம் செலவில் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் கடந்த ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ. ராசேந்திரன் இருக்கையில் இல்லை.

வினா எண் 651, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

**651--**

**மழை நீரைச் சேமிக்கும் திட்டம்**

*6835*--**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--



1998 மே 28]

(அ) சென்னைக் குடிநீர் வடிகால் வாரியம் விளம்பரப்படுத்தும், மழை நீரைச் சேமிக்கும் திட்டத்தினை, வீட்டுவசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரியங்களின் குடியிருப்புப் பகுதிகளிலும் அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் விளம்பரப்படுத்தும், மழைநீரைச் சேமிக்கும் திட்டத்தினை வீட்டுவசதி வாரியத்தில் தயாரிக்கும் எல்லா வரைப்படத்திலும் ஒருங்கிணைத்தமைத்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்புதல் பெறப்பட்டு அமல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகள் மற்றும் வருவாய் ஈட்டும் திட்டப் பகுதிகளில் சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்ட மழைநீர் சேமிப்பு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், இருக்கையில் இல்லை.

வினா எண் 652, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**652--**

**கூடுதல் சார்பு நீதிமன்றம் தொடங்குதல்**

*13120*--**திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் எத்தனை வழக்குகள் தேங்கியுள்ளன?

(ஆ) வேலைப் பளுவைக் குறைக்க கூடுதல் சார்பு நீதிமன்றம் தொடங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை தங்களுடைய அனுமதியுடன் படிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் சார்பு நீதிமன்றத்தில் 31-12-1997 வரை உள்ள நிலவரப்படி மொத்தம் 7,974 வழக்குகள் நிலுவையிலுள்ளன. அதிகமான வழக்குகள் நிலுவையில் இருப்பதால், கூடுதலாக ஒரு சார்பு நீதிமன்றம் அமைப்பது பற்றி சென்னை உயர்நீதிமன்றம் பரிசீலித்து வருகிறது. அதனுடைய பரிந்துரை அரசுக்கு வந்தவுடன் அரசு இறுதி முடிவு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூரிலே இயங்கி வருகின்ற அந்தச் சார்பு நீதிமன்றம் 1981 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சார்பு நீதிமன்றமாகவே இயங்கி வருகிறது. அரசின் ஆணையில் 5 ஆண்டுகாலம் தொடர்ந்து இயங்கி வருகின்ற சார்பு நீதிமன்றங்களை நிரந்தர நீதிமன்றங்களாக ஆக்க வேண்டுமென்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 17 ஆண்டு காலமாக தற்காலிக நீதிமன்றமாக இயங்கி வருகின்ற அந்தச் சார்பு நீதிமன்றத்தை நிரந்தர நீதிமன்றமாக ஆக்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நீதிமன்றத்தில் சுமார் 8 ஆயிரம் வழக்குகள் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல் உயர்நீதிமன்றமே புதிதாக, கூடுதலாக சார்பு நீதிமன்றம் தொடங்க வேண்டுமென்று பரிசீலித்து வருவதால் மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளுக்கு ஏற்ப திருப்பூர் சார்பு நீதிமன்றத்தை நிரந்தர நீதிமன்றமாக அமைப்பதற்கு அரசு பரிந்துரைக்கும். அதுபற்றி ஆராயும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போதுமான வளாகம் இல்லாமல் திருப்பூர் சார்பு நீதிமன்றம் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, நீதிமன்றத்திற்கு புதிய வளாகம் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொகுதியில் 4 நீதிமன்றங்கள் இருக்கின்றன. இந்த விவரங்கள்தான் எனக்குத் தரப்பட்டிருக்கின்றன. அங்கே நீதிமன்றங்களுக்கு இருக்கிற இட வசதி, நீதிபதிகளுக்கான குடியிருப்பு வசதி, வழக்கறிஞர்களுக்கான அறை வசதி, போன்றவை பற்றிய விவரங்கள் என் கைக்குத் தரப்படவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் அல்லது தனியாக எனக்கு மடல் எழுதினால் அந்த விவரங்கள் அவருக்கு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

முற்பகல் 10-05

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, in almost all the Courts, lot of cases are pending. May I know from the Hon. Minister for Law, whether any expeditious action will be taken to settle all these cases in the entire State?

**HON. THIRU ALADI ARUNA:** Hon. Deputy Speaker, regarding backlog of the cases, merely opening of new Courts is not at all going to solve the problem. The structure and the jurisdiction of the Courts have to be changed. This is the permanent remedy. That can be done only by an amendment to the Constitution and not by opening new Courts or appointment of new Judges.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களிலே கட்டப்படுகின்ற நீதிமன்ற வளாகங்களுக்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், மத்திய அரசிடமிருந்து இந்த நிதி எதிர்பார்க்கப்படுகிறது என்று சென்ற முறை அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். மத்திய அரசு 1997-98 ஆம் ஆண்டுக்கான நிதியை அளித்திருக்கிறதா? அப்படி அளிக்கவில்லை என்றால் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து இந்தக் கேள்வியை மறுபடியும் கேட்கவும்.

[1998 மே 28

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற முறை திண்டுக்கல் மாவட்டத்திலே நீதிமன்ற வளாகங்கள் கட்டுவதற்கு 63 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கிட திட்டம் தயாரிக்கப்பட்டு, அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது என்று பதில் அளித்தார்கள். 1997-98 ஆம் ஆண்டுக்கான நிதி கொடுக்கப்பட்டு விட்டதா? இல்லையென்றால், அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றிய விவரம் தற்போது என்னிடத்திலே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் கட்சிகள் மீது எல்லாம் போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்று சொல்லி முதலமைச்சர் அவர்கள் பேரவையிலே அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின் பேரிலே ஒரு சில வழக்குகள் மட்டும் வாபஸ் பெறப்பட்டதே தவிர ஏராளமான வழக்குகள் பாட்டாளி மக்கள் கட்சி மற்ற கட்சிகள் மீதெல்லாம் இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டு இருக்கின்றன. அவையெல்லாம் வாபஸ் பெறப்படுமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழக்குகளையெல்லாம் திரும்பப் பெறுவது தொடர்பாக ஹோம் டிபார்ட்மெண்ட் உரிய முறையிலே பரிசீலித்து வருகிறது. ஏற்கெனவே, பாட்டாளி மக்கள் கட்சி சம்பந்தமாக 300-க்கும் மேற்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. இன்னும் பல்வேறு அரசியல் கட்சி வழக்குகளும் அல்லது அரசியல் சார்புடையவர்களுடைய வழக்குகளும் திரும்பப்பெறப் பெற்றிருக்கின்றன. ஆனால், அதே நேரத்திலே இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலிருந்தும், மாவட்ட கண்காணிப்பாளர் இடத்திலிருந்தும் அறிக்கை வந்த பிறகு, அது தொடர்பாக உள் துறை பரிசீலித்துத்தான் முடிவு எடுக்க முடியும். ஆனால், அந்தப் பரிசீலனைகள் எல்லாம் எங்கிருந்து மாவட்ட அளவில் வந்ததோ, அவை மீது எல்லாம் விரிவான முடிவு எடுத்து,



1998 மே 28]

நாங்கள் அந்த வழக்குகளைத் திரும்பப் பெற்றிருக்கிறோம். சிலவற்றைத் திரும்பப் பெற முடியாது என்றும் முடிவு செய்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 653, திரு. இரா. தாமரைக்கனி, திரு. சி. ஞானசேகரன் மற்றும் திரு. ஜி. பழனிசாமி. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**653--**

**நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகளுக்கு நிவாரணம்**

*1914--**திரு. இரா. தாமரைக்கனி:**
**திரு. சி. ஞானசேகரன்:**
**திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளையும் 1995 ஆம் ஆண்டு முதல் நலிவடைந்த ஆலைகளாக அரசு அறிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் கூட்டுறவு நூற்பாலைகள், நிவாரணம் வழங்கும் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளும் 1969-ம் ஆண்டு தமிழ்நாடு இடருதவி நிறுவனங்கள் (சிறப்பு ஒதுக்கீடு) சட்டத்தின்கீழ் 1995-ம் ஆண்டு ஜூலையிலிருந்து ஓர் ஆண்டுக்கு இடருதவி நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டன. அதன் பின் இந்த நூற்பாலைகள் இடருதவி நிறுவனங்களாக அறிவிக்கப்பட தகுதியுடையனவா என்பதை ஆராய்ந்து, ஒவ்வொரு ஆண்டாக இடருதவி நிறுவனங்களாக அரசு அறிவித்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரம் இல்லாத பஞ்சுகளை கூட்டுறவு

நூற்பாலைகளுக்கு வாங்குகிற காரணத்தினாலேதான் இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் நலிவடைந்து விடுகின்றன. ஆகவே, அரசு பருத்தியைக் கொள்முதல் செய்து, அரசு மில்லில் அரைத்து அவர்களுக்குத் தரமான பஞ்சுகளைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? இந்த 3 ஆண்டுகளில் இந்த நலிவுற்ற நூற்பாலைகளைச் சீரமைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரம் இல்லாத பஞ்சும் தரம் இல்லாத நூல் உற்பத்தியும் கடந்த ஆட்சியிலே செய்யப்பட்ட காரணத்தினாலேதான் ஓராண்டு காலம் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மிகப் பெரும் நிதிச் சுமை, கடன் ஏற்பட்டது. அதற்குப் பின்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ரூ. 15 கோடியை கோரிப் பெற்று இன்று அதன் மூலம் தரமான பஞ்சினைப் பெற்று அந்தத் தரமான நூல் உற்பத்தி செய்த காரணத்தினால்தான், இலவச வேட்டிச் சேலைகள் எல்லாம் நல்ல முறையிலே இருக்கின்றன என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். அடுத்து, இன்று கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தவரையில் 18 கூட்டுறவு நூற்பாலைகளையும் முழுமையாக இயக்குவது என்ற முடிவை முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எடுத்துவிட்டார்கள். 16 ஆலைகளில் இருந்த பிரச்சினைகள், attachnment போன்ற பிரச்சினைகள், வங்கியிலே இருக்கின்ற கடன் போன்ற பிரச்சினைகள் மற்றும் அது போல P.F., Sales Tax போன்றவைகளைக் கட்டாததால் கடந்த கால ஆட்சியிலே ஏற்பட்ட எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரு முடிவு எடுக்கப்பட்டு, ஒவ்வொரு ஆலைக்கும் ஒரு குழு என்று போட்டு, அந்தக் குழுவினுடைய முடிவுகள் இன்று முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு அந்த 16 ஆலைகளோடு மீதம் இருக்கின்ற இரண்டு ஆலைகளையும் சேர்த்து அந்த 18 ஆலைகளும் இந்த ஆண்டு சிறப்பாகவும் முழுமையாகவும் நடைபெறுவதற்கு தக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 16 கூட்டுறவு நூற்பாலைகள் மட்டும்தான் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. எங்களுடைய வேலூர் மாவட்டத்தில் அரியூர் கூட்டுறவு நூற்பாலையும், அறந்தாங்கியிலுள்ள கூட்டுறவு நூற்பாலையும் ஏற்கெனவே மூடு விழாவாகி மூடிக் கிடக்கின்றன என்பதுதான் உண்மை. இந்த ஆலைகளை நலிவடைந்த ஆலைகள் என்று சொல்வதைவிட ஏற்கெனவே மூடப்பட்டுவிட்ட ஆலைகள் என்றே சொல்லலாம். நபார்டு வங்கி மூலம் பேச்சுவார்த்தை நடத்தி உடனடியாக திறக்கப்படுமா என்று விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பாக நான் கேள்வி கேட்டபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் திறக்கப்படும் என்று சொன்னார்கள். என்னுடைய வேலூர் மாவட்டம் என்ன பாவம் செய்தது? உடனடியாக.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வியாகக் கேட்கிறேன். ஏற்கெனவே பலமுறை கேள்விகளை இது குறித்து நான் தொடுத்து, தொடுத்து இன்னமும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேலூர், அரியூர் கூட்டுறவு நூற்பாலையில் கருணைப் பார்வையைச் செலுத்தாமல் இருக்கிறார்கள். இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளாக எப்படியாவது எங்களுடைய அரியூர் கூட்டுறவு நூற்பாலையைத் திறந்து நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் ரூ. 15 கோடியை அதற்காகத் தனியாக ஒதுக்கி அந்த ஆலையை நவீனப்படுத்துவதற்கும் மற்றும் தொழிலாளர்கள் சில பேர் வாலன்டரி ரிடையர்மென்ட்டில் போக இருக்கிறார்கள், அவர்களையும் அனுப்பி விட்டு, கிட்டத்தட்ட 400 தொழிலாளர்களை மட்டும் வைத்து ஆலையை நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தொகையைக் குறிப்பிட்டு அதைக் கொடுத்தால் அந்த ஆலையை ஓட்டிவிடலாம் என்று சொல்கிறார். அப்படிப்பட்ட சூழ்நிலை அங்கே இல்லாத காரணத்தையும் மாண்புமிகு உறுப்பினர் அறிந்து

அதையும் அவரே எடுத்துக் காட்டி இருக்கிறார். அங்கே voluntary retirement-ல் செல்லக்கூடியவர்களைக் கணக்கிட்டு, அந்த ஆலையைப் பொறுத்தவரையிலே ஒரு குழு போட்டு, எப்படியெல்லாம் ஒழுங்குபடுத்தினால் அந்த ஆலை ஓடும் என்ற அடிப்படையிலே, அரியூர் ஆலைக்கு என்று தனியாகக் குழு அமைத்து திட்டங்கள் செயலாற்றப்பட்டு வருகின்றன. அதுபோலவேதான் புதுக்கோட்டை ஆலையினுடைய நிலை. ஏறத்தாழ ரூ. 4 கோடிக்கு நிதி நிறுவனங்கள் ICICI மற்றும் TIIC போன்ற நிறுவனங்களிடமிருந்து பெரும் அளவிற்கு அந்த ஆலைக்கு அட்டாச்மெண்ட் செய்து வைத்திருக்கிறார்கள். அதையெல்லாம் முறைப்படுத்துவதற்கு அரசினுடைய உதவியைக் கேட்டு, முதலமைச்சர் அவர்களும் அதற்குரிய தக்க ஏற்பாடுகளைச் செய்து, அந்தக் கட்டுப்பாடுகளையெல்லாம் நீக்கிவிட்டு, முறையாக அந்த ஆலை இயங்குவதற்குரிய வழி செய்யப்படும் என்பதை இந்த அவைக்கு உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 18 கூட்டுறவு நூற்பாலைகள் இன்றைக்கு நலிவுற்று இருப்பதற்கான அடிப்படைக் காரணங்களை நாங்கள் நேரிடையாக குழு மூலமாகச் சென்று பார்க்கின்றபோது, அநேகமாக நிர்வாகச் சீர்கேடுகளின் காரணமாகத்தான் சில ஆலைகள் மூடப்பட்டிருப்பதாகத் தெரிய வந்தது. அதிலே நிர்வாகம் செய்த அதிகாரிகள் சரியாகச் செய்யாததினால்தான், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்னதைப்போல தரமான பஞ்சுகளைக் கொள்முதல் செய்யாததால்தான் அந்த இயந்திரங்கள் எல்லாம் பழுதுபட்டு நலிவடைந்து இருந்ததால்தான், கொஞ்சம் கொஞ்சமாக அந்த ஆலைகள் எல்லாம் இப்படி நலிவடைந்திருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது இவைகளைப் படிப்படியாக எடுத்துக் கொண்டு புனரமைப்பு செய்யப்படும் என்று சொன்னார்கள். குறிப்பாக, இந்த ஆண்டிலாவது ஒரு 10 ஆலைகளைப் புனரமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 10 ஆலைகள் அல்ல 16 ஆலைகளுக்கும் இன்று அதற்குரிய நடைமுறைகள் ஓரளவு முடிக்கப்பட்டுவிட்டன. இரண்டு ஆலைகளைப் பொறுத்தவரையில்தான் மத்தியிலே இருக்கின்ற நிதி நிறுவனங்களுடன் பேச வேண்டிய கட்டாயம் இருப்பதால் தள்ளி வைக்கப்பட்டிருக்கின்றது. 16 ஆலைகள் இன்றும் ஓடிக்கொண்டு இருக்கின்றன. ஆனால், முழுமையாக ஓடவில்லை. அவைகளை முழுமையாக ஓட்டுகின்ற பணியோடு இப்போது பஞ்சு வாங்குவதிலேயும் நாம் தான் வாங்கி அளிக்கின்ற அளவிற்கு, ஓரளவிற்கு அதை ஒழுங்குபடுத்தியிருக்கிறோம். இந்த ஆண்டு நிச்சயம் 'அப்கண்ட்ரிஸ்'-னுடைய காட்டன் பஞ்சுகளை முறையாகப் பெறுவதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு ஒரு டிரான்ஸ்பெரன்சியுடன் அந்தப் பருத்தியினுடைய விலை நிர்ணயிக்கப்பட்டு, அதன்மூலம் பஞ்சும் சம்பந்தப்பட்ட ஆலைகளுக்கு அனுப்பப்படும். நிச்சயம் அதில் தவறு ஏதும் நடைபெறாமல், இந்த ஆண்டு 16 ஆலைகளோடு இந்த இரண்டு ஆலைகளையும் சேர்த்து 18 ஆலைகளையும் விரைவில் திறக்க, அன்றாடம் இந்தப் பணி நடைபெற்று வருகிறது என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 18 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மூத்த நூற்பாலையாக இருப்பது திருநெல்வேலி பேட்டையிலே இருக்கின்ற தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலை ஆகும். அமைச்சர் அவர்களே அதற்கு வருகை தந்திருக்கிறார்கள். 1989-90 ஆம் ஆண்டில் உற்பத்தியை மிக அதிகமாகப் பெருக்கியதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்பு Bonus-ஆக ஒவ்வொரு தொழிலாளிக்கும் மின் விசிறி மே தினத்தன்று தந்த ஒரு தொழிற்சாலை அது. ஆனால், இன்று இடையிலே ஏற்பட்ட நிர்வாகக் கோளாறின் காரணமாக நட்டத்திலே இயங்குகின்றது. அமைச்சர் அவர்களே பார்வையிட்டு இருக்கிறார்கள். எனவே, அந்த நூற்பாலைக்கு Cash Credit Accommodation, அதேபோல பஞ்சு வாங்குவதற்குக் கடன்,

[1998 மே 28

குறுகியகாலக் கடனை நீட்டித்துத் தருவது போன்ற சில சலுகைகளைத் தருவதன் காரணமாக அதை நல்ல முறையில் செப்பனிட்டு ஓட்டுவதற்கு வழிவகைகளைச் செய்ய அரசு முன்வருமா? அதே நேரத்தில் தொழிலாளர்கள் முழு ஒத்துழைப்பு தருவதற்கு என்றென்றும் தயாராக இருக்கிறார்கள். உடனடி நடவடிக்கை எடுத்து 100 கோடி ரூபாய் சொத்து மதிப்புள்ள அந்த ஆலைகளைச் சீரமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் வலியுறுத்திச் சொல்கிறேன். 16 ஆலைகளும் சிறப்பாகப் பணியாற்ற போர்க்கால நடவடிக்கை அடிப்படையில் இன்று முதல்வர் அவர்களுடைய ஒப்புதல் பெறுகின்ற அளவிற்கு அதனுடைய பணி முடிந்திருக்கிறது. நிச்சயம் சிறப்பாகத் திருநெல்வேலி ஆலையும் அதிலே ஒன்று என்பதும் அதனுடைய திறன் என்ன என்பதையும் நான் அறிவேன். ஆகவே, தமிழகத்திலே இருக்கின்ற 1400 பிரதம நெசவாளர் சங்கங்களுக்கு இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்துதான் நூல் அனுப்பப்படுகிறது என்பதும், இன்று எந்தக் குறைபாடும் இல்லாமல் தரம் காக்கப்படுகிறது என்பதையும் நான் இந்த அவைக்கு உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பஞ்சைக் கொள்முதல் செய்வதற்காக அரசிடமிருந்து 15 கோடி ரூபாய் பெற்றிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் பதிலுரையில் சொன்னார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே பஞ்சு விற்பனை செய்தவர்களுக்கு Cheque எல்லாம் கொடுத்து, அது return ஆகியிருக்கிறது. ஒரு கம்பெனி திவால் ஆனால்தான் அனுப்பக்கூடிய Cheque return ஆகும். ஆகக் கடந்த ஆட்சிக் காலத்திலே ஆண்டு கொண்டிருந்தவர்கள் இந்த அரசையே திவாலாக ஆக்கக்கூடிய நிலையிலே விட்டுச் சென்றுவிட்டார்கள். அவர்கள் ஏற்படுத்திய கடன்களையெல்லாம் இந்த அரசு வந்த பிறகு, அரசினுடைய தலையிலே பெருத்த சுமையாக விழுந்திருக்கிறது. இருந்த போதிலும், அந்தப் பழைய பாக்கிக்காக 15 கோடி ரூபாயை விரைவில் இந்த அரசு வழங்கும் என்று முதல்வர் அவர்கள் அன்று தெரிவித்தார்கள். நீங்களும் தெரிவித்தீர்கள். அது வழங்கப்பட்டு



1998 மே 28]

விட்டதா? இல்லையா? என்று வழங்கப்படும் என்று சொல்ல முடியுமா? இந்த ஆலைகள் நலிவுற்று விட்டன, கைத்தறிகள் நலிவுற்று விட்டன, விசைத்தறிகள் நலிவுற்றுவிட்டன என்று தனித்தனியாகப் பார்க்காமல் Overall Comprehensive Textile Fitness என்று பார்த்தால்தான் பஞ்சு உற்பத்தியிலேயிருந்து ஆயத்த ஆடைகளை உற்பத்தி செய்யக்கூடிய அளவு வரையிலும், அரசு அந்தக் கண்ணோட்டத்தோடு பார்த்தால்தான் இந்த நலிவுற்ற பிரிவை நாம் வளர்க்க முடியும் என்ற கருத்தையும் மனதிலே கொண்டு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் ஏற்பட்ட பஞ்சுக் கடனைத் தீர்ப்பது என்ற முடிவு எடுத்துதான் அதையும் இப்போது நெறிமுறையிலே ஒன்றாகக் கொண்டுதான் ஒவ்வொரு ஆலைக்கும் இருக்கின்ற பிரச்சினைகளைத் தனித்தனியாக ஆராய்ந்து எவ்வளவு தேவைப்படும் என்று கணக்கிட்டு அந்தப் பணி நடைபெற்று வருகிறது. நிச்சயம் அத்தனை ஆலைகளுக்கும் முறையாக உதவி செய்யப்படும் என்பதும் மாண்புமிகு சொக்கர் அவர்களுக்குத் தெரியும். 'SIMA' விலே ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். கூட்டுறவு நூற்பாலைகளையும், N.T.C. நூற்பாலைகளையும் மூடிவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்திலே அவர்கள் சொல்வதற்குக் காரணம் தமிழகத்திலே நூற்பாலைகள் அதிகமான காரணத்தினால் உற்பத்தி அதிகமாகிவிட்டது. அதையொட்டி நலிவுற்ற இப்படிப்பட்ட ஆலைகளையெல்லாம் மூடினால் எங்களுக்கு அது சௌகரியம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், 'SIMA'-காரர்கள், அந்த உறுப்பினர்களுக்கு, ஏற்கெனவே உற்பத்தி அளவுக்கு தமிழகத்திலே ஆலைகள் இருக்கின்றபோது அவர்களுக்கு, அதைப் போடவேண்டாம் என்று அறிவுரைதான் சொல்ல வேண்டுமேயொழிய, ஏற்கெனவே நம்முடைய முன்னோடிகளான பெரியவர்கள் உருவாக்கிய இந்த ஆலைகளை மூட வேண்டுமென்று தீர்மானத்தைப் போடுவதோ, நலிவடைந்த காரணத்தால் N.T.C. ஆலைகளை மூடுவது என்பதோ, அதிலே பணிபுரியக்கூடிய தொழிலாளர்கள் நலனைப் பாதுகாக்க வேண்டிய நாம் அப்படிப்பட்ட தீர்மானங்களைப் போடுவது-- எதிர்காலத்திலே பல பிரச்சினைகளை உருவாக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார்கள். ஆனால், நிச்சயமாக,

இந்தியா முழுமைக்கும் பஞ்சுக் கொள்முதலை 'டான்ஸ்பின்' மூலம், இன்று ஓரளவிற்குத்தான்-- பணம் இல்லாததால் செய்ய இயலுமேயொழிய, இந்த 15 கோடி ரூபாயிலே 3 கோடி ரூபாய் போனஸுக்குக் கொடுக்கப்பட்டு, 12 கோடி ரூபாய் பஞ்சுக்கு வழங்கப்பட்டு, அந்த 12 கோடி ரூபாயை வைத்துக்கொண்டுதான் அத்தனை ஆலைகளுக்கும் பஞ்சு கொடுக்கின்ற பணி நடைபெற்று வருகிறது. மேலும் தகவல் வேண்டுமானால், உறுப்பினர் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலே தேவையான தகவல்களைத் தருகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இறுதியாக, திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதும் கூட்டுறவு நூற்பாலைகளுக்குப் பஞ்சு வரும்போது, பஞ்சை Water Service செய்து, கூடுதலாக இழை வருவதற்காகச் செய்து, மில்களிலே கொடுக்கிறார்கள். 40 ஆம் நம்பர் பஞ்சை 60 ஆம் நம்பர் பஞ்சு என்று சொல்லி விற்பனை செய்கிறார்கள். இதிலே, எம்.டி.,எஃப்.எம்., காட்டன் கிளார்க், இவர்கள் எல்லாம் சதி செய்து, தரம் இல்லாத கழிவுப் பஞ்சைக் கொடுக்கிறார்கள். இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், போன ஆட்சியிலே கழிவுப் பஞ்சைக் கொடுத்துவிட்டார்கள் என்று சொல்லி, வியாபாரிகளுக்குப் பணம் கொடுக்காமல், 15 கோடி ரூபாயை நிறுத்தி வைத்திருந்தார்கள். இந்த ஆட்சி வந்தவுடன், வியாபாரிகளுக்கு ரூபாயைக் கொடுத்திருக்கிறீர்கள். அதனுடைய உள்நோக்கம் என்ன? 'செக்' திரும்பி வந்ததாகச் சொல்கிறார்கள். இப்படிக் தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிறார்கள். இதற்கு அமைச்சர் சரியான விளக்கம் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேவையில்லாத பிரச்சினையைச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்று என்னைப்



பேசும் நிலைக்கு ஆளாக்கிவிட்டார்கள். கோடிக்கணக்கான ரூபாய்க்கு 'செக்' கடந்த ஆட்சியில் கொடுக்கப்பட்டு, அவை எல்லாம் திருப்பிக் கொடுக்க முடியாத அளவிலே--இன்னும் சொல்லப்போனால் எங்களுடைய நிர்வாக இயக்குநர்களை பல பேர் ஆந்திராவுக்கும், மகாராஷ்டிரத்திற்கும், கையிலே காப்பை மாட்டி இங்கேயிருந்து அழைத்துச் சென்று சிறையிலே அடைத்தார்கள்--அவைகளை எல்லாம் வெளிப்படுத்துவது கேவலம் என்ற அடிப்படையிலேதான், நாங்கள் அதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளைக்கூட பத்திரிகைகளுக்குச் சொல்லவில்லை. ஏறத்தாழ 5, 6 நிர்வாக இயக்குநர்கள் ஒரு வழக்கிலே விடுதலை பெற்று தமிழக எல்லைக்குள் வருவதற்குள், அடுத்த வழக்கிற்காக மறுபடியும் எல்லையிலே காத்திருந்து அழைத்துக் கொண்டுபோன காட்சி எல்லாம் கடந்த ஆட்சியினுடைய அவலத்தால், அந்த ஆட்சியிலே ஏற்பட்டது. எனவே, அந்த அதிகாரிகளைக் காப்பாற்றும் பொறுப்பும் எங்களுக்கு இருக்கின்ற காரணத்தாலும்--காசோலை உங்களுடைய ஆட்சிக் காலத்திலே கொடுக்கப்பட்ட காசோலைதானே தவிர, இந்தக் கடன்கள் எல்லாம் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே கொடுக்கப்பட்ட கடன்கள்தானே தவிர, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, கலைஞர் ஆட்சியிலே வாங்கப்பட்ட பஞ்சுக்கு, ஒரு ரூபாய்கூட கடன் பாக்கி இல்லை. அந்தக் காரணத்தால்தான் இப்படிப்பட்ட கஷ்டமான சூழ்நிலையிலும் இன்று கூட்டுறவு நூற்பாலைகள் தமிழகத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள், அந்தப் பணம் எல்லாம் எப்போது கொடுக்கப்படும் என்று கேட்டார்கள். நான் 'விரைவிலே' என்று சொல்வதற்குக் காரணம், ஒரு தேதியைக் குறிப்பிடுவது சரியாக இருக்காது. ஏனென்றால், அதிலே பல பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தால், மிக விரைவிலே முடியும் என்று கருதுகிறேன். சில நேரங்களில், எதிர்பாராத சந்தர்ப்பங்கள், எதிர்பாராத பிரச்சினைகள் இதிலே குறுக்கிடுகின்றன. அவற்றை எல்லாம் ஒழுங்குபடுத்தி, முறையாக வங்கி மூலம்--நாங்கள் எங்களுடைய வங்கிக் கணக்குகளைச் சரி செய்தால்தான்--இந்தக் கடனை எல்லாம் சரி செய்வதற்கு எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கி, நிச்சயம் இந்தக் கடனைக் கட்டுவதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 மே 28

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 654, திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**654--**

**நவநாகரீக உடைகள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி**

*14690--**திரு. ஐ. கணேசன்:**
**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் பட்டு உற்பத்தியைப் பெருக்கி, நவநாகரீக உடைகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது குறித்து ஆய்வு செய்ய ஒரு வல்லுநர் குழுவை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் உள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் உடைகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'பாலாலி' என்னும் மேலாடைகளை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், கிரேக்க, ரோமானிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்த, கைத்தறித் தொழில்நுட்பம் வாய்ந்த நாடு, நம்முடைய தமிழ்நாடு. இன்றைக்குக்கூட வெளிநாடுகளிலே பார்க்கின்றபோது, வெளிநாட்டுத் தமிழர்களிடம் மட்டுமல்ல, இந்தியர்களிடம் மட்டுமல்ல, வெளிநாடுகளிலே வாழக்கூடிய பிற இன மக்களிடம் கூட, பட்டுத் துணியின் மீது மிகுந்த ஈடுபாடு இருப்பதைக் காணமுடிகிறது. பட்டுச் சேலைமீது மட்டுமல்லாமல், பட்டுத் துணிகள் மீதும் அவர்களுக்கு ஈடுபாடு இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய உடை நாகரீக சூழலுக்கேற்ப கவுன், ஸ்கர்ட், போன்ற நவநாகரீக உடைகளையும், சல்வார்கம்மீஸ், சூடிதார் போன்ற ஆடைகளையும் தைப்பதற்கு, நம்முடைய பட்டுக் கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு பயிற்சி [illegible], ஒரு பழகு முறை இருந்தால்தான், நாம் இந்தத் துறையிலே ஏற்றுமதிக்கான வாய்ப்பைக் காண முடியும். ஆகவே, இந்தப் பட்டுக் கைத்தறி நெசவாளர்களுடைய தேக்கநிலை பட்டுத் துணியிலே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை எல்லாம் சீர் செய்வதற்கு நவநாகரீக ஆடைகளைத் தைத்து ஏற்றுமதி செய்வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1998 மே 28]

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோ-ஆப்டெக்ஸில், கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் என்ற ஒரு அமைப்பில் படுக்கை விரிப்புகள் மற்றும் பருத்தி சம்பந்தமாக உள்ள துணிகள் மட்டுமே ஏற்றுமதிக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. பட்டு என்ற அளவில் பார்த்தால் வேறு மாநிலங்களையோ அல்லது அண்டை நாடுகளையோ எடுத்துக்கொண்டால் பட்டுச்சேலை மார்க்கெட் செய்ய சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்குச் செல்ல முடியுமேயொழிய, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு நாம் செல்வதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, எதிர்காலத்திலே ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பு ஏதாவது இருக்குமானால், அதையும் முறை செய்து அதற்குரிய முறையிலே வடிவமைப்புக் கொடுத்து நிச்சயமாக அந்தப் பணியை கோ-ஆப்டெக்ஸ் மூலம் செய்வதற்கு தக்க முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 655, திரு. ஏ. எம். ராமசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

[1998 மே 28

**655--**

## தொழிற்பேட்டை ஆரம்பித்தல்

*7695--**திரு. ஏ. எம். ராமசாமி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த வடசென்னிமலை அரசு கலைக் கல்லூரிக்கு அருகிலுள்ள 41.35 ஏக்கர் புறம்போக்கு நிலத்தில் தொழிற்பேட்டை ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், தொழில் முனைவோருக்கு நிலம் இலவசமாகவும், கட்டடம் கட்டக் கடனும் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது, ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த வடசென்னிமலை அரசு கலைக் கல்லூரிக்கு அருகில் உள்ள 41.35 ஏக்கர் புறம்போக்கு நிலத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் எதுவும் சிட்கோவிடம் இல்லை.

**திரு. ஏ.எம். ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 41 ஏக்கர் 32 சென்ட் அரசு புறம்போக்கு நிலம் இருக்கிறது. அந்த நிலத்திலே சிலபேர் ஆக்கிரமிப்பு செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்பை அகற்றிக்கொடுத்தால், அங்கே தொழில் முனைவோர்கள் 100 பேருக்கு மேல் தொழில் தொடங்க வருவதாக என்னிடத்தில் உறுதியாகச் சொல்லி இருக்கிறார்கள். அந்த ஆக்கிரமிப்பை அகற்றிக் கொடுத்து தொழில் முனைவோருக்கு தொழிற்பேட்டை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கு இருக்கின்ற 41 ஏக்கர் நிலத்தில், கிட்டத்தட்ட 36 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கிறது. ஆக்கிரமிப்பை அகற்றி, தொழில் முனைவோர் தொழில் தொடங்க முன்வந்தால், அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.



1998 மே 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 656, டாக்டர் மு. தேவராஜன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**656--**

## அரசு சாதனைகளை ஒளிபரப்புதல்

*10421--**டாக்டர் மு. தேவராஜன் :**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தமிழ்நாடு அரசு எடுக்கின்ற செய்திச் சுருள் படங்களை அரசின் சாதனைகளை விளக்கும் வகையில் எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசின் சாதனை படமாகத் தயாரிக்கப்பட்டு எல்லாத் தொலைக்காட்சிகள் மூலமும் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஆண்டுகளில் எத்தனை படங்கள் எடுக்கப்பட்டன? இப்படங்கள் திரை அரங்குகளில் திரையிடப்படுவதில்லை என்பதை இந்த அரசு அறியுமா? திரையிடாதவர்கள்மீது என்னென்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஓராண்டு சாதனை, நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஆகிய படங்கள் எடுக்கப்பட்டு தனியார் தொலைக்காட்சிகளிலும், திரையரங்குகளிலும் வெளியிடப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து ஒவ்வொரு திங்களிலும் ஒளிநாடா மூலமாக வீடியோ படம் தயார் செய்யப்பட்டு வெளியிடுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது. அந்த அடிப்படையில் அரசின் சாதனைகளை விளக்குகின்ற படங்கள் வெளியிடப்பட்டு

வருகின்றன. ஆண்டிற்கு மூன்று படங்கள் எடுத்து அதைத் திரையரங்குகளில் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, தொலைக் காட்சிகள் மூலம், இப்போது அரசின் சாதனைகளைப் படமாக எடுத்து வெளியிடப்படுகின்ற நிகழ்ச்சியைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அரசின் சார்பாக ஒளிநாடா மூலம் செய்தி மலர் தயாரிக்கப்பட்டு அந்தப் படம் இன்று மாலை 6.30 மணியிலிருந்து 7.00 மணி வரை 'சன்' டிவியிலும், 29-5-1998 மாலை 6.30 மணியிலிருந்து 7.00 மணி வரை 'ராஜ்' டிவியிலும், நாளை இரவு 9.30 மணியிலிருந்து 10.00 மணி வரை 'விஜய்' டி.வி.யிலும், 30 ஆம் தேதி மாலை 6.35-லிருந்து 7.00 மணி வரை சென்னை தொலைக்காட்சியிலும் அரசின் சாதனைகளைப் பற்றியப் படங்கள் காட்டப்படும்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** குறிப்பாக, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, அரசின் பல்வேறு பணிகள் பற்றி விரிவாகப் படம் எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதற்கு இணங்கவும், செய்திகள், படங்கள் எல்லாம் வெறும் விளம்பரங்களாக முதலமைச்சரையோ, அமைச்சர்களையோ காட்டும் படங்களாக இருக்கக்கூடாது; மக்களுக்குப் பயன்படுகிற பயனுள்ள படங்களாக, செய்திகளாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் முதல்வர் அவர்களின் ஆணையை ஏற்று படங்கள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. இப்போது வெளியிடப்படுகிற இந்த வீடியோ செய்தி மலரில் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களால் கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் ஓராண்டு காலச் செயல்பாடும், நடப்பு ஆண்டில் செய்யப்பட இருக்கும் திட்டங்கள் குறித்தும் விரிவாகக் காண்பிக்கப்படும். மேலும், வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம், கிராம மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம், பொது விநியோகம், வேளாண்மை, பாசனம், காவிரிப் பாசன வாய்க்கால் தூர் எடுத்தல், மீனவர் நலன், கால்நடை வளம், சாலை வசதி, போக்குவரத்து, தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு, சுற்றுச்சூழல், கல்வி, கலை, பண்பாடு, திரு. வி.க., ஜமதக்கனி, இளங்கோ ஆகியோரின் நூல்கள் அரசுடைமை, மக்கள் நல்வாழ்வு, சத்துணவு, மகளிர் நலன், மூவலூர் இராமமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன், சமூகப் பாதுகாப்புத் திட்டம், வீட்டுவசதி, சுதந்திரப் பொன்விழா ஆண்டு, சமத்துவபுரம், பூலித்தேவன் மாளிகையைப் புதுப்பித்தல், சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு குடியிருப்புகள், ஜீவா மணிமண்டபம், நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சிலை திறப்பு, வள்ளுவர் கோட்டம் புதுப்பித்தல் ஆகியவை பற்றியும் படமாக்கப்பட்டுள்ளன. அனைத்துத் திட்டங்கள் குறித்தும், செய்து முடிக்கப்பட்ட பணிகள் குறித்தும், பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணம், பணிகள் நேரடியாகப் படம் எடுக்கப்பட்டு தொகுப்பு செய்து, இதில் இணைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 657, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**657--**

### திறந்தவெளி திரையரங்குகளுக்கு உரிமம் வழங்குதல்

*11802--**திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திறந்தவெளி திரையரங்குகள் ஆரம்பிப்பவர்களுக்கு உரிமம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திறந்தவெளி திரையரங்குகள் ஆரம்பிக்க கோரிக்கைகள் வரப்பெற்றால் அரசால் உடனே பரிசீலிக்கப்பட்டு,

ஆணைகள் அவ்வப்போது வெளியிடப்படுகின்றன. தற்போது கோரிக்கைகள் எதுவும் நிலுவையில் இல்லை.

**திரு. மு. பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திறந்தவெளி திரையரங்குகள் அமைப்பதற்கு அரசினுடைய நிபந்தனைகள் என்ன? விண்ணப்பித்தால், உரிமம் வழங்க எத்தனை நாட்களை அரசு எடுத்துக்கொள்கிறது என்பதையும், அதற்குரிய கட்டணம் எவ்வளவு என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திறந்தவெளி திரையரங்குகள் அமைப்பதற்கு என்று, இன்னும் தனியாக சட்டங்கள் உருவாக்கப்படவில்லை. அவ்வப்போது வருகிற விண்ணப்பங்களை ஏற்று, ஏற்கெனவே விதிகளில் உள்ள சில தளர்வுகளை உருவாக்கித் தந்து உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், திறந்தவெளி திரையரங்குகள் செயல்பாட்டினை முறைப்படுத்தி கண்காணிக்கும் வகையில் திறந்தவெளி திரையரங்குகளுக்காக தனியாக விதிகளை இயற்ற அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக இணை ஆணையர், நில நிர்வாகத் துறை அவர்கள் அண்டை மாநிலங்களான கர்நாடகா, கேரளா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் நடைமுறையில் உள்ள திறந்தவெளி திரையரங்குகளின் விதிகளைப் பின்பற்றியும், தற்போது இயங்கிவரும் திறந்தவெளி திரையரங்குகளின் உரிமையாளர்களிடம் இதுபற்றிக் கலந்தாலோசித்தும் திறந்தவெளி திரையரங்குகளுக்கான வரைவு விதிகளை அரசுக்கு அனுப்பி உள்ளார். வரைவு விதிகளில் இவற்றிற்கான விளக்கங்கள் இணை ஆணையரிடம் கேட்கப்பட்டுள்ளன. இணை ஆணையரின் விளக்க அறிக்கை பெற்றபின் சட்டத் துறையையும் கலந்தாலோசித்து விதிமுறைகள் அமலுக்குக் கொண்டுவரப்படும். உரிமங்கள் வழங்குவதில் எந்தவிதமான காலதாமதமும் இல்லை. உடனுக்குடன் முதலமைச்சர் ஆணையோடு வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 658, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.





**658--**

**இந்தியப் பணிகளுக்கான தேர்விற்கு பயிற்சி நிலையம்**

*10346--**திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) அனைத்து இந்தியப் பணிகளுக்கான தேர்வுக்கு முன்னோடிப் பயிற்சி நிலையம் அனைத்து மாநகராட்சிகளிலும் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தொடங்கும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அனைத்து இந்தியப் பணிகளுக்கான முன்தேர்வுப் பயிற்சி நிலையம் மதுரையில் அமைப்பதற்கான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு ரூ. 27 லட்சம் செலவில் தொடங்குவதற்கு மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. கோயம்புத்தூரில் ஒரு முன்னோடிப் பயிற்சி மையம் அமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஏனைய மாநகராட்சிகளில் முன்தேர்வுப் பயிற்சி மையம் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996-97 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பிலே படிக்கின்றபோது இவ்வாண்டு கண்டிப்பாக ஆரம்பிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனாலும், இந்த 2 ஆண்டுகளாக இன்னும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எப்.எஸ். மற்றும் அதைச் சார்ந்த பணிகளுக்கான ஒரு முன்னோடிப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கவில்லை. அரசு துரித நடவடிக்கை எடுத்து மத்திய அரசை மீண்டும் கோருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1998 மே 28

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு நினைவூட்டுக் கடிதமும் கடந்த 14-5-1998 ஆம் தேதி அனுப்பப்பட்டு இருக்கிறது. அது மத்திய அரசிடம் நிலுவையில் இருக்கிறது. அதற்கு மீண்டும் நினைவூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் விரைவில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 659, திரு. அ.வ. அப்துல் நாசர், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**659--**

**கம்மியர் பயிற்சிப் பிரிவு தொடங்குதல்**

*5240--**திரு. அ.வ. அப்துல் நாசர்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) கடலூர் மீனவர் பயிற்சி நிலையத்தில் கம்மியர் பயிற்சிப் பிரிவு தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன். ரூ. 65,500 செலவில் கடலூர் பயிற்சி நிலையத்தில் கம்மியர் பயிற்சி வழங்கும்பொருட்டு 24-3-1998 ஆம் நாளிட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீன வளத் துறை அரசாணை (பல்வகை) எண் 44-ல் அரசு ஆணை வழங்கியுள்ளது. இந்தப் பயிற்சி ஜனவரி 1999-ல் ஆரம்பமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 மே 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூரில் இதுபோன்ற ஒரு பயிற்சி மையம் அமைத்துத் தருவதற்காக, நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அந்தப் பயிற்சி நிலையத்தில், மகளிரும் சேர்ந்து பயிலக்கூடிய பிரிவுகள், பாடப் பகுதிகள் எல்லாம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பொதுவான பயிற்சி. ஆண்களுக்கு என்றும் பெண்களுக்கு என்றும் இல்லை. இருந்தாலும் இந்தக் கடல் பயிற்சியைப் பொறுத்தவரையில், ஆண்கள்தான் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்கள். இந்தப் பயிற்சிக்கான தகுதி 8-ஆம் வகுப்பு. இவர்களுக்கு மாதம் இதற்காக ரூ. 150 வழங்கப்படுகிறது. மாதத்தில் 10 நாட்கள் கடலுக்குள் செல்ல வேண்டும். கடலுக்குள் செல்கிற நாட்களில் ஒருவருக்கு ரூ. 1.25 உணவுப்படியாக அதிகமாக வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 660, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**660--**

**இறால் மீன்கள் கொள்முதல் செய்தல்**

*14945--**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியின் கடற்கரைப் பகுதிகளில் கிடைக்கும் இறால் மீன்களை அரசே கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[1998 மே 28

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியின் கடற்கரைப் பகுதிகளில் கிடைக்கும் இறால் மீன்களை அரசே கொள்முதல் செய்வது குறித்து நடவடிக்கை ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு.

### (அ) வாணியம்பாடி மற்றும் கோவை அருகே பூண்டிமலைப் பகுதிகளில் காலரா நோயால் பாதிப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வாணியம்பாடி மற்றும் கோவை அருகே பூண்டிமலை போன்ற பகுதிகளில் காலரா நோயால் சிலர் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து, டாக்டர் இ.எஸ். எஸ். இராமன், திரு. என்.ஆர். அழகராஜா, திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. செங்கை சிவம் ஆகியோர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சிறப்புக் கவன ஈர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற அடிப்படையில், திரு. சி. ஞானசேகரன் அவர்களை முதலில் பேச அழைக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் மாவட்டம், வாணியம்பாடி பகுதியில் கடந்த ஒருவார காலமாக, பல பேர் வயிற்றுப் போக்கு நோயால் பாதிக்கப்பட்டு, வாணியம்பாடி, திருப்பத்தூர், ஆம்பூர் போன்ற மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டதில், அதிலே நான்கு பேர் காலரா நோய்க்குப் பலியாகியிருக்கிறார்கள். வாணியம்பாடி பகுதியைச் சேர்ந்த வட்டன் என்பவரும், நாட்ராம்பள்ளியைச் சேர்ந்த பாக்கியம், லட்சுமி ஆகிய இருவரும், ஆம்பூரைச் சேர்ந்த பாபு என்பவரும் ஆக இந்த நான்கு பேர் வயிற்றுப் போக்கு நோயால் இறந்திருக்கிறார்கள். மேலும் நேற்றுகூட வாணியம்பாடி அரசு



மருத்துவமனையிலே 25 பேரும், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் 15 பேரும், ஆம்பூர் அரசு மருத்துவமனையில் 7 பேரும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பொதுவாகவே எங்கள் மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரக்கூடிய கழிவு நீர் பாலாற்றில் கலந்து அது நிலத்தடி நீரை மிகவும் அதிகமாக, அதாவது 200 அடி ஆழத்திற்கு ஊடுருவி மாசடையச் செய்துவிட்ட காரணத்தால், எங்களுக்குப் போதிய அளவுக்குத் தூய்மையான குடிநீர், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கமுடியாத ஒரு அவல நிலை இருக்கிறது. இதற்கே தனியாக ஒரு கிரவுண்டு வாட்டர் ஸ்டடி தேவைப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்வது எல்லாம், எங்களுடைய மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் குடிக்க லாயக்கற்ற தண்ணீர் பூமிக்கடியில் இருக்கிறது என்பதை நீங்கள் கண்டுபிடித்து அதை இயர்மார்க் செய்து அந்த இடத்தில் தண்ணீர் எடுக்காமல், வேறு நல்ல பகுதியில் தண்ணீர் எடுத்து எங்கள் பகுதி மக்களுக்கு வழங்குவதற்கு, நான் ஏற்கெனவே சொன்ன அந்த கிரவுண்டு வாட்டர் ஸ்டடிக்கு உடனடியாக உத்தரவிட வேண்டும்.

அதைப்போல மருத்துவத் துறையில் பார்த்தால், மக்கள் நல்வாழ்வுத் துறையில் இருப்பவர்கள் சரியான முறையில் நடவடிக்கை எடுப்பதில்லை. குளோரின் கலந்த நீர்தான் மக்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருந்தாலும் அவர்கள் குளோரின் கலக்காமலேயே குடிதண்ணீரை வழங்குகிறார்கள். இது நம்பர் ஒன் காரணம். அடுத்து எங்கள் பகுதியில் காலரா தென்படுகிறது என்று சொன்னால், அந்தப் பகுதி மக்கள் நல்வாழ்வுத் துறையில் பணியாற்றும் பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று தடுப்பூசிகள் போடவேண்டும். அந்த வாக்சினேஷன் செய்வதில்லை. இரண்டாவதாக ஓரல் பவுடர், மாத்திரைகளை எல்லாம் உடனே கொடுத்து ஒரு விழிப்புணர்ச்சியை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். ஆனால், அதை ஏற்படுத்தாமல் இருக்கிற காரணத்தினாலே எங்களுடைய பகுதியிலே இப்போது 4 பேர் பலியாகியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-40

அதைப்போல, கோவை மாவட்டத்திலே, பூண்டிமலையிலேயிருந்து வரக்கூடிய கானாறு நீரை அருந்திய ஆதிவாசிகள் 6 பேர்

இறந்துபோய் இருக்கிறார்கள். இப்படி, நாம் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்காத காரணத்தினாலும், மக்கள் நல்வாழ்வுத் துறையிலே பணியாற்றிக் கொண்டு இருக்கக்கூடிய பணியாளர்கள், நாம் எந்த நோக்கத்தோடு அவர்களுக்கு நிறைய சம்பளத்தைத் தந்து, விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தப் பிரச்சினையைச் சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தால்-போதும். அதை விட்டுவிட்டு நீங்கள் உங்கள் விருப்பத்திற்கு சொற்பொழிவை ஆற்றிக்கொண்டிருக்கிறீர்கள். திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதானே ஆரம்பித்துள்ளேன். சுருக்கமாகப் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமில்லை. திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை அருகேயுள்ள பூண்டிமலையில் *25-5-1998* ஆம் நாள் தானிக்கண்டி, மடக்காடு, தூவைப்பதி, புதுவீடு போன்ற பகுதிகளிலுள்ள ஆதிவாசிகள் ஓடையிலுள்ள நீரைக் குடிநீராகக் குடித்ததால் பலருக்கு வயிற்றுப்போக்கு, வாந்தி, மயக்கம் வந்து, 7 ஆதிவாசிகள் இறந்தும், 10 பேர் கவலைக்கிடமாக மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டும் இருக்கிறார்கள். ஆதிவாசிகளுக்காகவும், மலைவாழ் மக்களுக்காகவும் மத்திய அரசு கோடிக்கணக்கில் ரூபாய் கொடுக்கிறார்கள். அந்த ரூபாயிலே அவர்களுக்கு வேண்டிய சாலை வசதி, குடிநீர் வசதி மற்றும் பல வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கலாம். ஆனால் அந்த வசதிகளையெல்லாம் ஏற்பாடு செய்யாத காரணத்தினால்தான் அந்த ரூபாயை சரண்டர் பண்ணுவதும், வேறு வகைகளுக்கு அந்த ரூபாயைச் செலவழிக்கிற காரணத்தினால், இந்த மாதிரி நல்ல தண்ணீரைக் குடிக்காமல் ஓடையிலுள்ள தண்ணீரைக் குடித்துவிடுகிறார்கள். அந்தத் தண்ணீர், சுகாதாரமற்ற, மக்கள் குடிப்பதற்கு லாயக்கற்ற குடிநீராக இருந்ததன் காரணத்தினாலேயே, விஷத் தன்மை வாய்ந்ததாக இருந்த காரணத்தினாலேயே, அவர்கள் எல்லாம் இறந்துவிட்டார்கள். இதற்கு சுகாதார குடிநீர்





பரிசோதனைக்கு உள்ளாட்சித் துறையிலேயிருந்து ஏற்பாடு பண்ணினால் சுகாதார ஆய்வாளர்கள் வந்து சோதனை பண்ணலாம். ஆனால் இந்த நீரையெல்லாம் குடிக்கக்கூடாது என்று சொல்லி சோஷியல் அமைப்பைச் சேர்ந்தவர்களெல்லாம் அடிக்கடி அந்த மலைவாழ் மக்களைச் சந்தித்துச் சொல்கிறார்கள். அவர்கள் ஏதாவது ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்களா? அல்லது அந்தப் பகுதியிலுள்ள சுகாதார ஆய்வாளர்கள் வந்து அந்த நீரையெல்லாம் குடிக்கக் கூடாது என்று அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்களா என்பதை அறிவதோடு, மேலும் இறந்தவர்கள் ஆதிவாசிகளாக இருக்கிற காரணத்தினால் அவர்களுடைய குடும்பத்திற்கு நிதி வழங்க வேண்டும். இனிமேலும் இந்தத் தவறு நடக்காத அளவில் அவர்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இந்த நேரத்தில் கூறிக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்ளே, நம்முடைய அரசும், சென்னை மாநகராட்சி, குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் போன்ற துறைகள் எடுத்த பெரு முயற்சியின் காரணமாக தண்ணீரில் போதிய அளவு குளோரின் இல்லை என்பதால் ஏற்படுகிற இந்த காலரா வியாதியை ஓரளவுக்கு சென்னையைச் சுற்றியிருக்கிற பகுதிகளிலே கட்டுப்படுத்தி இருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டு, மேலும் இது பரவாமல் இருக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மேலும், குடிநீரில் கழிவு நீர் கலப்பதுதான் இதற்கு முக்கிய காரணமாக இருக்கிறது. இதை உடனடியாகப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. செங்கை சிவம் ஆகியோர், தமிழ்நாட்டிலே சில இடங்களிலே ஏற்பட்டுள்ள காலரா மற்றும் வயிற்றுப்போக்கு நோய் குறித்து இங்கே பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இது குறித்து அரசுக்குக்

கிடைத்த தகவலை இந்த அவைக்கு நான் தெரிவிக்குக கடமைப்பட்டிருக்கின்றேன்.

கோவை மாவட்டத்திலுள்ள, தானிக்கண்டி, மடக்காடு மற்றும் பாலுருவம்பட்டி ஆகிய கிராமங்களிலே கடுமையான வயிற்றுப் போக்கு நோய் ஏற்பட்டு 25-5-1998 அன்று 11 நபர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர் எனவும், இவர்களில் மடககாடு கிராமத்திலுள்ள வெள்ளையன்கிரி, வயது 60, சுகன்யா, வயது 9, திருவடுகன், வயது 60 ஆகிய 3 நபர்கள் இறந்துள்ளனர் எனவும், ஏனைய நபர்கள் 26-5-1998-ல் குணமடைந்து அவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர் என்றும் ஒரு அறிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் கிடைக்கப்பெற்றிருக்கிறது. எனவே, அங்கு 6 பேர் இறந்துவிட்டார்கள் என்று சொல்கின்ற தகவல் சரியானது அல்ல.

அதைப்போல, இந்த நோய் வரக் காரணம், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல மாசு படிந்து தேங்கி நின்ற குளத்து நீரை அவர்கள் குடித்த காரணத்தினால்தான் இந்த நோய் ஏற்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். இதை உடனடியாகக் கண்காணிக்கவும், நடவடிக்கை எடுக்கவும், பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடவும், துணை சுகாதார இயக்குநர் மற்றும் வட்டாட்சியர், கோவை தெற்கு ஆகியவர்கள் கோவை மாவட்ட ஆட்சித தலைவர் அவர்களால் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். இணை சுகாதார இயக்குநரும் அந்த கிராமத்திலே முகாம் இட்டிருக்கிறார்கள். இந்நிகழ்ச்சிகள் மீண்டும் ஏற்படாத அளவுக்கு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது எல்லாவிதமான தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல தமிழ்நாட்டில், வாணியம்பாடி, திருப்பத்தூர், ஆம்பூர் போன்ற இடங்களில் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பொதுவாக தமிழ்நாட்டிலே ஒவ்வொரு ஆண்டும் சுமார் 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் மக்கள் வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்படுகிறார்கள்.

முற்பகல் 10-45

இவை அனைத்திற்கும் காரணம் சரியான குடிநீர் கிடைக்காததுதான் என்பது அறிக்கையிலேயிருந்து நமக்குக்





கிடைக்கிறது. மே, மாதத்தில் மட்டும் இந்த வயிற்றுப்போக்கு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 3,222 பேர்கள். அதிலே 11 பேர் இறந்துவிட்டார்கள். அந்த 11 பேர்களிலே 6 பேர்கள் தேனி மாவட்டத்திலும், 3 பேர்கள் வேலூர் மாவட்டத்திலும், 2 பேர்கள் விழுபபுரம் மாவட்டத்திலும் இறந்து இருக்கிறார்கள் என்பதையும் நான் இந்த அவைக்கு தெரிவிக்க விரும்புகிறேன். காலரா நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கடந்த ஆண்டு 147 பேர்கள்; இந்த ஆண்டு 23 பேர்கள்; காலரா நோயால் யாரும் இறந்து விடவில்லை. இதையெல்லாம் இந்த அரசு கருத்திலே கொண்டு பாதிக்கப்பட்டிருந்த இடங்களிலே, உடனடியாக அவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும். நோய்த் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக, ஏற்கெனவே பட்ஜெட் மூலம் நமக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த 6.36 இலட்சம் ரூபாய் நிதிபோக, கூடுதலாக 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து தந்திருக்கிறார்கள். அதன்மூலம் கிருமிநாசினிகளை வாங்கி இருப்பில் வைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பொதுவாக மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில், இந்த நோய் எங்கெல்லாம் காணப்படுகிறதோ, அங்கெல்லாம் 24 மணி நேரமும், போர்க்கால நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபட்டு உடனுக்குடன் நோயாளிகளை மருத்துவமனையிலே சேர்த்து நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். எனவே இதன்மூலம் இந்த நோய் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை இநத அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல நீர் கிடைப்பதற்கான திட்டங்கள் ஏற்கெனவே இந்த அவையிலே அறிவிக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் வழங்கப்பட்டு வருகின்றன. நல்ல குடிதண்ணீர் தமிழ்நாட்டிலே கிடைக்கிறபோது இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்.

## (ஆ) திருவில்லிபுத்தூர் நகர் பேயனாறு படுகையில் அரசாணையை மீறி மணல் எடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. இரா. தாமரைக்கனி அவர்கள் திருவில்லிபுத்தூர் நகரில் பேயனாறு படுகையில், அரசாணையை மீறி மணல் எடுப்பது குறித்து, சிறப்புக் கவன ஈர்ப்பாக, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

[1998 மே 28

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவில்லிபுத்தூர் நகருக்குக் குடிநீர் வழங்குகிற பேயனாறு படுகையில் சுமார் 400 மீட்டர் தூரம் வரை மணல் அள்ளக்கூடாது, கிணறு ஆழப்படுத்தக்கூடாது, புதிய கிணறு தோண்டக்கூடாது, புதிய 'போர்-வெல்' போடக்கூடாது, பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கக்கூடாது என்று பி. டபிள்யூ.டி-யினுடைய செகரட்டரி, 22-12-73-ல், அரசாணை 216-ன் மூலம் அரசு உத்தரவு போட்டிருக்கிறார். ஆனால் அந்த உத்தரவை மீறி பி. டபிள்யூ.டியினுடைய J.E. புதிய பம்புசெட்டுகளுக்கு தடையில்லாச் சான்றிதழ் கொடுத்து மின் இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். இதுசம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டசபையிலே, அந்த மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்றுகூட அறிவித்தார்கள். ஆனால் அவையில் கொடுத்த வாக்குறுதியைக்கூட இந்த அரசு செயல்படுத்தவில்லை. அது ஒரு பிரச்சினை என்றாலும் மணல் வந்து....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்கு மாறாக மின் இணைப்பு கொடுத்திருப்பார்களேயானால், அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து மின் இணைப்பைத் துண்டிப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நான் இந்த அவையிலே தெரிவித்தேன். மாண்புமிகு உறுப்பினருக்கே நன்றாகத் தெரியும். இதுபற்றி அவர் பேசி முடித்தவுடனேயே, உடனடியாக சில நிமிடங்களிலே அதிகாரிகளுக்கு ஆணையிடப்பட்டு, Member-Distribution இதுகுறித்து அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு அனுப்பி, குறிப்பிட்ட அதிகாரிகள் அந்த விதிமுறைகளை மீறியிருக்கிறார்களா என்று ஆய்வு செய்து, அறிக்கை தரும்படி கேட்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை கிடைத்தவுடன் யாருடைய தயவு தாட்சண்யத்திற்கும் காத்திருக்காமல் சட்டத்தை மீறி இருப்பார்களேயானால், நிச்சயமாக மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்பதை மீண்டும் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒன்றரை இலட்சம் மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினை. ஆனால் 5, 6 விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லி, அரசினுடைய விதிமுறைக்கு முரணாக ரிப்போர்ட் வந்தும், நோட்டிஸ் கொடுத்தால் நாங்கள் செய்வோம் என்று சொல்லி,



1998 மே 28] [திரு. இரா. தாமரைக்கனி]

அவன் கோர்ட்டு-க்குப் போவதற்கு ஏதுவாக நம்முடைய மின்சாரத் துறை செயல்படுவதைக் கண்டு நான் மிகவும் வேதனைப்படுகிறேன். ஆகையினால், அப்படிப்பட்டவர்களைக் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்யக்கூடாது என்று சொல்லி, என்னுடைய Subject இன்றுள்ள பிரச்சினை பேயனாறு படுகையில் கிணறு இருக்கிறது. இந்தக் கிணற்றிலே மணல் எடுக்கக்கூடாது என்று அரசு உத்தரவு இருக்கிறது. தடை உத்தரவு போடப்பட்டு இருக்கிறது. இதைப் பராமரிக்கின்ற பொறுப்பு P.W.D.யைச் சார்ந்தது. அதை மீறி இரவு நேரங்களில் 20-க்கும் மேற்பட்ட லாரிகளிலும் டிராக்டர்களிலும் வந்து மணல் அள்ளுகிறார்கள். நாங்கள் முனிசிபல் கமிஷனரிடம், முனிசிபல் கூட்டத்திலே வாதாடி, காவல் துறைக்கு மனு கொடுக்கிறோம். ரெவின்யூ இலாக்காவிற்கு மனு கொடுக்கிறோம்; கனிமவளத் துறைக்கு பெட்டிசன் கொடுக்கிறோம், இதையெல்லாம் தடுக்கவேண்டும் என்று சொல்லி. ஆனால், எங்களுடைய முனிசிபாலிட்டிக்கு எந்தவித ஒத்துழைப்பும் இல்லாமல் இருக்கிறது. இதை அரசாங்கத்தில் உள்ள எல்லாத் துறைகளின் Co-operation மூலமாகச் செய்யவேண்டும்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விதிமுறையை மீறி மணலை எடுக்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். அதோடு போதும். உட்காருங்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**திரு. இரா. தாமரைக்கனி:** விரிவாகச் சொன்னால்தானே தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரிவாகச் சொல்ல முடியாது. சுருக்கமாக கவனத்திற்குக் கொண்டு வரலாம், அவ்வளவுதான். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லிவிட்டீர்கள், போதும். இன்னும் வேறு அலுவல்கள் எல்லாம் இருக்கின்றன. (குறுக்கீடு) நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்றால், விதிமுறையை மீறி மணல் எடுக்கிறார்கள் என்று. அதைச் சொல்லிவிட்டீர்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்கள். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆகவே, எங்களுடைய முனிசிபல் கமிஷனர் போலீசிலே புகார் செய்தார். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் செய்தோம். அவர்கள் சமூக விரோதிகளுக்கு

ஒத்துழைப்பாகத்தான் இருக்கிறார்களே தவிர, எங்களுடைய மக்களுக்கு ஆதரவாக, முனிசிபாலிட்டிக்கு ஆதரவாக இல்லை. ஆகவே, பொதுப்பணித் துறைக்குத்தான் இதைக் கண்காணிக்கிற பொறுப்பு இருக்கிறது. சம்பந்தப்பட்ட ரெவின்யூ இலாக்கா, கனிமவள இலாக்கா மற்றும் பொதுப்பணித் துறை இலாக்கா ஆகிய எல்லாத் துறைகளும் Co-operation பண்ணினால்தான் மணல் அள்ளுவதைத் தடுக்க முடியும். எங்களுக்குக் குடிநீர் கிணற்றிலே வற்றாமல் இருக்கும். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருக்கிற காரணத்தால், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், இந்த அரசு உத்தரவை மீறி தடையில்லாச் சான்றிதழ்களை கொடுக்கின்ற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். கீழ்மட்ட இ.பி. அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். மணல் அள்ளுவதைத் தடுப்பதற்கு நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். நீங்கள் சட்டசபையில் சொல்கிறீர்கள். ஆனால் வேலை ஒன்றும் நடக்கமாட்டேங்குது. ஏறுக்குமாறாக வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, எங்களுடைய மக்களுக்கு, நீங்கள் குடிநீருக்குப் பாதுகாப்பு கொடுக்கிற அளவிலே, மணல் அள்ளுவதைத் தடுத்து நிறுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலிலேயிருந்து பார்த்தால், ஆரம்பமே கோணல். என்ன என்று கேட்டால், ஆற்றிலே மணலை எடுப்பதற்கு அனுமதி கொடுப்பது பொதுப்பணித் துறை அல்ல. (குறுக்கீடு) நீங்கள் எவ்வளவு நேரம் பேசினீர்கள். நான் பேசாமல் உட்கார்ந்து இருந்தேன் அல்லவா! ஆகையினாலே Call attention போடும்போது, இதை எந்த அமைச்சருக்குப் போட வேண்டும் என்று கேட்டார்கள். இது Mines-லே வரும் என்று சொன்னேன். A.D. Mines என்று ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒருவர் இருக்கிறார். அவர்தான் இதற்கு Permission, Tender வைத்துக் கொடுப்பார். பொதுப்பணித் துறை அலல. ஆனால் என்னுடைய துறை அதிகாரிகள் இது Mines-லே வருகிறது, நமக்கு இது பொறுப்பல்ல என்று எனக்கு அறிக்கை தந்திருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் திருப்பித் திருப்பி இதைக் கேட்ட காரணத்தால் நான் அதிகாரிகளிடம் விசாரித்தேன். இவருடைய சிறப்புக் கவன ஈர்ப்பின் முக்கிய கருத்து என்ன? பேயனாற்றிலே மணலை எடுக்கிறார்கள். இதுதான். ஆனால் அதை விட்டுவிட்டு, என்ன செய்தார்கள், Electricityக்குப் போனார்கள். இது இரண்டாவது கோணல். மூன்றாவது கோணல் சொல்கிறேன். இதுவரையில் மணலை எடுப்பதற்கு Permission கொடுப்பது A.D. Mines என்று சொன்னாலும், நான் விசாரித்த வரையிலே, சற்றுமுன்கூட, நான் கலெக்டர் அலுவலகத்தோடு தொடர்பு கொண்டு விசாரித்த வரையில் அப்படி யாருக்கும் மணலை எடுப்பதற்கு Permission கொடுக்கவில்லை; ஏன் என்றால், அங்கே ஓர் Water Tank இருக்கிறது. 400 மீட்டர் வரையில் எடுக்கக்கூடாது என்பதாலே, யாருக்கும் மணலை எடுப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை. ஆகையினாலே மணலை எடுக்கிறார்களே என்று கேட்டால், அதை யாராவது திருட்டுத்தனமாகச் செய்து இருக்கலாம். (குறுக்கீடு) நான் வருகிறேன். இரண்டாவது, யார் என்று சொல்கிறேன். மூன்றாவது அவர் சொன்னார், பொதுப்பணித் துறையிடத்திலே என்ன கேட்பார்கள், இந்த இடத்திலே எடுக்கலாமா, கரையோரமாக இருக்கிறதா, கிணறு ஓரமாக இருக்கிறதா, குடிதண்ணீர் இருக்கிறதா என்று கேட்பார்கள். அது இல்லை. ஏன் என்றால், கொடுக்கவேண்டிய அவசியம் எழவில்லை. எங்களைக் கேட்கவில்லை. ஆனால், இவர் என்ன சொல்கிறார் என்றால், பொதுப்பணித் துறை, எல்லாத் துறைகளும் இதைக் கட்டுக்கொள்ளை மாதிரி பண்ணுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அது அல்ல. எனக்கு வந்த செய்தியை நான் திருப்பிச் சொல்கிறேன். பழைய ஆளும் கட்சிக்காரர்கள், நேரடியாகச் சொல்லவேண்டுமானால், உங்களுக்கு வேண்டியவர்கள், அவர்கள்தான் இந்தக் காரியத்தை, திருட்டு மணலை அள்ளுகிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறதே தவிர, இதிலே அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் யார் திருட்டு மணலை எடுத்தாலும், அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு அது வருமானால், அதுகுறித்து நடவடிக்கை எடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் இதுபற்றி நேராக கலெக்டரிடம் போய் Report பண்ண வேண்டும். சார், இத்தனை லோடு போகிறது. இத்தனை மணிக்குப் போகிறது. நீங்கள் வேண்டுமானால் வந்து பாருங்கள் என்று சொல்லலாம். நானே செய்திருக்கிறேன். நான் ராணிப்பேட்டை MLA-வாக இருந்தபோது, அணைக்கட்டிலேயிருந்து சென்னைக்கு வருகிற மணல் வண்டியை நான் மறித்து, பிடித்துக் கொடுத்திருக்கிறேன். எனவே, பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் இதைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[1998 மே 28

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் (குறுக்கீடு) திரு. தாமரைக்கனி, இதற்குமேல் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) அமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு மேலும் இதிலே விவாதம் கிடையாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** கலெக்டரிடம் Report பண்ணுங்கள் என்று சொன்னார், அதைப்பற்றிச் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் நினைத்த நேரத்திலே பேசுவதற்கு அனுமதி கொடுக்க முடியாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** கலெக்டரிடம் Report பண்ணி இருக்கிறேன். தாசில்தாரிடம் Report பண்ணியிருக்கிறேன். சப்-கலெக்டரிடம் Report பண்ணியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Report பண்ணி இருக்கிறீர்கள் அல்லவா? போதும். உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு)

**திரு. இரா. தாமரைக்கனி:** மணலைப் பிடித்தது சம்பந்தமாக Report கொடுத்திருக்கிறோம். அந்த Report மேலே என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? அதிகாரிகள் செய்ய வேண்டிய வேலையை Municipal Commissioner, Chairman செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி (குறுக்கீடு)

*முற்பகல் 10-55*

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் பேசுவது எனக்கு இடையூறாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் அவர் அந்தப் பழைய நிலையிலிருந்து மாறவேயில்லை. பேசுகின்றவர்களுக்கு இடையூறு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.



1998 மே 28]

**திரு. இரா. தாமரைக்கனி:** துணைச் சபாநாயகரும் இன்னும் பழைய நிலையிலிருந்து மாறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி. அப்படியே இருக்கட்டும்.

### (இ) கடலூர், நாகை மாவட்டங்களில் அறுவடை செய்த நெல்லை விற்க முடியாமல் உள்ள நிலை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் கடலூர், நாகை மாவட்டங்களில் அறுவடை செய்த நெல்லை விவசாயிகள் விற்க முடியாமல் இருப்பது குறித்து மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடலூர், நாகை மாவட்டங்களிலே இப்போது விவசாயிகளினுடைய போர் மூலமாக விவசாயம் செய்யப்பட்ட நெல் எல்லாம் அறுவடை ஆகிக்கொண்டிருக்கிறது. அதிலே கடலூர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டோமானால், மேலைப்பனையூர், ரெட்டியார்பாளையம், குறிஞ்சிப்பாடி, கடலூர், நாகை மாவட்டத்தில், சீர்காழி, சிதம்பரத்திலே ஒரு பகுதி அறுவடை ஆகிக்கொண்டிருக்கிறது. இன்னும் தஞ்சை மாவட்டத்தில் ஒரு பகுதியில் அறுவடை தொடங்க இருக்கிறது. பொதுவாக இந்த நெல்லை நேரடி கொள்முதல் நிலையம் கொள்முதல் செய்யாததனாலே வியாபாரிகளிடத்திலே விவசாயிகள் விற்க முடியாத நிலையில் இன்றைக்கு துர்பாக்கியமான நிலைமைகள் அங்கே ஏற்பட்டிருக்கின்றன. விவசாயிகளிடத்தில் உள்ள நெல்லை என்ன செய்வது என்று தெரியாமல் வைத்திருக்கிறார்கள். வருகின்ற ஜூன் மாதம் நம்முடைய காவிரி தண்ணீர் திறந்துவிடப்பட்டு விவசாயத்தை விவசாயிகள் வேகமாகத் தொடங்க வேண்டியிருக்கிறது. இருந்தாலும் இந்த நெல்லை உடனடியாக கொள்முதல் செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கெனவே தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் நேரடி கொள்முதல் நிலையங்களில் இருக்கக்கூடிய 40,000-க்கும் மேற்பட்டிருக்கிற மூட்டைகளைக்கூட கொள்முதல் செய்வதற்கு நம்முடைய அரசு ஆணையிட்டிருந்த

போதும்கூட, அந்த நெல்லை இன்னும் கொள்முதல் செய்யவில்லை. அதற்குக் கொடுத்திருந்த ஊக்கத்தொகையான ரூ. 35-ஐ மாண்புமிகு அமைச்சரவர்கள் குறைத்துவிட்டார்கள். இருந்தாலும் அந்த நெல்லை கொள்முதல் செய்தால போதும் என்கிற நிலையில் இன்றைக்கு விவசாயிகள் இருந்துகொண்டிருக்கிற காரணத்தால் உடனடியாக இது சம்பந்தமாக அரசு உரிய நடவடிக்கை எடுத்து அந்த நெல்லை கொள்முதல் செய்யுமா? இது சம்பந்தமான ஒரு பெரிய அறிவிப்பு ஏதாவது விவசாயிகளுக்கு ஆதரவாக வெளியிடுமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏகபோகக் கொள்முதல் திட்டம் இருந்த காலத்தில்கூட 30 நாளோடு அரசு கொள்முதலை நிறுத்தியிருக்கிறது, கடந்த காலத்தில். இந்த ஆண்டு இணைக் கொள்முதலிலே 30-4-1998 வரை மானிய ஊக்கத்தொகையோடு விவசாயிகளுடைய நெல்லை கொள்முதல் செய்தோம். அதற்குப் பிறகு ஊக்கத்தொகை இல்லாமல் வாங்குவதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்திருக்கிறது. வாங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஊக்கத்தொகை குறைவதற்குக் காரணம்கூட, விவசாயிகளுடைய அறுவடை முழுமையாக முடிந்திருக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை அனுப்பிவிட்ட காரணத்தால் வியாபாரிகள் அதிகமான அளவிற்கு கொள்முதல் செய்து அதிக விலைக்கு அரசினுடைய பணத்தைக் கொள்ளையடிக்கிறார்கள்; அதை நிறுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த ஊக்கத்தொகையைக் குறைத்து இன்றைக்கு அரசு ஆணையிட்டிருக்கிறது. முழுமையாக எந்தப் பகுதியினுடைய விவசாயிகளின் நெல்லாக இருந்தாலும், இந்த மாதத்திலே அந்த ஊக்கத்தொகை இல்லாமல் அரசு கொள்முதல் செய்வதற்கு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### (அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே நகைக் கொள்ளை

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஏதாவது அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்களா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒன்றுமே சொல்லாமல் எழுந்து நிற்கிறீர்கள். அப்புறம் பேச அனுமதிக்கமாட்டார் என்கிறீர்கள். குரல்வளையை நெரிக்கிறேன் என்கிறீர்கள். என்னை அறையில் பார்த்தபோது ஒன்றுமே சொல்லவில்லை, சரி சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் வியாழக்கிழமை அன்று எங்களுடைய நாமக்கல் மாவட்டம் பரமத்தி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலே ரூ. 81 லட்சத்திற்கு நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டன. அது சம்பந்தமாக சிறப்புக் கவனஈர்ப்பு கொடுத்து இருந்தேன். அதனுடைய நிலையைப்பற்றி தங்களிடம் கேட்க விரும்புகிறேன்.

## 4. விதி 110-ன்கீழ் அறிக்கை.

### நெடுஞ்சாலைத் துறை மேற்கொள்ளவிருக்கும் பணிகள் குறித்து மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விதி 110-ன்கீழ் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிக்க அனுமதி கேட்டுள்ளார்கள். அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் என்னுடைய மானியக் கோரிக்கையின்கீழ் சில அறிவிப்புகளை வெளியிடமுடியாத சூழ்நிலை இருந்தது. எனவே இன்று நீங்கள் அனுமதி கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு இந்த அறிவிப்புகளை இன்றைக்கு நான் வெளியிடுகிறேன்.

[திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்] [1998 மே 28

கிழக்குக் கடற்கரைச் சாலை. உலக வங்கித் திட்ட உதவியுடன் இந்த ஆண்டு தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட உள்ள Road Sector Projects எனும் திட்டத்தின்கீழ் முதல் திட்டத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் சுமார் 375 கிலோ மீட்டர் நீளத்திற்கு எடுத்து மேம்பாடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிதம்பரம், சீர்காழி, நாகூர், நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை ஆகிய ஊர்களுக்கு புறவழிச்சாலை அமைத்திட திட்டங்கள் உள்ளன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

அதேபோன்று, இந்த ஆண்டு பெரிய அளவில் தொடங்கப்படும் Road Sector Projects என்ற திட்டத்தின்கீழ் சுமார் 15 கோடி ரூபாய் செலவில் 9 கி.மீ. நீளத்திற்கு கும்பகோணத்தில் புறவழிச் சாலை அமைய உள்ளது என்பதையும் இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணியும் முடிந்துவிட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதே Road Sector Projects திட்டத்தின்கீழ் 2-ஆம் கட்டமாக திருவண்ணாமலை மற்றும் திருக்கோவிலூர் ஆகிய நகரங்களிலும் புறவழிச்சாலைகள் அமைக்கப்பட உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கழகம். மகாராஷ்டிரா மாநிலத்தில் 'மகாராஷ்டிரா மாநில சாலை மேம்பாட்டு நிறுவனம்' என்னும் ஒரு நிறுவனம் 1956 ஆம் ஆண்டு கம்பெனி சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு, சாலைப் பணிகளையும், பாலப் பணிகளையும், துறைமுகப் பணிகளையும், அம்மாநிலத்தில் செயல்படுத்தி, பராமரித்து வருகிறது. இந்த நிறுவனம் அரசு சார்புடையதாக இருப்பதாலும் கம்பெனிச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு இருப்பதாலும், பொதுமக்களிடமிருந்து பங்கு மூலதனங்களைப் பெற்று பணிகளைச் செய்து வருகிறது. இதனால் அந்த மாநில அரசுக்கு உள் கட்டமைப்பு வசதிகள் செய்து தருவதில் ஏற்படும் செலவினத்தில் நிதிச்சுமை குறைகிறது. மேலும் தேவையான அளவுக்கு பங்கு மூலதனமாக பொதுமக்களிடமிருந்து நிதி வசதி பெற்றிடவும் வழிகோலுகிறது.

இதைத் தவிர தனியார் நிதி ஆதார முதலீட்டையும் பெற்று, கட்டுதல், இயக்குதல், பின்பு ஒப்புவித்தல் BOT அல்லது கட்டுதல், சொந்தம் கொள்ளுதல், இயக்குதல், பின்பு ஒப்புவித்தல்--BOOT முறைகளில் சாலைப் பணிகள், பாலப் பணிகள் மற்றும் துறைமுகப்



1998 மே 28] [திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்]

பணிகளைச் செய்திடவும் வாய்ப்பு உள்ளது. எனவே, இதே முறையில் நமது தமிழ்நாட்டிலும் "சாலை மேம்பாட்டு நிறுவனம்" ஒன்றை நிறுவலாம் என்று அரசு ஆய்வு செய்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் இதுகுறித்து கலந்து பேசப்பட்டிருக்கிறது.

தமிழகத்திலுள்ள 56,000 கி.மீ. சாலை ஓரங்களில் பல ஆண்டுகளுக்கு முன்னால் நடப்பட்டு, வளர்க்கப்பட்ட மரங்கள் நிழலையும், பலனையும் தந்து கொண்டிருக்கின்றன. ஆனாலும் ஆண்டுதோறும் சாலைகளின் நீளம் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இப்படி புதிதாக அமைக்கப்பட்ட சாலை ஓரங்களிலும், ஏற்கெனவே இருந்து பட்டுப்போன மற்றும் புயல் வெள்ளத்தால் விழுந்துள்ள இடங்களில் புதிய மரங்களை நட்டு சுற்றுப்புறச் சூழலையும் மற்றும் போக்குவரத்திற்கு ஒரு குளுமையான சூழ்நிலையையும் ஏற்படுத்த சாலை ஓரங்களில் மரங்களை நட்டு பேணிப் பாதுகாத்திட நெடுஞ்சாலைத் துறை முழு முயற்சியுடன் ஈடுபட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 75-வது பிறந்த நாள் பவள விழாவை முன்னிட்டு, தமிழகம் முழுவதும் நெடுஞ்சாலைத் துறை மூலம் சாலை ஓரங்களில் 75,000 நிழல் தரும் மரக் கன்றுகளை நட்டு பேணிப் பாதுகாத்திட மாநிலம் முழுவதும் உள்ள கோட்டப் பொறியாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சாலை ஓரங்களில் உள்ள மிக அதிகமான காலி இடங்களில் ஒட்டுமொத்தமாக தோப்புகள் அமைத்திடும் வகையில் மரக்கன்றுகள் நடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறையில் தற்பொழுது உள்ள சாலைப் பணியாளர்கள் ஒவ்வொருவரும் ஐந்து மரக் கன்றுகளைத் தத்தெடுத்துப் பராமரிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

துறைமுகத்தைப்பற்றி நேற்று ஒன்றும் சொல்ல முடியவில்லை. தமிழ்நாடு கடல்சார் பயிற்சிப் பள்ளியை அமைக்க அரசாணை (நிலை) எண் 105, போக்குவரத்துத் துறை, நாள் 8-7-1997-ல் ஆணைகள் வழங்கப்பட்டன. கேப்டன் பி.ஆர்.கே. நாயர், சிறப்புப் பணிகள் திட்ட அறிக்கை தயார் செய்து அரசுக்குச் சமர்ப்பித்தார். திட்ட அறிக்கையின் அடிப்படையில் சங்கங்கள் சட்டம் 1975-ன்கீழ் சங்கம் ஒன்றினை அமைக்க ஒரு குழுவினை அரசாணை (நிலை) எண் 101, போக்குவரத்து, நாள் 20-5-1998-ல் அரசு அமைத்தது.

தமிழ்நாடு கடல்சார் பயிற்சிப் பள்ளியில் கடலோடி (Seamen) தீயணைப்புப் பணியாளர் (Firemen) மற்றும் பொது கப்பல் பணியாளர் (General Steward) ஆகிய பணிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இப்பணியாளர்களின் பயிற்சிக்காலம் 6 மாத காலமாகும். ஒவ்வொரு ஆண்டும் பயிற்சிக் காலத்தில் 60 நபர்கள் சேர்க்கப்பட உள்ளார்கள். ஆண்டொன்றிற்கு 120 பயிற்சியாளர்கள் பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பார்கள். இங்கு அளிக்கப்படும் பயிற்சி சர்வதேசத் தரம் வாய்ந்தது. இதனால் பயிற்சி முடிவுற்றவுடன் உள்நாட்டு, வெளிநாட்டுக் கப்பல்களில் உடனடியாக வேலை கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. இவர்களது ஊதியம் வெளிநாட்டு நாணயத்தில் (foreign currency) வழங்கப்படும். தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதில் தமிழ்நாடு கடல்சார் பயிற்சிப் பள்ளி தனது சீரிய பங்கினை ஆற்றும். இந்தியாவில் ஒரிசா, மும்பை ஆகிய இடங்களில் இத்தகைய நான்கு பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. இது ஐந்தாவதாகும். தமிழ்நாடு கடல்சார் பயிற்சிப் பள்ளிக்குத் தேவையான நிலம், கட்டடங்கள் மற்றும் கல்வி உபகரணங்கள் வாங்கவும், பயிற்சியாளர்களை நியமனம் செய்யவும் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய பள்ளிகள் ஒன்று தூத்துக்குடியிலும், மற்றொன்று கடலூரிலும் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்கு அனுமதியை அளித்து இருக்கிறார்கள்.

முற்பகல் 11-05

தனியார் துறைமுகங்கள் அமைத்தல்: தமிழ்நாடு கடல்சார் வாரியம் தனியார் துறைமுகங்களை அமைக்க (கேப்டிவ் போர்ட்ஸ்) தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. சென்னையை அடுத்த எண்ணூரில் திருவாளர்கள் EID பாரி நிறுவனம், திரவ அமோனியா இறக்குமதி செய்து நான்கு வழி நங்கூரமிட்ட மிதவை (Four Buoy Mooring) அமைத்துள்ளது. இங்கிருந்து குழாய் வழியாக திரவ அமோனியம் கப்பலில் இருந்து கரைக்கு எடுத்துச செல்லப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக இத்துறைமுகம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. கடலூர் துறைமுகத்திலிருந்து 13 கிலோ மீட்டர் தொலைவில் ஆழ்கடல் கச்சா எண்ணெய் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இக்கச்சா எண்ணெய் எடுக்கும் இடம் பி.ஒய். 3 சிறு துறைமுகம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு





எடுக்கப்படும் கச்சா எண்ணெய் சென்னை மணலியில் உள்ள சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கப்பல்கள் மூலம் கொண்டு வரப்படுகின்றது. இந்தத் தனியார் துறைமுகம் கடந்த ஓராண்டாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. தனியார் துறைமுகங்கள் அமைக்கும் பொறுப்பினையும் அதற்கான செலவினங்களையும் தனியார் நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது. இவ்விரண்டு துறைமுகங்களிலிருந்தும் சரக்குக் கட்டணம் மட்டும் வசூல் செய்யப்படுகிறது. இச்சரக்குக் கட்டணத்தின் மூலம் பல இலட்ச ரூபாய் வருமானம் தமிழ்நாடு, கடல்சார் வாரியத்திற்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்த வருமானம் வாரியத்திற்குத் தன்னிறைவை எட்ட (self-sufficiency) பெரிதும் துணை நிற்கிறது. இதைத் தவிர நாகப்பட்டினம் மாவட்டம் திருக்கடையூரில் திருவாளர்கள் பிள்ளைபெருமாள் நல்லூர் மின் உற்பத்தி நிலையமும், நாகப்பட்டினத்தில் திருவாளர்கள் சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் (எம். ஆர். எல்) தூத்துக்குடி மாவட்டம் மணப்பாட்டில் திருவாளர்கள் இந்திய வாயு நிறுவனமும் தனியார் சிறு துறைமுகங்கள் அமைக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளன. மேற்கண்ட 3 தனியார் சிறு துறைமுகங்களும் செயல்படத் தொடங்கினால் தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கு நிறைய வருவாய் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

அதைப்போல என்னுடைய தலைமையில் ஒரு குழு மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களுக்குச் சென்று அங்குள்ள கடல்சார் வாரியத்தின் செயல்பாட்டினை அறிந்து வந்தோம். குஜராத் மாநிலத்தில் ஆலங் என்ற துறைமுகத்தில் கப்பல் உடைக்கும் பணியை இக்குழு பார்வையிட்டது. அதன் அடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டம் வாலிநோக்கத்தில் கப்பல் உடைக்கும் சிறு துறைமுகத்தை விரிவுபடுத்தலாம் எனக் கருதப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்கள் கப்பல் உடைக்கும் தளத்தினை நிறுவ ஊக்கம் அளிக்கப்படும். தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகமும், தமிழ்நாடு கடல்சார் வாரியமும் இணைந்து கப்பல் உடைக்கும் தொழிலைச் சிறப்பாகச் செய்வதற்காகத் தக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. குஜராத் மாநிலத்திலுள்ள கப்பல் உடைக்கும் நிறுவனங்களின் சங்கம் வாலிநோக்கத்தில் கப்பல் உடைக்கும் பணியை மேற்கொள்ள ஆர்வம் காட்டியுள்ளது. தமிழ்நாடு கடல்சார் வாரியம் கப்பல் உடைக்கும் பணியினைத் தகுதி வாய்ந்த நிறுவனத்திடம் ஒப்படைக்க ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் செய்து, பெறப்பட்ட

விண்ணப்பங்கள் பல்லவன் போக்குவரத்துக் கழக ஆலோசனைக் குழுவினால் பணி ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு கடல்சார் வாரியம் இதன்மீது மேல் நடவடிக்கையைத் தொடங்க இருக்கிறது.

இறுதியாக கடலூர், செய்யூர், குளச்சல் ஆகிய இடங்களில் அனைத்து பருவகாலங்களிலும் இயங்கும் பெரிய துறைமுகங்கள் அமைப்பதற்கு (All Weather Ports) பொருளாதார தொழில் நுட்ப சாத்தியக்கூறுகள் (Techno-Economic Feasibility) பற்றி ஆய்வு நடத்தப்பட்டு திட்ட அறிக்கை பெறப்பட்டுள்ளது. (detailed project report). துறைமுகம் அமைக்கும் பணியினை ஒருங்கிணைத்து செயல்பட "டாசிட்" நிறுவனம் முகமை நிறுவனமாக (Nodal Agency) ஆகச் செயல்பட அரசு ஆணை வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் டாசிட் நிறுவனத்தின்கீழ் ஒரு துணைக் குழு அமைக்கப்பட்டு தனியார் முதலீடுகளைப் பெறவும், உலக அளவில் தரம் வாய்ந்த தனியார் நிறுவனங்களை தோணித்துறை (Jetty) கட்டவும், அதனை அடுத்து, அணைத்தட்டு அமைக்கவும், (Breaking Water) அணைத்தடுக்கு அமைக்கவும், சரக்குத் துறை அமைக்கவும் (Wharf) தூர்வாரும் பணியினை மேற்கொள்ளவும் (Dredging ports) பாரந்தூக்கி அமைக்கவும் (Installation of Cranes) தக்க வகையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்தப் பெரிய துறைமுகங்களில் தனியார் முதலீட்டுடன் அரசும் முதலீடு செய்யவும், இதனால் தொழில் உற்பத்தியைப் பெருக்கவும், ஏற்றுமதி வளர்ச்சி, வேலைவாய்ப்புகள் ஆகியவை ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன என்பதைத் தெரிவித்து என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, *(குறுக்கீடு)* 110-லே எந்தக் கேள்வியும், விவாதமும் கிடையாது. *(குறுக்கீடு)* இல்லை, இல்லை. *(குறுக்கீடு)* இதிலேயா? 110-லே எதுவும் கேட்க முடியாது.

**திரு. ஜி. பழனிசாமி:** துறைமுகத்தைப்பற்றி....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 110-இலே எதுவும் கேட்க முடியாது என்றால், அப்புறம் துறைமுகத்தைப்பற்றி எப்படி கேட்க முடியும்?





## 5. கவன ஈர்ப்பு

### (அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் பழுதடைந்த பாலங்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-இன்கீழ் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து திரு. கே.சி. கணேசன் அவர்கள் மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. கே.சி. கணேசன்.

*முற்பகல் 11-10*

***திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஜெயங்கொண்டம் தொகுதியில் தா. பழூர்-விளாங்குடி சாலையில் சுத்தமல்லி அருகில் காக்காபாளையம் ஓடையில் உள்ள பாலம், அதைப்போல, காரைக்குறிச்சி-திருப்புரந்தான் சாலையில் சுத்தமல்லி ஏரியின் வடிகால் வாய்க்கால்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அறிவிப்புக் கொடுத்தீர்களே, அதை அப்படியே படியுங்கள். அஜெண்டாவில் இருப்பதை அப்படியே படியுங்கள்.

**திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதி தா. பழூர்-விளாங்குடி சாலை, காரைக்குறிச்சி-திருப்புரந்தான் சாலை, இடங்கண்ணி-அன்னக்காரன்பேட்டை சாலை ஆகியவற்றில் உள்ள பாலங்கள் பழுதடைந்துள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

**(1) தா. பழூர்-விளாங்குடி சாலையில் சுத்தமல்லி அருகில் காக்காபாளையம் இடையில் உள்ள பாலம்**

தற்போதுள்ள இந்த மூழ்கு பாலம் கடந்த இரண்டு தடவைகளும் ஒவ்வொரு மழையின் போதும் பாலம் உடைப்பு ஏற்பட்டு, அவ்வப்போது தற்காலிக சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, போக்குவரத்து தடையில்லாமல் சரி செய்யப்பட்டது. இம்மூழ்கு பாலத்தில் தற்சமயம் 49 குழாய்கள் (இரண்டடி விட்டமுள்ள சிமெண்ட் குழாய்கள்) உள்ளன. மழை வெள்ளம் ஏற்படும் காலங்களில் இக்குழாய்களில் முட்செடிகள் அடைத்துக்கொள்வதால் தண்ணீர் பாலத்திற்கு மேல் சுமார் 1 மீட்டர் உயரத்திற்கு வழிந்து ஓடி குழாய்களில் உடைப்பு ஏற்படுத்தி ஒவ்வொரு சிறு மழையிலும் போக்குவரத்து பாதிப்படைகிறது. இப்பாலத்தின் மொத்த நீளம் 200 மீட்டர் ஆகும். இந்த நீளத்திற்கு தற்போது சுமார் 100 மீட்டர் நீளத்திற்கு மட்டுமே குழாய்கள் உள்ளன. பெருமழை ஏற்படும் காலங்களில் அடிக்கடி இதுபோன்று உடைப்பு ஏற்படுவதால் நிரந்தரத் தீர்வாக ஒரு மூழ்கு பாலம் (Submersible Bridge) கட்டப்பட வேண்டும். மூழ்கு பாலம் கட்டுவதற்குத் தோராயமாக ரூபாய் 300 இலட்சம் தேவைப்படும்.

**(2) காரைக்குறிச்சி-திருப்புரந்தான் சாலையில் சுத்தமல்லி ஏரியின் வடிகால் வாய்க்கால்**

இச்சாலையில் தற்சமயம் முன் வரிசை 900 மி.மீட்டர் விட்டமுள்ள சிமெண்ட் குழாய் தரைமட்ட பாலம் உள்ளது. வாய்க்காலின் அகலம் 30.00 மீட்டர் உள்ளது. ஒவ்வொரு மழைக்காலங்களிலும் மற்றும் அருகாமையிலுள்ள சுத்தமல்லி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விடும் நேரங்களிலும், முறையான வாய்க்கால் வடிகால் வசதியில்லாத காரணங்களினால், இந்தத் தரைமட்ட பாலத்தில் அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு போக்குவரத்து பாதிப்பு ஏற்படுகிறது. இதுபோன்று 1997-98-ஆம் ஆண்டில் மட்டும் மூன்று தடவைகள் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் சுத்தமல்லி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் செல்வதற்கு புதிதாக வாய்க்கால் வெட்ட இருப்பதால் நிரந்தரத் தீர்வாக சுத்தமல்லி நீர்த்தேக்கத்திலிருந்து திறந்து விடும் தண்ணீர் செல்வதற்கு ஏற்றவாறு 30 மீட்டர் நீளமுள்ள உயர்மட்ட பாலம் ஒன்று அவசியம் தேவைப்படுகிறது. இதற்காக ரூ. 60.00 இலட்சங்கள் தேவைப்படும்.





**(3) இடங்கண்ணி-அன்னக்காரன்பேட்டை சாலையில் வெட்டாறு ஓடை பாலம் உடைந்து பாழ்பட்டு போக்குவரத்து நடைபெற முடியாத நிலை குறித்து**

இச்சாலையில் 900 மி.மீ விட்டமுள்ள 5 வரிசை கொண்ட சிமெண்ட் குழாய்களுடைய (7.50 மீட்டர் அகலத்திற்கு) சிறு பாலம் உள்ளது. இதன் கைப்பிடிச் சுவர்கள் உடைந்துள்ளன. இப்பாலம் அமைந்துள்ள வாய்க்கால் 30.00 மீட்டர் அகலம் உடையதாக இருப்பதால் மழைக்காலங்களில் மூன்று மாதங்களுக்கு மேல் பாலத்தின் மேல் ஒரு மீட்டர் உயரத்திற்குத் தண்ணீர் வழிந்தோடுகிறது. இதனால் போக்குவரத்துத் தடை ஏற்பட்டு இரண்டு மாதங்கள் வரை எவ்வித தொடர்பும் இல்லாத நிலை உண்டாகிறது. எனவே, இப்போதுள்ள குழாய்களையும் சேர்த்து மொத்தம் 20 வரிசைகள் (புதிய வரிசை 15 மட்டும்) 7.50 மீட்டர் அகலத்திற்கு ஒரு மூழ்கு பாலம் (Submersible Bridge) அமைக்கப்பட வேண்டும். இதற்குத் தோராயமாக ரூ.15.00 இலட்சம் தேவைப்படும்.

இம்மூன்று பாலப் பணிகளும் ஒப்புதலளிக்கப்பட்டுள்ள திட்டங்கள் எதிலும் இடம் பெறவில்லை. ஒட்டுமொத்தமாக இப்பணிகளுக்குத் தோராயமாக ரூ. 375.00 இலட்சம் அளவில் பெருந்தொகை தேவைப்படுவதால் அரசின் நிதி நெருக்கடி காரணமாக இப்பணிகளை அண்மைக்காலங்களில் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

**திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் விவர அறிக்கையைப் படித்தேன். அதில் கொடுக்கப்பட்டுள்ளது, தா. பழூர்-விளாங்குடி சாலையில் சுத்தமல்லி அருகில் காக்காப்பாளையம் ஓடையில் உள்ள பாலம், அதுபோல இரண்டாவது, காரைக்குறிச்சி-திருப்புரந்தான் சாலையில் சுத்தமல்லி ஏரியின் வடிகால் வாய்க்கால் பாலம், அதுபோல, இடங்கண்ணி-அன்னக்காரன்பேட்டை சாலையில் வெட்டாறு ஓடை பாலம். இது உடைந்து பாழ்பட்டு போக்குவரத்து நடைபெற முடியாத நிலையில் இருக்கிறது. இந்த மூன்று பாலங்களும் ஜெயங்கொண்டம் தொகுதியில் தா. பழூர் ஒன்றியத்தில் இருக்கின்ற 33 ஊராட்சிகளையும் இணைக்கின்ற சாலையில் உள்ளன. இந்தப்பாதை வழியாகத்தான் என்னுடைய ஒன்றியத்திற்குப் பேருந்துகள் ஓடுகின்றன. 10 பேருந்துகளுக்கு மேல் ஓடுகின்றன. இப்போது, அன்னக்காரன் பேட்டை சாலையில் 8 மாதங்களாக பேருந்தே ஓடவில்லை.

ஓடிக்கொண்டிருந்த பேருந்து, ஒரு தொகுதியில், ஒரு ஒன்றியத்தில் 8 மாதங்களாக ஓடவில்லை.

அதைப்போல, காக்காபாளையம் ஓடையிலும், திருப்புரந்தான் சாலையிலும் மழைக்காலங்களில் மூன்று மாதங்களாக பேருந்து ஓடாமலேயே இருந்தது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த விவர அறிக்கையிலே ஒரு கேள்விதான் நீங்கள் கேட்க முடியும். கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. கே.சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று பாலங்களையும் கட்டினால்தான் போக்குவரத்தே நடைபெறக்கூடிய நிலையிருக்கிறது. ஆகவே, இந்த மூன்று பாலங்களையும் உடனடியாக, நிரந்தரமாகக் கட்டித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் இந்த மூன்று பாலங்கள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். அதிலே, தா. பழூர்-விளாங்குடி சாலையில் சுத்தமல்லி அருகில் காக்காபாளையம் ஓடையில் பழுதடைந்து உள்ள பாலம் கட்ட 300 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அதைப்போல, காரைக்குறிச்சி-திருப்புரந்தான் சாலையில் சுத்தமல்லி ஏரியின் வடிகால் வாய்க்கால் பாலம், அதைக் கட்டுவதற்கு 60 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அதைப்போல, இடங்கண்ணி-அன்னக்காரன்பேட்டை சாலையில் வெட்டாறு ஓடை பாலம் கட்டுவதற்கு கிட்டத்தட்ட 15 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆக மொத்தம் தோராயமாக 375 இலட்சம் ரூபாய் என்ற இந்தப் பெரும் தொகை தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருப்பதைப்போல பல மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர் தொகுதிகளில ஏராளமான பாலங்கள் கேட்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் மனதிலே வைத்துத்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் Nabard திட்டம், Hudco திட்டம், அதுபோல, நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், உலக வங்கித் திட்டம், (Asian Development Bank) திட்டம், இப்படிப் பல்வேறு வகையில், எந்தெந்த வகையில் எல்லாம் பணம் கிடைக்கிறதோ அவற்றையெல்லாம் பெற்று,





இந்த ஓராண்டிலே மட்டும் 106 பாலங்கள் கட்டுவதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். இதிலேகூட, நான் சொல்லப் போகின்ற 5 பாலங்கள், எந்தத் தொகுதியில் வருகிறதென்று நான் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. ஜெயங்கொண்டத்தில் வருகிறதோ இல்லையோ. ஆனால், பெரம்பலூர் மாவட்டத்திலே கொளக்காநத்தம், கொளத்தூர் சாலையில் ஒரு உயர்மட்டப் பாலம், அதற்கு 100 இலட்சம் ரூபாய், ஆலத்தூர்கேட் கொளக்காநத்தம் சாலையில் 10/10 கிலோ மீட்டரில் ஒரு உயர்மட்டப் பாலம், அதற்கு 125 இலட்சம், அடுத்து ஆலத்தூர்கேட் கொளக்காநத்தம் சாலையில் 11/2 கிலோ மீட்டரில் ஒரு உயர்மட்டப் பாலம், அதற்கு 125 இலட்சம் ரூபாய் அதைப்போல, கிருஷ்ணாபுரம், பூலாம்பாடி சாலையில் ஒரு உயர்மட்டப் பாலம், அதற்கு 117 இலட்சம் ரூபாய் என்று இந்த நான்கு பாலங்கள் நபார்ட் திட்டத்திலே வருகின்றன.

Hudco திட்டத்தில் கீழப்பழுவூர் திருமழப்பாடி சாலையில் உயர்மட்டப்பாலம், 347 இலட்சம். ஆக ஒரு மாவட்டத்திலே மட்டும் பல கோடி ரூபாய்க்கு 5 பாலங்கள் இந்த ஓராண்டில் அமைப்பதற்கு நம்முடைய முதல்வர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே இந்தப் பாலங்கள் வருகின்றதா என்று எனக்குத் தெரியாது. இருந்தாலும், அந்த மாவட்டத்திற்கு இத்தனை பாலங்கள் வழங்கப்படுகின்றன. என்னுடைய மாவட்டத்திற்கு ஒரே ஒரு பாலத்தைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள். ஆகவே வருங்காலங்களில் நிதியாதாரத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிற அந்தப் பாலங்களை எடுத்துச் செய்வதற்கான முயற்சியில் அரசு ஈடுபடும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

### (ஆ) முடநீக்குக் கருவிகள் உடல் ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்க 1997-98 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் சரண்டர் செய்யப்பட்ட நிலை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "முடநீக்குக் கருவிகள் உடல் ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்க 1997-98 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் Surrender செய்யப்பட்ட நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

''மேற்கண்ட கவன ஈர்ப்பு அறிக்கையில் உடல் ஊனமுற்றவர்களுக்கான முடநீக்குக் கருவிகள் (Calipers, Crutches and Artificial Limbs) இலவசமாக வழங்க 1997-98 ஆம் ஆண்டுக்கான ரூ.63 இலட்சம் அரசு நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டு தொகை ரூ. 64 லட்சம் ஆகும். அதில் 47.41 லட்சம் முடநீக்குக் கருவிகள் வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் ரூ. 17.40 லட்சம் செயற்கை அவயங்கள் உற்பத்தி செய்வதற்கான ஒதுக்கீடு ஆகும்.

### 47.41 லட்சம் நிதி ஒதுக்கீட்டிற்கான விவரங்கள்

அரசு உடல் ஊனமுற்றோருக்கான முடநீக்குக் கருவிகள் இலவசமாக வழங்க 1998 ஆம் ஆண்டிற்கான நிதியாக ரூ.47.41 லட்சம் செலவினம் மேற்கொள்ள அரசாணை நிலை எண் 198, சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 11-6-1997-ன்படி வழங்கியது. இதன்படி 1-8-1997 அன்று திறந்தவெளி ஒப்பந்த புள்ளிகள் பத்திரிகையின் மூலம் விளம்பரப்படுத்தி வரவேற்கப்பட்டன. இதுகாறும் இத்துறை 7 நிதியாண்டுகளில் கை கால், ஊனமுற்றோரைக் கண்டறிந்து, அவர்களுக்கு உபகரணங்கள் வழங்கி உள்ளது. இந்த 7 நிதியாண்டுகளிலும், 25 லட்சத்திற்கும் அதிகமாக பொருட்கள் வழங்கப்பட்டு இருப்பினும், வரையறுக்கப்பட்ட விலைப்புள்ளிகளே பெறப்பட்டன. இந்த வரையறுக்கப்பட்ட விலைப்புள்ளிகள் மத்திய அரசின் சுகாதாரத் துறையின்கீழ் இயங்கும் ஐ.டி.பி.எல். மற்றும் நலத்துறையின்கீழ்





இயங்கும் அலிம்கோ ஆகிய நிறுவனங்களிடமிருந்து மட்டுமே பெறப்பட்டன.

சென்ற நிதியாண்டிற்கான திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிகள் மாதிரிகளுடன் கோரப்பட்டது. இதில், இதுகாறும் விநியோகம் செய்திருந்த மத்திய அரசு நிறுவனங்கள் மாதிரிகளைக் கொண்டு தரம் நிர்ணயம் செய்தால் அது [illegible]மாக அமையும் எனக் கருதி தரம் நிர்ணயம் செய்யப்[illegible]மல் விலைப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. ஒப்பந்தப் புள்ளிக[illegible] பெறப்படும் மாதிரிகளை வைத்தும், தொடர்சேவை தரும் நி[illegible] வைத்தும் தரத்தினை முடிவு செய்யலாம் என முடிவெடுக்கப்பட்டது. 2500 கால்தாங்கிகள் மற்றும் 1193 ஊன்றுகோல்களைத் தயாரித்து அளிப்பதற்காக விலைப் புள்ளிகளை 8 நிறுவனங்கள் அளித்திருந்தன. அதில் மாதிரிகளை 3 நிறுவனங்கள் மட்டுமே சமர்ப்பித்தன. அவை பரிசீலிக்கப்பட்டன. அவை கீழ்வருமாறு:

| நிறுவனத்தின் பெயர் | குறித்த [illegible] (ரூபாய்) | |
|---|---|---|
| | கால்தாங்கி | ஊன்றுகோல் |
| அலிம்கோ | 1470/- | 210/- |
| ஐ.டி.பி.எல். | 900/- | 213/- |
| சிட்கோ | 910/- | 187/- |

இவற்றின் மாதிரிகளை ஆராயக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு, அலிம்கோ மாதிரியின் தரம் முதலானது எனவும், ஐ.டி.பி.எல். மாதிரியின் தரம் இரண்டாவது எனவும் சிட்கோ மூலம் விண்ணப்பித்த மோகனா ஆர்த்தோடிக்ஸின் தரம் மூன்றாவது எனவும் நிர்ணயித்தது. மேலும் தொடர் சேவை செய்யத் திறனுள்ளதாக மாவட்டந்தோறும் முகவர் அமைப்புகள் உடைய அலிம்கோ நிறுவனத்தை ஏற்க பரிந்துரைக்கப்பட்டது ஐ.டி.பி.எல். முகவர் கிளைகள் இல்லாதது எனவும், சிட்கோ மூலம் விண்ணப்பித்த மோகனா ஆர்த்தோடிக்ஸ் ஈரோடு, திருச்சி ஆகிய இடங்களில் மட்டுமே சேவை மையங்கள் உடையது என்றும் அறியப்பட்டது. கால்தாங்கிகளுக்குக் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஐ.டி.பி.எல். நிறுவனம் 1996-97-ஆம் ஆண்டிற்கான விநியோக உத்தரவின்படி 3/96-ல் 3738 கால்தாங்கிகள் மற்றும் 1365 ஊன்றுகோல்கள் அளித்திட உத்தரவு பெற்றிருந்தும் இன்றுவரை வழங்காமலேயே உள்ளது.

மேலும் நிர்வாகச் சிக்கல்களுக்கிடையே உள்ள அந்நிறுவனம் தற்போது உத்தரவு வழங்கினாலும், தடையின்றிப் பொருட்களை வழங்கிடுமா என்ற ஐயத்தின் காரணமாகவும் 1995ஆம் வருடம் மத்திய அரசிடமிருந்து ரூ. 50 லட்சம் தொகை பெற்று அதற்குரிய உதவி உபகரணங்களை ஊனமுற்றோருக்குச் சரிவர வழங்காததாலும், மத்திய அரசிற்கு அதனை திருப்பிச் செலுத்தாததாலும் அந்நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளிகளை ஏற்க இயலவில்லை.

தரம் ஆய்வு செய்த குழு, மூன்றாவதாக குறிப்பிட்ட சிட்கோ நிறுவனத்தின் விலை குறைவாக இருப்பினும், தரத்தின் அடிப்படையில் விலை உயர்ந்த அலிம்கோ பொருளையே வாங்கலாம் எனப் பரிந்துரை செய்தது. அரசுச் செயலரும், மாவட்டந்தோறும் தொடர் சேவை செய்ய முகவர் அமைப்புகள் கொண்டிருப்பதாலும், தரம் குறித்து தெளிவாக இருந்ததாலும், விலை அதிகமிருப்பினும் அலிம்கோ நிறுவனத்திடமிருந்தே வாங்கலாம் என்றும் இது குறித்து அரசுக்குக் கடிதம் எழுதித் தெரிவித்தால் போதும் என அறிவுரை வழங்கினார். இவ்விவரம் மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டதன்பேரில் நேரில் தெரிவிக்கப்பட்டது. அமைச்சர் அவர்கள், மற்றொரு குழுவினரைக் கொண்டு தரம் ஆராயலாம் எனவும் மண்டல புனர்வாழ்வு பயிற்சி மைய இயக்குனரை அணுகுமாறும் நேரில் அறிவுரை வழங்கினார். அன்றைய தினமே (21-10-1997) மண்டல புனர்வாழ்வு பயிற்சி மைய இயக்குனர் அணுகப்பட்டார். அவர்தம் கடிதம் எண் 5208/எச் எஸ்/97 நாள் 22-10-1997 மூலம் மாதிரிகளின் பல்வேறு பகுதிகள் வேறுபட்டிருப்பினும், உபயோகிப்போரைக் கருத்தில் கொண்டு பார்க்கையில் இரண்டும் ஒத்திருப்பதாகக் கருத்து அளித்துள்ளார். எனவே, இருவேறு கருத்துக்கள் தரம் குறித்து தெரிவிக்கப்பட்டிருப்பதால் எந்த உற்பத்தியாளரை தேர்ந்தெடுக்கலாம் என அரசிடம் 4-11-1997 ஆம் தேதிய கடிதத்தின் மூலம் கோரப்பட்டது. அரசு செயலர் அது இயக்குநரின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது என 23208/ச.ந.4, நாள் 17-11-1997 ஆம் தேதிய கடிதத்தின்படி தெரிவித்தார். இத்தரம் குறித்து, இருவேறு கருத்துக்கள், மற்றும் விலையில் மிகப் பெரிய வேறுபாடும் இருந்ததால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர 24-11-1997 அன்று முடிவெடுக்கப்பட்டது. ஆனால் அரசுச் செயலர் அம்முடிவை ஏற்பதற்கில்லை எனவும், விநியோக ஆணையை, ஒரு நிறுவனத்தை தேர்ந்து வழங்கிடுமாறும் 25055/ச.ந.4/97-1, நாள் 10-12-1997 தேதிய கடிதத்தில் வலியுறுத்தியதால்,



மீண்டும் அரசிடம் எந்த நிறுவனத்திற்கு ஆணை வழங்குவதெனக் கோரி 11-12-1997 ஆம் தேதிய கடிதத்தின் மூலம் அணுகப்பட்டது.

அரசுச் செயலாளர், முதலாவதாக அமைக்கப்பட்ட குழுவின் கருத்துக்கள், முந்தைய ஆண்டுகளில் விநியோகத்தமைக்கான விலை விவரங்கள், ஐ.டி.பி.எல். நிறுவனத்தில் விலைப்புள்ளி உள்ளிட்ட விவரங்களை கோரினார். அதன் பின்பு ஆராய்ந்து 26-3-1998-ல் மறு விலைப்புள்ளி கோர அரசுக் கடிதம் 25055/ச.ந.4/97 நாள் 26-3-1998-ன்படி அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி பத்திரிகைகளில் விளம்பரம் செய்து மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

மேலும் ஒதுக்கீடும் சரண்டர் செய்யப்படவில்லை. அரசு ஆணையின்படி தமிழ்நாடு நிதி தொகுப்பு 2 உட்கூறு 99-ன்படி ஒதுக்கீடு முன்பணமாகப பெறப்பட்டுள்ளது. இன்னும் 15 நாட்களுக்குள் விநியோக உற்பத்தி ஆணை வழங்கப்பட்டு 6 மாதத்திற்குள் ஊனமுற்றோருக்கு கருவிகள் வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**17.40 லட்சம் நிதி ஒதுக்கீட்டிற்கான விவரங்கள்:**

அரசாணை எண் 180, சமூகநலம் மற்றும சத்துணவுத்திட்டத் துறை, நாள் 27-5-1997-ன்படி தமிழக அரசு 29 மாவட்டங்களிலும் செங்கற்பட்டில் செயல்பட்டு வரும் மாவட்ட மறுவாழ்வு மையம் போன்று அனைத்து மாவட்டங்களிலும் ஊனமுற்றோருக்காக செயல்பட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1997-98ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு செய்ததையொட்டி இவ்வாணை வழங்கப்பட்டது.

இம்மையங்களின் வாயிலாக, கிராமப்புறங்களிலுள்ள ஊனமுற்றோரைக் கண்டறிந்து அவர்களின் ஊனத்தின் தன்மைக்கேற்ப மருத்துவ சிகிச்சை அளிக்கவும், அவர்களுக்குத் தேவையான உதவிக் கருவிகளை வழங்கிடவும இதற்கான பயிற்சிகளுடன் ஏனைய மறுவாழ்வுத் திட்ட உதவிகளை சீரிய முறையில் செயல்படுத்தவும் இம்மையங்கள் பயன்படும். இங்கு

1. உடற்பயிற்சி மருத்துவ நிலையம்
2. கேட்டல் மற்றும் பேச்சு மருத்துவ நிலையம்
3. பணிமனைக் கருவிகள் நிலையம்

ஆகிய மூன்று நிலையங்கள் 1997-98 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நிறுவப்பட்டுள்ளது.

இந்த மூன்று நிலையங்களில் பணியமைக் கருவிகள் நிலையத்தின்கீழ் செயற்கை அவயவங்கள் உற்பத்தி செலவிற்காக மையம் ஒன்றுக்கு ரூ. 2000/- வீதம் 30 அவயவங்கள் செய்ய 29 மையங்களுக்கு ரூ. 17.40 இலட்சங்கள் மட்டும் (2000×30×29) அரசாணை எண் 180, நாள் 27-5-1998-ல் தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.

மேற்கண்ட செயற்கை அவயவங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் செய்வதற்குத் தேவையான உபகரணங்களும் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்கண்ட உபகரணங்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் நிதியாண்டின் (மார்ச் 1998) இறுதியிலேயே கிடைக்கப் பெற்றது. இந்நிலையில் அதே நிதியாண்டில் தமிழக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ. 2.00 இலட்சத்திற்கு 118 பயனாளிகளுக்கு செயற்கை அவயவங்கள் பொருத்தவும் அரசாணை கிடைக்கப் பெற்றிருந்தது. அரசாணை (நிலை) எண் 155, சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை, நாள் 6-5-1998 மற்றும் அரசாணை (நிலை) எண் 83, சமூகநலம் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை, நாள் (13-5-1998) அனைத்து மாவட்டங்களுக்கும் உபகரணங்கள் உரிய காலத்தில் கிடைக்காததாலும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து செயற்கை அவயவங்கள் வழங்க தொகை கிடைக்கப் பெற்றதாலும் ஒரே ஆண்டில் ஒரே செயலுக்கு இரண்டு ஆணைகளை நடைமுறைப்படுத்த தேவையில்லை என்ற காரணத்தினாலும ரூ. 17.40 இலட்சம் தொகை சரண் செய்யப்பட்டது.

நடப்பு நிதியாண்டிற்கு (1998-99) ரூ. 17.40 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர் திட்டமாதலால் ஒவ்வொரு ஆண்டும் இதே தொகை கிடைக்கப்பெறும்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா அவர்களே, கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையினைப் படித்தேன். அதில் சில தவறான தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன. உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்பதற்காக நமது அரசு கடந்த ஆண்டு 64 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, Crutches, Calipers வாங்குவதற்கு அனுமதித்தது. ஆனால், அந்தப் பணம் முழுமையாகச் செலவு செய்யப்படாமல் அரசுக்கு திரும்பி சரண்டர் செய்யப்பட்டுவிட்டது. இதிலே, அலிம்கோ,



ஐ.டி.பி.எல்., சிட்கோ இவைகளிடமிருந்து ஓபன் டெண்டர்கள் கோரப்பட்டிருக்கின்றன. அலிம்கோ 1,470 ரூபாய்க்கும், ஐ.டி.பி.எல். 900 ரூபாய்க்கும், சிட்கோ 910 ரூபாய்க்கும் கொடுத்திருக்கிறார்கள். இதிலே, ஐ.டி.பி.எல் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒப்பந்தம் பெற்ற பிறகும் பொருட்களை வழங்காத காரணத்தால் அலிம்கோ மற்றும் சிட்கோ ஆகியவற்றை மட்டும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலையில் தரம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று சொல்லி அலிம்கோ, சிட்கோ ஆகியவைகளுக்குத்தான் அனுப்பியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அறிக்கையிலே இருப்பதைப் படித்துவிட்டு அதுசம்பந்தமான கேள்வியைத்தான் கேட்க வேண்டும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதிலேதான் பேசுகிறேன். இதிலே, தரம் நிர்ணயிக்கப்பட்டு அனுப்பப்பட்டது அலிம்கோ, சிட்கோ ஆகியவைக்குத்தான். ஆனால், மூன்று நிறுவனங்களிடம் கேட்டிருப்பதாகச் சொல்லி தகவல் தந்திருக்கிறார்கள். அது சரியாகத் தென்படவில்லை. அதிலே, சிட்கோ-வினுடைய விலை 910 ரூபாய் என்று இருப்பதை, நீங்கள் குறைந்த விலைக்குத் தருவதாக இருந்தால் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அவர்கள் 899 ரூபாய்க்குத் தருகிறோம் என்று சொன்ன பிறகும், அவர்களிடமிருந்து அதை வாங்காமல், அலிம்கோ-வினுடைய தொகை 1,470 ரூபாய், அதாவது கிட்டத்தட்ட 560 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. இவர்களுக்கு வழங்கலாம் என்று சொன்ன பிறகும், வாங்க முடியுமா என்றும் கேட்டிருக்கிறீர்கள். அதற்கான ஆவணங்கள் என்னிடம் இருக்கின்றன. வழங்கலாம் என்று சொன்ன பிறகும், அதற்கான உத்தரவைக் கொடுக்காத காரணத்தாலே தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட 7,000 பேர், உடல் ஊனமுற்றவர்கள் பயன்படுத்த வேண்டிய உதவிச் சாதனங்கள் கடந்த ஆண்டு கிடைக்காமல் போய்விட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டு, வாங்க வேண்டும் என்று சொன்னாலும், அதிகாரிகளுடைய தன்னிச்சைப்போக்கின் காரணமாக இந்த 17 இலட்சம் ரூபாயை சரண்டர் செய்திருக்கிறார்கள். அப்படி உடல் ஊனமுற்றோருக்கு, அந்த மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளைத் தடுத்து நிறுத்திய அதிகாரிகள்மீது, இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விலைப்புள்ளிகள் மூன்று நிறுவனங்களிடமிருந்துதான் பெறப்பட்டிருக்கின்றன. அதில், ஐ.டி.பி.எல். கடந்த ஆட்சிக் காலத்திலேயும், கடந்த ஆண்டிலேயும் வழங்கப்பட்ட அந்த உத்தரவுக்கு உரிய பொருட்களை வழங்காமல் காலதாமதப்படுத்திவிட்டது. மத்திய அரசாங்கத்திடமிருந்து 1995 ஆம் ஆண்டு 50 இலட்சம் ரூபாயைப் பெற்றிருந்தும்கூட, அதற்குரிய பொருட்களை வழங்காமல் நிறுத்தி வைத்தது மட்டுமல்லாமல், அந்தத் தொகையையும் மத்திய அரசுக்குத் திருப்பித் தராமல் இருந்துவிட்டார்கள். எனவே, அவர்களை நம்பி இந்தப் பொருட்களை வாங்க அனுமதி வழங்கக்கூடாது என்று முடிவு எடுக்கப்பட்டது. அலிம்கோ, சிட்கோ இந்த இரண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் வழங்கிய விலைப்புள்ளிகளில், விலைப்புள்ளியினுடைய வித்தியாசம் அதிகப்படியாக இருந்த காரணத்தால் அதனுடைய தரம் எவ்வாறு உள்ளது என்பதை அறிந்துகொள்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவினுடைய முடிவின்படி, அவர்களின் தரம் வேறுபாடாக இருக்கின்றது என்பதை அறிவித்திருந்தாலும், அதை அவர்களுக்கு வழங்குவதற்கு உண்டான உரிய முடிவினை எடுக்கலாம் என்று அரசுக்கு அந்தக் குழு தெரிவித்திருந்தது. விலை வேறுபாடு இருந்த காரணத்தால் அரசுக்கு இதிலே நஷ்டம் வரும் என்று கருதி மறு ஒப்பந்தப்புள்ளி கோரும்படி பணிக்கப்பட்டுள்ளது. மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இன்னும் 15 நாட்களுக்குள் அந்த விநியோக உரிமை அவர்களுக்கு வழங்கப்பட்டு, இந்த ஆண்டு, உதவி கோரிய ஊனமுற்றோர் அனைவருக்கும் அந்த உதவித் தொகை வழங்கப்படும்

முற்பகல் 11-20

17.40 லட்ச ரூபாய் மீண்டும் அரசுக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பதன் காரணத்தை உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். விவர அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் செயற்கை அவயங்களை செய்வதற்கான மறுவாழ்வு மையங்கள் தமிழக அரசின் முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களால் இந்த ஆண்டு தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதன் மூலமாக 17.40 இலட்ச ரூபாய் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 30 பேருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற அளவில் தந்திருக்கிறார்கள். அதே காரணத்திற்காகத்தான் இந்தத்



தொகை துறையின் சார்பாக வழங்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இரண்டும் ஒரே பொருளைக் கருதி வழங்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் அந்த 17.40 இலட்ச ரூபாய் மீண்டும் அரசுக்கு துறையால் திருப்பி வழங்கப்பட்டிருக்கிறது. இது தொடர் செலவினம் என்ற காரணத்தால் இந்த ஆண்டு துறையின் சார்பாக இதற்கான தொகையை அரசிடமிருந்து பெற்று வழங்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஒரு கேள்வி கேட்டாகிவிட்டது. ஒரு கேள்விதான் அனுமதிக்க முடியும்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இங்கே மிகத் தெளிவாகக் கேட்டுக்கொள்வது கழிந்த ஆண்டு இந்த 17.40 இலட்ச ரூபாயை மக்களுக்கு பயன்பட வேண்டுமென்று அரசு திட்டம் போட்டு ஒதுக்கிய பிறகு, அந்தப் பொருளினுடைய விலை 500 ரூபாயாக, அலிம்கோ நிறுவனத்தின் விலையைவிடக் குறைவாக இருந்தபோதும், தரம் சரியாக இருக்கிறது என்று அறிந்த பிறகும், அவர்களிடம் பொருள்களை வாங்கி ஏழையெளிய, பாதிக்கப்பட்ட, உடல் ஊனமுற்றவர்களுக்கு வழங்காமல் அதை உதாசீனப்படுத்திய அதிகாரிகள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்? இப்படி ஒவ்வொருவரும் பணத்தை சரண்டர் செய்துவிட்டால் அரசினுடைய திட்டம் எப்படி நடைபெறும்?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிட்கோ மூலமாக வழங்க அவர்கள் குறிப்பிட்ட அந்தத் தொகை குறைவானதாக இருந்தாலும், விசாரித்தபோது அவர்களுக்கு சேவை மையங்கள் இரண்டு இடங்களிலேதான் இருக்கின்றன என்பது தெரிய வந்தது. இந்தப் பொருள்களை உபயோகப்படுத்துகின்றவர்கள் அதைப் பழுது பார்க்க விரும்பினால், அனைத்து மாவட்டங்களிலும் இந்த வசதி

போதுமானதாக இல்லை. அலிம்கோ நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் எல்லா இடங்களிலும் சேவை மையங்களை வைத்திருக்கின்ற காரணத்தால் அது பயன்படும் என்று அரசின் தரப்பில் சொல்லப்பட்டது. இருந்தாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

# 6. அறிக்கைகள் அளித்தல்

## (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் பன்னிரெண்டாவது முதல் பதினைந்தாவது வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன். போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் இவ்வறிக்கைகளை அச்சடித்து அளிக்க இயலவில்லை. அறிக்கைகளின் படிப்பெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்த உடன் உறுப்பினர்களுக்கு தனித்தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர், திரு. கே. ஆர். இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று பதினைந்தாவது முதல் நூற்று இருப்பத்தி மூன்றாவது வரையிலான 9 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.





## (இ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர், திரு. சி.டி. தண்டபாணி.

**திரு. சி.டி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி ஒன்பதாவது முதல் அறுபத்தி மூன்றாவது வரையிலான 5 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## (ஈ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர், திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1997-98 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

# 7. அறிவிப்பு

## (அ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1998 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

[1998 மே 28

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.



1998 மே 28]

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் பற்றிய சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (எ) தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *1998* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ((முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*1998* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.





**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஏ) தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *1998* ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"*1998* ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஐ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *1998* ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (எ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஏ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1998 மே 28

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1998), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1998) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

என்க் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் தொடங்குகிறது. . . .



## 3. தகவல் கோரல்--தொடர்ச்சி

### (ஆ) சட்டமுன்வடிவுகளை ஆய்வுசெய்யும்முன் அதுபற்றி அறிந்துகொள்ள உறுப்பினர்களுக்குப் போதிய அவகாசம் அளித்தல்

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, point of privilege.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன point of privilege. சொல்லுங்கள்

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I am standing on a point of privilege. கடந்த 2 நாட்களிலே அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிற சட்டமுன்வடிவுகளைப் பார்த்தால், உண்மையிலேயே தலை சுற்றல்தான் ஏற்படுகிறது. என் கையிலே இருக்கக்கூடிய காகிதங்கள், இந்தக் கூட்டத் தொடரில், நேற்றும், இன்றும் அல்லது சில தினங்களுக்கு முன்பாக அறிமுகப்படுத்தப்பட்ட சட்டமுன்வடிவுகள். நான் கடந்த மாதமே, பேரவைத் தலைவர் அவர்களுடைய அறையிலே, பேரவைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு இரண்டு முறை இது குறித்துக் கொண்டு வந்தேன். முதலமைச்சர் அவர்களிடத்திலேயும் சொன்னேன். சட்டமன்றத்திலே பிரதானமான பணி, சட்டங்கள் இயற்றுதல்; அந்தச் சட்டங்களிலே திருத்தம் கொண்டு வருதல். சட்டங்களில் திருத்தமோ அல்லது புதிய சட்டமோ கொண்டு வரும்போது, உறுப்பினர்கள் அதைப் படித்துப் பார்த்து, அதில் கவனம் செலுத்தி, பேரவையிலே விவாதத்தில் கலந்து கொண்டு, தங்களுடைய கருத்துக்களை உரிய முறையில் பரிமாற்றம் செய்து, அதற்குப் பிறகு அந்தச் சட்டத்திற்கு ஒரு வடிவம் கொடுப்பதுதான் முறையாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

I won't call it a breach of privilege. But I feel that members are being deprived of their legitimate privilege of having sufficient time to go into the details of the Bills before participating in the debate. ஆகவே, இதுவரையிலே சென்றது, சென்றதாக இருக்கட்டும். இனிமேல் வருங்காலங்களிலாவது, சட்டமுன்வடிவுகளைப் பேரவையில் அறிமுகம் செய்யும்போது, குறிப்பிட்ட கால அவகாசம் கொடுத்து, ஏராளமான கால அவகாசம் கொடுத்து செய்ய வேண்டும். உதாரணமாக, ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், இப்போது இலவச மின்சாரத்தை ரத்து செய்யக்கூடிய ஒரு சட்டத்தை, மத்தியில்

கொண்டு வருவதாக இருக்கிறார்கள். அதை ஒரு குறிப்பிட்ட கால அவகாசத்திற்கு முன்பாகக் கொண்டு வந்த காரணத்தினால்தான், நம்முடைய கருத்துக்களை, நம்முடைய மக்களுடைய கருத்துக்களை அங்கே எடுத்துச் சொல்லி, அந்தச் சட்டத்தை நிறைவேற்றலாமா, வேண்டாமா என்றுகூட நாம் அதில் முடிவு செய்ய முடிகிறது. அதைப்போல, இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய பல சட்டங்களில் கருத்து வேறுபாடுகள் இல்லாமல், சில திருத்தங்கள் மட்டும் தந்து, அவற்றை நிறைவேற்றுவதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. ஆனால், குறிப்பாக, தீவிரவாத தடுப்புச் சட்டத்தைப்பற்றிச் சொல்வோமேயானால், அதில் சில கருத்து வேறுபாடுகள் எல்லாம் இருக்கின்றன. அதுபோன்று இருக்கக்கூடிய சட்டங்களை விவாதிப்பதற்குத் தேவையான கால அவகாசம் வேண்டும் என்பதைக் கருத்திலே கொண்டு, நாளை ஒருநாளில் கண்டிப்பாக அத்தனைச் சட்டமுன்வடிவுகளையும் நல்ல முறையிலே விவாதித்து நிறைவேற்ற முடியாது என்ற கருத்தை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் பேரவை உறுப்பினர்களுடைய கவனத்திற்கும், நான் பணிவோடு கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக, சட்டப் பேரவையில் கேள்வி நேரம் என்பது 9½ மணிக்குத் தொடங்கி 10½ மணிக்கு முடிவுற்று, அதற்குப்பிறகு, முக்கியமான மசோதாக்கள் அல்லது முக்கியமான மானியங்கள் என்று எடுத்து, விவாதிப்பதுதான் முறை. இடையில், கவன ஈர்ப்பு அல்லது ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற பெயரால், இரண்டொரு உறுப்பினர்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்டு, அவர்கள் பேசி, 10½ மணிக்குக் கேளவி நேரம் முடிந்தாலும், 10-3/4 அல்லது 11 மணிக்கு எல்லாம் முடிவுற்று, மற்றவற்றிற்கு நேரம் அனுமதிக்கப்படுகிறது. கடந்த காலங்களிலே, 1957 முதல் இந்த அவையிலே நானும் இருக்கிறேன்; நம்முடைய பேராசிரியரும் இருக்கிறார்; இத்தனை ஆண்டுகாலம் இந்த அவையில் இருக்கிற நாங்கள், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்தபோதும் அப்படித்தான். மிகக் கண்டிப்பாக அப்போதிருந்த பேரவைத் தலைவர்கள், தாம் ஒதுக்கிய நேரத்திற்கு மேல் ஒரு நிமிடம் கூட அனுமதிக்க மாட்டார்கள். ஒரு பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு யார் யார் அனுமதிக்கப்படுகிறார்களோ, அவர்களைத்தான் அனுமதிப்பார்கள். 8½ மணிக்குள்ளாக ஒத்திவைப்புத் தீர்மானம் பேரவைத் தலைவருடைய அறைக்கு வந்து சேரவேண்டும் என்றால், 8.31-க்கு



வந்தால்கூட, அது எடுக்கப்பட மாட்டாது. ஆனால், இப்போது எல்லாமே ரொம்ப 'எலாஸ்டிக்'-ஆகி, 8.30, 8.40 என்று ஆகி, இன்னும் சொல்லப்போனால், அவையிலே வந்து உட்கார்ந்த பிறகுகூட, 10½ மணிக்கு, ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து, என்னைக் கேட்டு உங்களிடத்திலே பரிந்துரை செய்யச் செய்து, அப்படி எடுக்கப்படுகின்ற ஒத்திவைப்புத் தீர்மானங்களும் அதில் இருக்கின்றன.

*முற்பகல் 11-35*

எனவே அவற்றை எல்லாம் நாம் கைவிட்டால்தான், அந்த முறைகளை எல்லாம் கைவிட்டு, கண்டிப்பாக, அதேநேரத்தில் கட்டுப்பாட்டு உணர்ச்சியோடு கடமையாற்றுகின்ற அந்த உணர்வை நாம் பெற்றால்தான் போதுமான நேரம் மசோதாக்களுக்கும், மானியங்களுக்கும் கிடைக்கும் என்பது என்னுடைய கருத்து. இப்போது எழுந்துள்ள சூழ்நிலையைப் பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல இருக்கின்ற சட்டமுன்வடிவுகளைப் பார்க்கும்போது, மசோதாக்களைப் பார்க்கின்றபோது நாளை ஒரு நாளில் அத்தனையையும் பேசி முடித்து நிறைவேற்றுவது என்பது இயலாத காரியம் என்பதை நானும் உணருகின்றேன். எனவே 29-ஆம் தேதி முடியாவிட்டால் 30-ஆம் தேதியும் வைத்துக்கொள்ளலாம் என்று ஏற்கெனவே Business Advisory Committee— அலுவல் ஆய்வுக் குழுவில் பேசப்பட்டிருக்கிறது. பேரவைத் தலைவர் இருந்தபோதே பேசப்பட்டிருக்கிறது. ஒரு நாள் அதிகமாக 30-ஆம் தேதியோடு இந்த மசோதாக்களை எல்லாம் பேசி முடிக்கலாம் என்று கருதுகின்றேன். அவரே சொன்னார். பல சட்டமுன்வடிவுகள் அதிகப் பிரச்சினை இல்லாதவை என்றும். ஒன்று, இரண்டில்தான் கருத்து மாறுபாடுகள் இருப்பதாகவும் சொன்னார். அதில் எங்களுக்கு எந்தக் கருத்து மாறுபாடும் நிச்சயமாக இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறோம். எனவே, முக்கியமான பல மசோதாக்களை நிறைவேற்றுவதற்குப போதுமான நேரம் எடுத்துக்கொள்ள வேண்டிய வகையில் நாளைய தினமும், நாளைய மறுநாளும் இந்த மசோதாக்களை எடுத்து விவாதிப்பதற்குத் தாங்கள் அனுமதிக்க வேண்டும். அவையிலே உள்ள மற்ற தலைவர்களும், கட்சியின் தலைவர்களும் இதை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகின்றேன். அவர்களுடைய சம்மதத்தைப் பெற்று தாங்கள் அந்த ஆணையைப் பிறப்பிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு தினங்களுக்கு முன்பு நான் பேசியபோது இதைத்தான் குறிப்பிட்டேன். வழக்கமாக ஒத்திவைப்புத் தீர்மானம் அல்லது கவன ஈர்ப்பு என்றால் அதற்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. ஒரு தீர்மானம் அல்லது இரண்டு தீர்மானங்கள் வந்தால்தான் அது நம்முடைய கவனத்தையும் ஈர்க்கும், மக்களுடைய கவனத்தையும் ஈர்க்கும், கொண்டு வந்தவர்களுடைய நோக்கமும் நிறைவேறும். தொடர்ந்து ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்பு என்றால், இப்போது *11.30* மணிக்கு மேலாகிவிட்டது. எங்களைப்போன்றவர்கள் எல்லாம் இந்த அவையிலே நடக்கின்ற மரபுகளுக்கு கட்டுப்பட வேண்டுமென்று உட்கார்ந்திருக்கக் கூடியவர்களாக இருக்கிறோம். பேசாமல் இருக்கிறோம். இந்த மானியங்களில் பேசுவதற்கோ அல்லது சட்டமுன்வடிவை ஆய்வு செய்யும்போது பேசுவதற்கோ எங்களுக்கு நேரமே கிடைக்கவில்லை என்ற ஆதங்கம் எங்களுக்கு தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. எனவே ஒத்துழைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்கிறார்கள். ஒத்துழைக்கக்கூடியவர்கள் ஒத்துழைக்கிறார்கள். ஆனால் நீங்களும் அதை ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டு வரவேண்டும். யார், யாரோடு ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் இப்போது இருக்கின்ற பிரச்சினை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொஞ்சம் ஒத்துழைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள், இந்த அவையிலே உட்கார்ந்திருக்கக்கூடிய எங்களுக்கும் அந்த ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. நாங்கள் முறையாக, நிறைவாக எங்களுடைய பணியைச் செய்வதற்கு அது தேவைப்படுகிறது. இந்தச் சட்டமுன்வடிவில் என்ன பேசுவது? நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு என்பது மிக முக்கியமானது. இத்தனை நாள் நாம் ஆற்றிய பணியில் சட்டப்படி அரசுக்கு இப்போதுதான் நிதியை ஒதுக்கித் தருகிறோம். மிக முக்கியமான சட்டமுன்வடிவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்வதற்கு நேரமே இல்லை. எனவேதான் சொல்கிறேன். இவை வரையறுக்கப்பட வேண்டும். முறைப்படுத்தப்பட வேண்டும். அதற்கு நாங்கள் மட்டும் ஒத்துழைத்தால் போதாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். எனவே, இரண்டு, மூன்று நாட்கள் என்று சொல்வதை நாளை மறுதினமும் இதை வைத்துக்கொள்ளலாம்





என்று சொல்வதை நானும் ஆதரிக்கின்றேன். ஏனென்றால் நான் இந்தச் சட்டமுன்வடிவில் பேச வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்தை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இப்போதுதான் ஒத்துழைக்க வேண்டும் என்று சொன்னார்கள். நீங்கள் உட்காருங்கள் நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) சரி, விரைவில் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாராளுமன்ற விதிமுறைப்படியும், தமிழ்நாடு சட்டமன்ற விதிமுறைப்படியும் கேள்வி நேரம், ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்பு, ஜீரோ ஹவர் இவை எல்லாம் நடைமுறையில் அனுமதிக்கப்பட்ட ஒன்றுதான். ஒத்திவைப்புத் தீர்மானங்களை சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் *8.30* மணிக்கு கொடுக்கிறோம். *8.30* மணிக்குக் கொடுக்க முடியவில்லையென்றால் *9.00* மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் கொடுப்பது என்பது எல்லா சட்டமன்றங்களிலும் நடைமுறையில் இருக்கின்ற ஒன்றுதான். ஆனால் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் பெரும்பாலும் எடுக்கப்படுவதே கிடையாது. அன்றைக்கு நாட்டில் நடக்கின்ற பிரச்சினைகளை அன்றைக்கே எடுப்பது கிடையாது. **இருந்தாலும் பரவாயில்லை. முதலிலே சட்டமன்றக் கூட்டத் தொடர் 15-ஆம் தேதி முடிவதாக இருந்தது. அதற்குப் பிறகு 29-ஆம் தேதி முடிவதாக இருந்தது. இப்போது மேலும் ஒரு நாள் நீட்டிக்க வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். அப்படி நீட்டிக்கப்படுவதைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் இல்லை. ஆனால், நீங்கள் பயத்தின் காரணமாக, உள்நோக்கத்தின் காரணமாக, ஆட்சியைக் கலைத்து விடுவார்களோ என்று நீட்டித்துக்கொண்டு போகிறீர்கள்.

*முற்பகல் 11-40*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இருப்பவர்களில் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு எந்தப் பயமும் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், பயந்துகொண்டு இருக்கிறவர்கள் வெளியிலே இருந்துகொண்டு,

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்களுடைய பிரதிநிதிகளாக இருப்பவர்களுக்கு இருக்கின்ற நிலைகூட, இந்த அவையிலே உள்ள ஆளுங்கட்சியைச் சார்ந்த எவருக்கும் கிடையாது. இன்னும் சொல்லப்போனால், எதிர்க்கட்சிகளில்கூட, பல எதிர்க்கட்சிகளுக்கு அந்த நிலை இல்லை.

ஒத்திவைப்புத் தீர்மானம் என்பது காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அனுமதிக்கப்பட்டதே கிடையாது. ஒத்திவைப்புத் தீர்மானம் என்று சொன்னால், அது நம்பிக்கை இல்லாத் தீர்மானம்போல் ஆகும் என்று சொல்லி, அனுமதிக்கமாட்டோம் என்று அன்றைக்கு இருந்த சபாநாயகர்கள் தெரிவிப்பார்கள். இப்போது ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற பெயரில் அதை அனுமதிக்க அவைத் தலைவருக்குக் கடமை இல்லை. அதனால்தான் மிக முக்கிய சிறப்பு வாய்ந்த கவன ஈர்ப்பாக மாற்றப்பட்டு அவையில் எழுப்புவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஒத்திவைப்புத் தீர்மானம் என்று கொடுத்தால், அமைச்சர்களோ அல்லது முதலமைச்சரோ அதை ஏற்கத் தேவையில்லை என்று சொல்ல உரிமை இருக்கிறது.

அடுத்து, அப்படி வருகின்ற தீர்மானத்தைப்பற்றிய கருத்துக்களைத் தெரிந்து கொள்ளாமல், அந்தத் தீர்மானத்தை அவையிலே அனுமதிக்க சட்டம் அனுமதிக்காது. விவரம் தெரிந்து பதில் சொல்கிறோம் என்றால்--அதற்கிடையிலே ** என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவது முறையல்ல. அப்படிப்பட்ட, சட்டமன்ற மரபுக்கு அப்பாற்பட்ட வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி கூறிய அந்த சொற்றொடர்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்).

**திரு. இரா. தாமரைக்கனி:** ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி, அருகில் இருக்கின்ற உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களை ஒருமையில் பேசக்கூடாது. (குறுக்கீடு) எல்லோரையும் அமைதியாக இருக்கச் சொல்லுகிறேன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** **

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி பேசியது எதுவும் அவைக் குறிப்பில் இருக்காது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சபை கூடுவது, விவாதிப்பது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நமது சட்டமன்றக் கூட்டம் என்பது, எனக்குத் தெரிந்தவரையில் முன்பெல்லாம் காலை 8½ மணிக்குக் கூடியது. பிறகு காலை 9-00 மணிக்கு என்று மாறியது. பிறகு, உறுப்பினர்கள் எல்லாம் வருகை தருவதற்குக் காலதாமதம் ஏற்படுகிறது என்று காலை 9-30 மணி என்று வைத்துக் கொண்டுள்ளோம். இவ்வாறு, ஒவ்வொருமுறையும் ½ மணி நேரம் நீட்டிக்கப்பட்டு இப்போது சட்டசபை 9-30 மணிக்குக் கூடுகிறது.

அடுத்து, கேள்வி நேரம் என்பது, நிச்சயமாக, ஒரு முக்கியமான நேரமாகும். கேள்வி நேரத்தில் பேசக்கூடிய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். கேள்வி நேரத்தின்போது, பேசாத உறுப்பினர்களுக்கெல்லாம் வாய்ப்புக் கிடைக்கிறது. அவர்கள் தங்களுடைய கேள்வியின் மூலமாக தங்கள் பகுதியில் நடைபெறும் வேலைகள் மற்றும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கிறது.

அடுத்து முதலமைச்சரிடமும், சபாநாயகரிடமும் இது குறித்துத் தெரிவித்துள்ளேன். ஒத்திவைப்புத் தீர்மானம், சிறப்புக் கவன ஈர்ப்பு, ஜீரோ ஹவர் என்றால் முன்பெல்லாம் அவற்றை எடுத்துக்கொள்கிறபோது யார் முதலில் கொடுத்தார்களோ அதற்கேற்ப ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கின்ற வழக்கம் இருந்தது. இப்போது அந்த வழக்கம் இல்லை. முன்னால் கொடுத்தது பின்னால் எடுத்துக்கொள்ளப்படுகிறது. முன்னால் கொடுத்தவர் பின்னால் பேசுகிறார், பின்னால் கொடுத்தவர் முன்னால் பேசுகிறார். அந்த அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. எங்களைப் போன்றவர்கள் எல்லாம் காலை 8-30 மணிக்கெல்லாம் சட்டமன்றத்திற்கு வந்துவிடுகிறோம். அந்த அளவுக்கு நாங்கள செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்கள் சொன்னதுபோல, இன்றைக்கு ஏகப்பட்ட சட்டமுன்வடிவுகள் வந்திருக்கின்றன. அவற்றை இன்றைக்கு எடுத்து, விவாதித்து முடிக்க இயலாது. எங்களைப் போன்றவர்கள் கட்சிகாரர்களுடன் தொடர்பு கொண்டு, இவைபற்றிக் கலந்து பேசி செயல்படுவதற்கு அவகாசம் கிடைக்காமல் இருக்கிறது. எனவே,

[திரு. ஜி. பழனிசாமி] [1998 மே 28

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல மேலும் ஒரு நாள் சபையைக் கூட்டி விவாதிக்க தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே நாங்கள். நாங்கள் என்றால் பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோர் தாராளமாக நடந்துகொண்ட காரணத்தால் நீங்கள் இந்தக் கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருந்தது. நீங்கள் ஒத்துழைக்கின்ற காரணத்தால் இனிமேல் சட்டமன்ற விதிப்படி கண்டிப்பாக நடப்பேன். அதற்கு நீங்கள் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 7. அறிவிப்பு--தொடர்ச்சி

### (இ) பேரவைக் கூட்டத்தொடர் நீட்டிப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோரும் ஏற்றுக் கொண்ட காரணத்தால் பேரவையின் அனுமதியோடு கூட்டத்தொடர் 30ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி

### (அ) தமிழ்நாடு நிதிஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1998--தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிதி ஒதுக்க மசோதா மீது விவாதம், டாக்டர் க. கிருஷ்ணசாமி.

முற்பகல் 11-45

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு மசோதாவில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்த உங்களுக்கு நன்றி கூறி ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏறத்தாழ இரண்டு மாத காலத்திற்கு மேலாக நடைபெறும் இந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் பல்வேறு மசோதாக்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. நல்ல கருத்துக்கள் எல்லாம் விவாதிக்கப் பட்டிருக்கின்றன. நான் மூன்று நாட்களுக்கு முன்பு காவல் துறை மானியத்தில் ஒரு முக்கியமான பிரச்சினையைப் பற்றி



1998 மே 28] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

பேசியிருந்தேன். ஓட்டப்பிடாரம் தொகுதிக்கு உட்பட்ட புளியம்பட்டி மற்றும் மணியாச்சி காவல்நிலையங்களில கைது செய்யப்பட்ட கணேசன் என்பவர், அந்தக் காவல் நிலையங்களில் உள்ளவர்கள் செய்த சித்ரவதை காரணமாக, அவர் கடந்த 20-ந் தேதி அன்று கோவில்பட்டி சிறையில், காவல் நிலையத்திலே மரணமுற்றிருக்கிறார். அந்த கணேசன் என்பவருடைய மரணத்திற்குக் காரணமாக இருந்த அந்தக் காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள்மீது கொலைக்குற்ற வழக்கு பதிவு செய்து அவருடைய குடும்பத்தார்க்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டுமென்று நான் வலியுறுத்தி இருந்தேன். அன்று எனக்கு சரியான பதில் கிடைக்கவில்லை.

ஏழை எளிய குடும்பத்திலே பிறந்த அந்த கணேசனுடைய குடும்பம் அநாதையாக இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சாதாரண வழக்குகளுக்காக அழைத்து செல்லப்பட்ட அவர் சித்ரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார். இந்த நேரத்திலே மேலும் ஒரு கருத்தை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். சமீப காலங்களில், தென்மாவட்டங்களில் கலவரம் காரணமாக சாதாரண வழக்குகளுக்காக அழைத்துச் செல்லப்படக்கூடிய தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள அடிக்கப்படுவதும், சித்திரவதை செய்யப்படுவதும் ஒரு புதிய நடைமுறையாக இருந்து வருகிறது. எனவே, இந்த நடைமுறை என்பது முறையானது அல்ல. இது எதிர்விளைவுகளை விளைவிக்கும் என்ற அடிப்படையிலே காவல் துறை அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் ஒரு தக்க உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சமீப காலங்களிலே சாதாரண வழக்குகளுக்குக்கூட அடித்து அழைத்துச் செல்லப்படக்கூடிய நிலைக்கு அவர்கள் எதற்காக ஆளாக்கப்படுகிறார்கள் என்று எனக்கு தெரியவில்லை. எனவே, ஒரு ஜனநாயக நாட்டில் மனிதாபிமான அடிப்படையில் நடந்துகொள்ள வேண்டும் என்பது மட்டுமல்ல, சட்ட விதிகளுக்கு மாறாக காவல் துறைகூட நடந்துகொள்ளக்கூடாது என்ற காரணத்திற்காக ஜனநாயக நாட்டில் காவல் துறை ஒரு ஒடுக்குமுறை கருவியாக செயல்படுவது நடுக்கப்பட்டாக வேண்டுமென்ற நோக்கத்தோடு நான் இதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். எனவே, நான் மீண்டும் வலியுறுத்த விரும்புவது இந்தக் காவல் நிலையக் கொடுமைக்கு ஆளாகி இறந்துவிட்ட கணேசனுடைய குடும்பத்திற்கு தக்க நஷ்ட ஈடு வழங்கவும் அவருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு, நீதி வழங்கவும்

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [1998 மே 28

இந்த மாமன்றத்திலே தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரக்கூடிய ஜூன் 1ந் தேதி முதல், துணை ஆய்வாளர்கள் தேர்வு, காவல் துறையிலே நடைபெற உள்ளது. இதுவரையிலும் காவலர்களுக்கான தேர்வில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு விதி விலக்கு இருந்தது. பொதுவாக 170 செ.மீ. என்ற உயரத்தை காவலர்களுக்கு 168 செ.மீ என்று தளர்த்திக் கொடுத்து இருக்கிறார்கள். அதேபோல, துணை ஆய்வாளர்கள் தேர்விலும் உயரத்தைப் பொறுத்தவரையிலே, அதாவது 170 செ.மீ. என்பதை 168 செ.மீ. ஆகத் தளர்த்திக் கொடுப்பதன் மூலமாக ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் இதில் பங்கேற்பதற்கும், வாய்ப்பு பெறுவதற்கும் வசதியாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

*முற்பகல் 11-50*

அதேபோல, மருத்துவத் துறையில் இப்போது எம்.பி.பி.எஸ். படிப்பிற்கு இட ஒதுக்கீடு இருக்கிறது. ஆனால் super speciality என்று அழைக்கப்படுகின்ற MCH-Cardiology DM-Cardiology, MCH-Neurology, MCH-Urology என்று அழைக்கப்படுகின்ற சிறப்பு முதல்நிலைப் பட்டப் படிப்புகளில், கடந்த 20 ஆண்டுக்காலமாக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த எவருக்கும் அதில் வாய்ப்பு கொடுக்கப்படவில்லை என்பதை இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, பல் மருத்துவத்திலும், Post-graduate முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கப்படவில்லை. எனவே சமூக நீதியைக் கடைப்பிடிக்கக்கூடிய இந்த அரசு, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அந்தச் சிறப்புக் கல்வி பெறுவதிலே இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதிலேகூட, ஒருசில குளறுபடிகள் நடந்திருக்கின்றன. ஆறு சீட்டுகள் இருக்கின்றன என்றால், அவற்றை இரண்டாகப் பிரித்து, 3 சீட்டுகள் service-க்கும், 3 சீட்டுகள் Non-service-க்கும், என்று பிரித்து, ஒரு சீட்டு கிடைப்பதுகூட கிடைக்கப்படாத நிலையிலே கடந்த ஆட்சியிலே செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இந்தக் குளறுபடிகளை எல்லாம் போக்கி, எப்படியும் கடந்த 15, 20 ஆண்டுக்காலத்தில் எத்தனை சீட்டுகள் கிடைக்காமல் போய்விட்டனவோ அவற்றை, அந்தச் சிறப்பு முதுநிலைப் பட்டப் படிப்புகளில், மருத்துவப் பட்டப்



1998 மே 28] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

படிப்புகளில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கான பங்கீடு கிடைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இராஜபாளையம் அருகே உள்ள சத்திரப்பட்டியில் Surgical Bandage துணி உற்பத்தி செய்யக்கூடிய தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். சிறு முதலாளிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த Surgical Gauze துணி ரகங்களுக்கு சமீபத்திலே 8 சதவிகித வரி போடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனால், அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாக, அந்தத் தொழிலாளர்களும், உற்பத்தியாளர்களும் குறை கூறுகிறார்கள். எனவே, பல்வேறு வரி விலக்குகளை அறிவித்திருக்கிற இந்த அரசு, அந்த 8 சதவிகித வரியையும் விலக்கி, அவர்களுக்கு உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் சிறு கடன்கள் பெறுவதற்காக, குறிப்பாக, IRDP கடன் பெறுவதற்காக, THADCO மூலமாக மத்தியக் கூட்டுறவு வங்கிகளை அணுகுகின்றபோது, தாட்கோ மூலமாக வரக்கூடியவர்களுக்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே கடன் கிடையாது என்று திருப்பி அனுப்பப்படுவதாகக் கேள்விப்படுகிறோம். மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அரசு வங்கிகள். எனவே, அந்த வங்கிகள் மூலமாகவும் இந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு IRDP கடன் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுவிலக்கு வழக்குகள் அதிகமாக்கப்பட வேண்டுமென்று இந்த மன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த காலத்திலே Bootleggers சட்டத்தின் மூலமாக மிகச் சாதாரணமான ஏழை எளிய மக்கள்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்த ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாத வண்ணம், புதிதாகத் தோற்றுவிக்கப்பட இருக்கின்ற Prohibition Wing நடவடிக்கை எடுப்பதற்கு இந்த மாமன்றத்தின் மூலம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மீண்டும் இந்த மாமன்றத்தில் நான் கேட்டுக்கொள்வது, கடந்த 17ஆம் தேதியன்று மேலப்பவானியைச் சேர்ந்த கணேசன் என்பவர், மணியாச்சி காவல் நிலைய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரைக் கைது செய்து, அடித்துத் துன்புறுத்தியதால், கோவில்பட்டி கிளைச் சிறைச்சாலையிலே மரணம் அடைந்திருக்கிறார். அதற்கு நீதி வழங்க வேண்டும். அவருடைய

குடும்பத்திற்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். அப்படிப்பட்ட கொடுமையைப் புரிந்த காவல் துறை அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பவளவிழா காணும் நம்முடைய முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நிதி ஒதுக்க மசோதாமீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம், இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிற முதல்வர் அவர்கள், நாட்டு மக்கள் பாராட்டுகின்ற வகையில்--விவசாயிகள், நெசவாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், காவலர்கள், ஆதிதிராவிட மக்கள், பிற்படுத்தப்பட்டோர், இப்படி-- தமிழகத்திலே இருக்கின்ற எல்லாத் தரப்பு மக்களும் பயனடைகின்ற வகையில், சீரிய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, நிதி ஒதுக்கீட்டைக் கேட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏதோ பயப்படுவதாக இங்கே சிலர் சொல்கிறார்கள். இந்த நூற்றாண்டில், 20-ஆம் நூற்றாண்டில் சிறப்பு முதல்வராக அவர்கள் விளங்கினாலும், அடுத்து வருகின்ற 21-ஆம் நூற்றாண்டிலும், தமிழகத்தினுடைய முதலமைச்சராக அவர்கள் பணியாற்றுவார்கள் என்பதை நாட்டு மக்கள், தமிழக மக்கள் அதையே விரும்புகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே அடக்கத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

இரண்டாண்டு காலமாக நடுநிலையாளர்கள், படித்தவர்கள், பாமரர்கள் எல்லோரும் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் மேல்மட்டத்தில் எல்லாம் திருந்திவிட்டார்கள், இருந்தாலும் கீழ்மட்டத்தில் இருக்கின்ற அதிகாரிகள் திருந்த வேண்டுமென்ற கருத்தைப் பரவலாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இதைப் பார்த்து வயிற்றெரிச்சல்பட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு கோவை சம்பவம் ஒரு திருஷ்டியாக, இந்த ஆட்சிக்கு திருஷ்டியாக அமைந்துவிட்டது.

இன்றையதினம் அரசு செய்கின்ற அனைத்து நல்ல காரியங்களையும் தூக்கி எறிகின்ற வகையில் கோவை சம்பவம் பற்றி பேசியே மக்களை திசை திருப்பினார்கள். ஆனால் நம்முடைய



மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், மற்றும் காவலர்கள் எல்லோரும் திறமையான முறையில் நடவடிக்கை எடுத்து இந்தியாவிலே இருக்கின்ற எல்லோரும் பாராட்டுகின்ற வகையில் ஏன் மத்திய அதிகாரிகள்கூட பாராட்டுகின்ற வகையிலே கோவை சம்பவத்தையும் இந்த அரசு சமாளித்தது. அதற்காக நான் இந்த நேரத்தில் நம்முடைய முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய அரசுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதி ஒதுக்க மசோதாவில், தமிழகத்தில் இருக்கின்ற எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க, குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று, நம்முடைய அரசு ஏராளமான நிதியினை ஒதுக்கியிருக்கிறது. இந்த நேரத்தைப் பயன்படுத்தி, நம்முடைய குடிநீர் வடிகால் வாரியத்திற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக என்னுடைய வேண்டுகோளாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியில் ஏராளமான கிராமங்களில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டிய சூழ்நிலை இருந்து வருகின்றது. அவைகளுக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு, குடிநீர் வடிகால் வாரியம் கிராமங்களில் இந்தத் திட்டத்தை செயல்படுத்துகிறபோது வீட்டுக்கு குழாய் இணைப்பு தருவதற்கு, அதிலே சேர்த்து அந்தத் திட்டத்தை தீட்டுவதில்லை. ஆனால் வாரியம் அந்த ஊராட்சித் தலைவர்களுக்கு குடிநீர்த் தொட்டியை ஒப்படைத்த உடனே ஊராட்சித் தலைவர்கள் கேட்டவர்கள் எல்லோருக்கும் இணைப்புத் தந்துவிடுகிறார்கள். அதனால்தான் பெரும்பாலான கிராமங்களில் இந்தத் திட்டம் செயலிழந்துவிடுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது.

நம்முடைய அமைச்சர் அவர்கள், எதிர்காலத்தில் கிரா[illegible]ங்களுக்கு இந்த குடிநீர்த் தொட்டியை கட்டுகின்ற நேரத்தில் வீட்டு இணைப்பையும் பெறுகின்ற வகையிலே ஆலோசிக்க வேண்டுமென்று நான் அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடுமான வரையில், குடிநீர் வடிகால் வாரியத்திற்கும் நிதி உதவி அளிப்பது நீங்கள்தான் என்பது உங்களுக்குத் தெரியும். அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் ஏற்கெனவே இருந்த நிலைமை நிலைமைக்கு, இன்றைக்கு செயலிழந்துக்கொண்டு வருகின்ற நிலைமை வெளியில் வரும்போது, இவ்வளவு தொகை நீங்கள் ஒதுக்கியும், வெளியில்

கடன் பெற்றுத் தான் திட்டங்களை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கடன் பெறுவதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன. அனுகுண்டு சோதனை, அது இது என்றெல்லாம் போடப்பட்டு, வெளிநாட்டுக் கடன்கள் பெறுவதில் சங்கடமான சூழ்நிலைகள் ஏற்படுகின்றன.

எனவே, கிராமங்களில் குடிநீர் தலா 10 லிட்டர் அளவுக்கும் குறைவாக இருக்கிறது. மக்களுக்கு தலா 40 லிட்டர் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று முதல்வர் அவர்கள் அறிவித்து, அதை மாதத்திற்கு இரண்டு மூன்று நாட்கள் தனியாக அவர்களே ஆய்வு செய்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி செய்யும்போது, 1991ஆம் ஆண்டு கணக்கின்படி ஏற்கெனவே இருந்த மக்களுக்கு தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது நாம் 30 ஆண்டுகளில் மக்கள் தொகை எண்ணிக்கை எவ்வளவு வருமோ-2021 ஆம் ஆண்டு வரை எண்ணிக்கைக்கு-அந்த அடிப்படையில் தண்ணீர் கொடுக்கிறபோது, செலவினம் 5 பங்குக்குமேல் கூடி வருகிறது. அந்த நிதிச் சுமையையும் தாங்கிக் கொண்டு, கேட்கிற உங்கள் அனைவருக்கும் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது, பொதுக் குழாய்கள் மூலம் 10 வீடுகளுக்கு,-20 வீடுகள், 21 வீடுகள் இருந்தாலே ஒரு தெருவாக கணக்கிடப்பட்டு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலை இருக்கிறபோது தெருக்களுக்கும் பொதுக் குழாய் கொடுக்க வேண்டும்; வீடுகளுக்கும் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னால், மக்களையும் சோம்பேறிகளாக ஆக்கக் கூடாது; நாமும் வரவுக்கு மிஞ்சிய செலவுக்கு இடம் அளித்துவிடக் கூடாது. எனவேதான், முக்கியமான பெரும் கிராமங்கள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றுக்கு நாம் ஒதுக்கீடு செய்து, பிற்பகுதியில் ஏதாவது முயற்சிக்கலாமா என்ற நிலை இருக்கிறபோது, வீண் செலவுக்கு இடம் அளிக்கக்கூடாது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*நண்பகல் 12-00*

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கீழ்க்கண்ட கிராமங்களை இந்த ஆண்டு அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக,





சொரகளத்தூர், மருத்துவாம்பாடி, பொற்கனம், முனியப்பன்தாங்கல், ஊதரம்பூண்டி, நார்த்தாம்பூண்டி, ஆண்டாபட்டி, வீரலூர், ஆதிதிராவிடர் குடியிருப்புகள்--இப்படிப் பல்வேறு கிராமங்கள் இருக்கின்றன; அவைகளில் சாலை போடும் திட்டத்தையும் என்னுடைய தொகுதியிலே திருவண்ணாமலை மாவட்டத்திலேயும் நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்று நான் அன்போடு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோளாக எங்கள் மாவட்டம் சார்பாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இடையில் பேசினார்கள்; நான் பேசவில்லை. அதனால் கொஞ்ச நேரம் ஒதுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டம் கிராமச் சாலைகள் அதிகம் நிரம்பிய மாவட்டம். பெரும்பாலான கிராமச் சாலைகள் என்னுடைய மாவட்டத்தில் மிகவும் பழுதடைந்து உள்ளன. அதைச் செப்பனிட-போதிய நிதி இல்லை என்று சொல்லப்படுகிறது. சமீபத்தில்கூட நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய மாவட்டத்திற்கு வந்தார்கள்; வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்களும் வந்திருந்தார்கள். எல்லோரும் என்னுடைய தொகுதியிலே பல சாலைகளைப் பார்த்து, அவையெல்லாம் செப்பனிடப்பட வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். என்னுடைய மாவட்டத்தில் சற்றேறக்குறைய 2 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் கிராமச் சாலைகள் இருக்கின்றன. அதற்குப் போதிய நிதி ஒதுக்கி, என்னுடைய மாவட்டத்தில் இருக்கிற 9 தொகுதிகளில் உள்ள கிராமச் சாலைகளைச் செப்பனிடுவதற்குண்டான நடவடிக்கையை நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்

அதேபோல, இந்த ஆண்டு என்னுடைய தொகுதியில் ஒரு அணை வரும் என்று நான் எதிர்பார்த்தேன். இந்த ஆண்டு இல்லை என்றாலும், அடுத்த ஆண்டாகிலும் என்னுடைய தொகுதியில் மேல்சோளக்குப்பம் அருகில்--அங்கு அணை கட்டுவதற்குண்டான எல்லா சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன என்று அந்தத் துறையினரால்

கண்டறியப்பட்டு இருக்கிறது; எனவே, அங்கு ஒரு அணையைக் கட்டித்தர வேண்டுமென்று நான் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களையும் நம்முடைய முதலமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, என்னுடைய மாவட்டத்தில் ஜவ்வாது மலைப் பகுதிகள் வருகின்றன. ஜவ்வாது மலைப் பகுதியில் மலைவாழ் மக்கள் வசிக்கிறார்கள். அங்கே குடிநீர் வடிகால் வாரியத்தால் குடிநீர்த் தொட்டிகள் கட்டப்படாமல் இருக்கின்றது. அதிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கு ஏராளமான நிலங்கள் பயிரிடப்படுகின்ற நிலையில் இருக்கின்றன. ஆலங்காயம் கீழ்ப்பகுதியில் இருந்துதான் மின்சாரம் வரவேண்டி இருக்கிறது. அங்கே மின்சாரப் பற்றாக்குறை மிக அதிகமாக இருக்கிறது. எனவே, ஒரு துணை மின்நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று ஜம்னாமருதூர் மக்கள் நீண்ட காலமாக கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அமைத்துத்தர நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒன்று மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவின்மீது ஒருசில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். கடந்த பல நாட்களாகப் பேசியபின், 15 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, கிட்டத்தட்ட 61 இலாக்காக்களுக்குப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. இங்கே பவள விழா காண இருக்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்னும் பல்லாண்டு நோய் நொடி இல்லாமல் சிறப்புடன் வாழ்ந்து மக்களுக்குப் பணியாற்ற வேண்டுமென்று நான் இந்த மாமன்றத்திலே இருக்கின்ற அத்தனை பேருடைய வேண்டுகோளாகவும், அத்தனை பேருடைய வேண்டுதல் பேரிலேயும் ஆண்டவனைப் பிரார்த்தித்து என் நல்வாழ்த்துக்களை நான் அவர்களுக்குக் கூறிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). இங்கே வந்த உடனே நாங்கள் எல்லாம் பேசிக் கொண்டே





இருப்போம்; ரிசர்வேஷன் சரியாகப் பூர்த்தி செய்யப்படவில்லை; ரிசர்வேஷன் சரியாகப் பூர்த்தி செய்யப்படவில்லை என்றெல்லாம் சொல்லிக் கொண்டு இருந்தோம். ஆனால், அதற்கு ஒரு மேல்நிலைக் கண்காணிப்புக் குழு ஏற்படுத்தி, அதிலே என்னைப் போன்றவர்களை அங்கத்தினர்களாக நியமித்து 110 இலாக்காக்களில் உள்ள பெரிய அதிகாரிகளை-- I.A.S. அதிகாரிகளை அழைத்து, ஐ.பி.எஸ். அதிகாரிகளை அழைத்து, நேரடியாக விசாரணை செய்து, இந்த இலாக்காவில் எத்தனை இடம் இன்னும் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கிறது, எப்போது பூர்த்தி செய்யப்போகிறீர்கள என்று நேரடியாகக் கேட்டு அறிந்து, அவர்களும் நாங்கள் உடனடியாகப் பூர்த்தி செய்கிறோம், இரண்டு மாதத்தில் செய்கிறோம், அல்லது 3 மாதத்தில் பூர்த்தி செய்கிறோம் என்ற பதிலைக் கொடுக்கிறார்கள் என்றால் அந்த மக்களுக்கு இது எவ்வளவு பெரிய வரப்பிரசாதம் என்பதைப் பார்க்கவேண்டும். காலியிடங்களை உடனே பூர்த்தி செய்து அந்த மக்களுக்கு வேலை கொடுப்பது ஒரு பெரிய பாக்கியம் என்று நான் கருதுகிறேன். அதுமட்டுமல்ல. நானே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே இதைப் பற்றிப் பேசலாம் என்று இருந்தேன். நான் பேசும்போது, அக்காவே பேசட்டும், அவர் மூத்த உறுப்பினர் என்று எல்லோரும் சொல்வதால், பேசாமலேயே பல நேரங்களில் உட்கார்ந்து விடுகிறேன். அது ஒரு Disqualification எனக்கு.

பிற்பகல் 12-05

இப்போது இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1989-ல் முதலமைச்சராக இருந்தபோது அரிஜன மக்களுக்கு வீட்டு அடி மனைகளை இனாமாக வாங்கிக் கொடுத்தார்கள். ஆனால் இதில் எந்த ஜாதி மக்களாக இருந்தாலும் வீட்டு அடி மனை இல்லாதவர்களுககு 3 சென்ட் மனை இனாமாகக் கொடுக்க வேண்டுமென்று நான் அப்போது கேட்டிருந்தேன். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு ஆணை பிறப்பித்து, அதுவும் இன்றைக்கு அமலில் இருக்கிறது. நல்லபடியாக நடந்து வருகிறது. அதுபோல் நேற்றையதினம் பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டில் உள்ள காலியிடங்களைப் பூர்த்தி செய்யவும் ஒரு கமிட்டி அமைத்திருக்கிறார்கள். அதற்கும் என்னுடைய பாராட்டுதலையும் நல்வாழ்த்துக்களையும் நான் கூறிக்கொள்கிறேன்.

வரி போடுகிறோம். வேண்டாம் என்று சொல்லவில்லை. என்னுடைய தொகுதியில் தேங்காய் நிறைய விளைகிறது. இப்போது கொப்பரைக்கு 1 சதவீதம் செஸ் வரி போட்டிருக்கிறோம். என்னுடைய தொகுதியில் தேங்காய் பவுடரிலிருந்து பால் உற்பத்தி செய்கிறார்கள். அது ரொம்ப குறைவானது. ஒன்றிரண்டு பேர்தான் அதைச் செய்கிறார்கள். அந்தப் பாலுக்கு நீங்கள் போட்டிருக்கிற வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று கேட்டேன். ஆனால் அதற்கு 11 சதவீதம் வரி என்று முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது மிகுந்த வேதனையாக இருக்கிறது. அது ஒன்றைத்தான் சொல்லவேண்டுமென்று நினைத்தேன். ஆகவே, அதற்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. மனோகரன் தலைமை)**

அதோடுமட்டுமல்ல. அழுகும் பொருள், என் தொகுதியில் திராட்சை நன்றாக விளைகிறது. மாம்பழம் விளைகிறது, வாழைப் பழம் விளைகிறது. இவை எல்லாம் அழுகும் பொருட்கள். 1 நாள் 2 நாள் மழை பெய்துவிட்டால்கூட ஒன்றும் இல்லாமல் போய்விடும். அங்கே அந்தப் பழத்தை அறுத்து வெளியில் கொண்டுவரும்போது, அதற்கு ஒரு கிலோவுக்கு இவ்வளவு வரி, 100 ரூபாய்க்கு விற்றால் இவ்வளவு வரி, அதை எடையில் கொண்டுபோய் வைத்தால் வரி. ஆக இவ்வளவு குறைபாடுகள் அதிலே இருக்கின்றன. பிறகு விற்பனை செய்யும்போதும் வரி என்று சொன்னால், அரை ஏக்கர், ஒரு ஏக்கர், 20 சென்ட் நிலத்தில் இதுபோன்ற பயிர்களைப் பயிரிடும் விவசாயிகள் ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அந்த அழுகும் பொருட்களுக்கு விதிக்கும் செஸ் வரியை விலக்களித்து உத்தரவிட வேண்டும் என்று அந்த ஏழைகளின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நிறைய பாலங்கள் தேவை என்று எல்லாம் பேசியிருக்கிறேன். அதைச் செய்யவேண்டும். இருந்தாலுமகூட நான் நீண்ட நாளைய எம்.எல்.ஏ. இங்கே சட்டசபையில் நமது முதல்வர் அவர்கள் நுழைந்த அந்தக் காலத்திலேயே அன்றைக்கே நானும் எம்.எல்.ஏ.-வாக இங்கே நுழைந்தவள். அவர்கள் நான்கு முறை முதல்வராக இருந்திருக்கிறார்கள். நான் ஆளுங்கட்சிப் பக்கம் உட்காராவிட்டாலும் கூட, எதிர்கட்சியாக இருந்து நாங்கள் வேலை செய்யவேண்டும்



அல்லவா? அதற்காகத்தான் பேசுகிறேன். நாங்கள் சொல்வதையும் நீங்கள் செய்து கொடுக்க வேண்டும். எங்கள் பகுதியில் தனித் திட்டத்தின் மூலமாகக் கல்லூரி ஒன்றைக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்குப் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. என்னைக்கூட கேட்கிறார்கள். ஏன் அக்கா, அரசுக் கல்லூரிக்கு ரூ. 80 இலட்சமா? உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா என்று கேட்கிறார்கள். இந்த அக்கா கட்டுகிறதா இல்லையா என்று சோதனை செய்கிறார்கள் என்றுதான் நினைக்கிறேன். நான் கேட்கிறேன். அரசுக் கல்லூரிக்கு யாராவது பணம் வசூல் செய்வார்களா, யாராவது பணம் கொடுப்பார்களா? இருந்தாலும்கூட எப்படியோ என் தொகுதிக்குக் கல்லூரி வேண்டும். அதற்குப் பணத்தைக் கட்டி விடுகிறேன். 3 பேரிடம் சொல்லியிருக்கிறேன். இப்போது 67½ இலட்சம் ரூபாய் சேர்ந்துவிட்டது. அது கலெக்டர் பொறுப்பில் இருக்கிறது. அந்த மூன்று பேரிடமும் சொல்லியிருக்கிறேன். தம்பி, நீங்கள் ஐந்து இலட்சம் ரூபாய் கொடுங்கள், நீங்கள் எல்லாம் செய்தால்தான் உண்டு என்று சொல்லியிருக்கிறோம். வசூல் செய்து கட்டிவிடக்கூடிய நம்பிக்கையோடு இருக்கிறவர்கள் நாங்கள். சொன்னால் சொன்னமாதிரி நடக்கக்கூடியவர்கள். ஏதோ இந்த அம்மா சொல்லிவிட்டு, கல்லூரி வாங்கிக் கொண்டு போய்விடுவார்கள் என்று நினைக்கக்கூடாது. இப்போது நான் ஒரு விவசாயி என்றே சொல்லியிருக்கிறேன். அப்படி நிலம் வைத்திருந்தும்கூட கார் வாங்க முடியவில்லை. கார் வாங்கினால் மாதம் 10,000 ரூபாய் செலவாகும். ஆகவே, கார் வாங்கவில்லை. இப்போது நானே சொல்கிறேன். கார் வாங்கவேண்டும். எம்.எல்.ஏ.க்களுக்கு கார் வாங்கக் கடன் வேண்டும். அதை முதலமைச்சர் அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். இப்போது கார் வாங்குவதற்குக் கடன் இல்லை என்ற நிலைமை வருவதாகச் சொல்கிறார்கள். எம்.எல்.ஏ.க்கள் கார் வாங்க ஏற்கெனவே 3 இலட்சம் ரூபாய் கடன் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிற ஒரு பிரச்சினை. (மேசையைத் தட்டும் ஒலி) நல்லா தட்டுங்கய்யா. ஆகவே, அந்த ரூ. 3 இலட்சத்தையும் கொடுங்கள். மாதா மாதம் எங்களுக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள். அந்தச் சம்பளத்திலேயிருந்து 5,000 ரூபாய் உடனடியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். மீதிப் பணத்தை, நாங்கள் இந்த 3 வருடங்கள் எல்லாம் இருப்போம் என்று நாங்கள் நம்புகிறோம். ஒருவேளை அந்த 3 வருடங்களில் இல்லா விட்டாலும்கூட, எங்களுக்கு பென்ஷன் கொடுக்கிறார்கள்.

அதிலேயிருந்து பிடித்துக் கொள்ளுங்கள். அதுவும் இல்லாவிட்டால்கூட, என்னைப் போன்றவர்களுக்கெல்லாம் நிலம் இருக்கிறது. நாங்கள் கொடுத்துவிடுவோம். அதுவும் இல்லாவிட்டால்கூட அந்தக் காரையே நாங்கள் வாடகைக்கு விடுத்து அந்தப் பணத்தைக் கொடுத்து விடுகிறோம் (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, தயவுசெய்து காருக்காக நீங்கள் ரூபாய் 3 இலட்சம் கட்டாயம் கொடுத்துத்தான் தீர வேண்டும். இல்லாவிட்டால் என்னை மாண்புமிகு உறுப்பினர்கள் விடமாட்டார்கள். என்னை நேற்று கேரோ செய்துவிட்டார்கள். என்னக்கா, நீங்கள்? ஒரு மூத்த உறுப்பினர். உங்களாலேதான் கெட்டுப் போச்சு என்று என்னைக் கேட்கிறார்கள். என்னால் தப்பிக்க முடியவில்லை. ஆகையினாலே, தயவுசெய்து கார் வாங்குவதற்கு 3 இலட்சம் ரூபாயை நீங்கள் ஒதுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கின்றேன். அதுமாத்திரம் அல்ல...

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** *சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** இருங்கள். எல்லோருடைய பிரச்சினைகளைப் பற்றித்தான் பேசுகின்றேன். நான் மட்டும்தான் பேசுகின்றேன். அதனால் எல்லோரும் வந்து என்னைக் கேட்டார்கள். இது என்ன 8000/- ரூபாய் கொடுக்கிறார்கள் என்று. அதற்கு நான் சொன்னேன். அன்றைக்கிருந்த விலை வேறு. அன்று, 1.50 ரூபாய்க்கு ஒரு சாப்பாடு வாங்கினோம். அதை நாங்கள் 4 பேர் சாப்பிட்டோம். ஆனால், இன்றைக்கு ஒரு சாப்பாட்டுக்கு 30 ரூபாய் கொடுத்தனுப்புகிறேன். (குறுக்கீடு) ஆமாம். 35 ரூபாய் கொடுத்தனுப்புகிறேன். அதுவும் கொஞ்சம் சாதம்தான் கொடுக்கிறார்கள். நாங்கள் 3 பேர்தான், நான் சாப்பட்டுவிட்டு 2 அட்டெண்டர்களும் சாப்பிடுகிறார்கள். அவ்வளவுதான். இன்றைக்கு விலைவாசிகளெல்லாம் அபபடி ஆகிவிட்டது. ஆகையினாலே, அன்றைக்கு நான் இங்கே சொன்னேன். எங்களுக்கு, அதாவது 10,000, 15,000 ரூபாய் கொடுங்கள் என்று சொன்னேன். அது எங்களுக்குத் தேவையில்லை. ஆனால், இன்றைக்கு இருக்கின்றவர்களுக்கு இந்தப் பணம் போதாது. இன்றைக்கு டெய்லி அலவன்சாக 250 ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள். அதை நாங்கள்



வரவேற்கிறோம். ஒரு நாளைக்கு ஒரு காரை எடுத்துப் போனால் ஆயிரம் ரூபாய் ஆகிறது. நான் கடனாளி ஆனதே இந்தக் காரினாலேதான். ஆகையினாலே அந்த 9,000 ரூபாய் என்பதை,--மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் சேர்த்துத்தான் சொல்கின்றேன், 9,000 ரூபாய் என்பதை-- 10,000 ரூபாய் என்று அறிவித்தால் குறைந்தா போய்விடும்?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** *உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** *சீக்கிரம் பேசி முடித்து விடுகிறேன்.* 15,000 கோடி ரூபாய்க்குமேல் நீங்கள் இன்று திட்டங்களைப் போட்டு, இன்றைக்கு நாங்கள் அதை நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்றோம். நீங்கள் சொல்வதற்கெல்லாம்கூட, ஒரு சின்ன கோளாறு இல்லாமல் நாங்கள் செயல்பட்டோம். நீங்களும் மகிமையோடு, பெருமையோடு அவற்றைக் கொண்டு வந்து இந்த சபையிலே வைத்தீர்கள். நாங்கள் மிகவும் ஆவலோடு அவற்றையெல்லாம் நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்றோம். ஆகையினாலே, தயவுசெய்து அவைகளை மட்டும் நீங்கள் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இல்லையென்று சொன்னால், நாங்கள் போராட்டம் நடத்துவோம். இதை நான் சொல்லவில்லை, எம்.எல்.ஏ.க்கள், 'அப்புறம் எங்களுக்குத் தெரியாது, உங்களை விடமாட்டோம்' என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள். காருக்குக் கடன் தந்தால், எங்களுக்கு Repaying Capacity உண்டு. நாங்கள் கடனைத் திருப்பிக் கொடுத்து விடுகிறோம். எங்களுக்கு Repaying Capacity உண்டு. அதனால் எங்களுக்கு காருக்குப் பணம் கொடுத்துவிட வேண்டும் என்பதை மட்டும் சொல்லிக் கொள்கின்றேன்.

இன்னும் பல கோரிக்கைகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் நான் எழுத்து மூலமாக எல்லோருக்கும் எழுதிக் கொடுத்துவிடுகின்றேன். அந்த வேலைகளை எல்லாம் நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், சிறப்பான முறையிலே இந்தச் சட்டமன்றம் நடந்தது. ஒரு சின்ன அசம்பாவிதம்கூட இல்லை. ஒரு கடுகளவு கோபம்கூட இல்லை. அப்படி இந்தச்

சபை நடந்ததற்காகவும், ஒரு மூத்த உறுப்பினர் என்ற முறையிலே நான் அதற்காக எல்லோருக்கும் என்னுடைய பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் சொல்லி, முடித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. மனோகரன்):** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர், திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நிதியொதுக்கச் சட்டமுன்வடிவின்மீது நடைபெறும் விவாதத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதித் துறையின் பொறுப்பை தான் ஏற்றுக்கொண்டதன் பேரில், அனைத்துத் துறைகளையும் தன் துறையாக ஏற்றுக்கொண்டு, அனைத்து அமைச்சர்களுக்கும், விளக்கம் அளித்து அவர்களுடைய கோரிக்கைகளையும், பல பேரவை உறுப்பினர்கள் கேட்கிறபோது அவர்களுக்கும் ஆலோசனை கூறி, அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றக் கூடிய விதத்தில் கவனித்து வருகின்றார்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இந்தச் சட்டப் பேரவையினுடைய இறையாண்மையை, சட்டப் பேரவையினுடைய கட்டுப்பாட்டை காபந்து பண்ணி, மிகச் சிறந்த முறையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையை நடத்திச் செல்வதெல்லாம் இந்தச் சபைக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் பெருமை தேடித் தரக்கூடியதாகும் இந்த அளவுக்கு சட்டப் பேரவைக் கூட்டத் தொடர் என்பது சிறப்பாகவே நடந்துள்ளது என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மனதார நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்னும் இரண்டு தினங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, பவள விழா காண்கின்ற முதலமைச்சர் அவர்களை தமிழ்நாட்டு மக்களே வாழ்த்த இருக்கிறார்கள். நீங்கள் இன்னும் பல ஆண்டுக்காலங்கள் வாழ்ந்து தமிழ்நாட்டு மக்களுக்குச் சேவைகளை செய்வதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டு மக்களுடைய நலனைக் காப்பாற்றுவதற்காக நீங்கள் நோய் நொடியில்லாமல் வாழவேண்டுமென்று வாழ்த்துவதற்கு தமிழ்நாட்டு மக்கள் இருக்கிறார்கள். அதோடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் வாழ்த்து கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.



பிற்பகல் 12-15

இன்றைக்கு, இந்தியாவிற்குப் பெருமை சேர்க்கும் விதத்தில் அணுகுண்டு சோதனை நடந்து, அண்டை நாடுகள் எல்லாம் ஆச்சரியத்தோடு நம்மைப் பார்க்கின்றன. அச்சுறுத்தி வந்த அந்த அண்டை நாடுகள் எல்லாம் இந்தியா இப்படிப்பட்ட நாடாக இருக்கிறதா? என்று பல கண்டனக்குரலை எழுப்பக்கூடிய அளவுக்கு இந்திய நாட்டினுடைய விஞ்ஞானிகள் மிகச் சிறந்த முறையிலே அணுகுண்டுச் சோதனையை நடத்தியிருக்கின்ற பெருமையை, இந்திய நாட்டில் பிரதானமாக இருக்கின்ற தமிழ்நாடு மாநிலத்தின் சார்பாக இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக அந்த விஞ்ஞானிகளை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்; இதுபற்றிய விவாதங்கள் நாடாளுமன்றத்தில் இப்போது இரண்டு தினங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்லாமல், இந்த அணுகுண்டுச் சோதனையால் அண்டை நாடுகளுடனான நல்லுறவு ஒரு வகையில் பாதிக்கப்பட்டு இருக்கிறது. அண்டை நாடுகளுடைய நிதிநிலை ஆதரவை எதிர்பார்த்து, இந்தியா மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநிலங்களில் நலத் திட்டங்களைப் பற்றி சட்டமன்றத்தினுடைய நிதிநிலை அறிக்கையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டிலேகூட, சமூக நலத் துறை, ஊரக வளர்ச்சித் துறை வேளாண்மைத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை போன்ற துறைகளில் இன்றைக்கு அந்த நிதியை எதிர்பார்த்து பல்வேறு திட்டங்களை நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

***(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)***

இன்றைக்குப் பத்திரிகையிலே பல்வேறு செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அண்டை நாட்டினுடைய நல்லுறவு கெட்டுப் போனதன் மூலமாக நிதி வருவதிலே தேக்கம் ஏற்பட்டு இருக்கிறது. ஆக, அந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படுமா? குடிநீர் திட்டங்கள் நிறைவேற்றப்படுமா? சமூக நலத் திடடங்கள் நிறைவேற்றப்படுமா? என்கிற அச்சம் பத்திரிகையிலே செய்திகளாக வந்து கொண்டிருக்கின்றன. அண்டை நாட்டிலிருந்து வரக்கூடிய நிதி உதவி வராவிட்டாலும்கூட, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதையெல்லாம் தொடர்ந்து சமாளிப்பார்கள் என்கிற நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு. அந்த வகையில்

[திரு. ஜி. பழனிசாமி] [1998 மே 28

பல்வேறு திட்டங்கள்; பல்வேறு துறைகளிலே நாம் அதற்காக நிதியை ஒதுக்கியிருந்தாலும்கூட, அவை உடனடியாக தேக்கமின்றி நிறைவேறுவதற்காக, அரசு அலுவலர்களும், அந்தந்தத் துறைகளும் விரைந்து செயல்படுவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, காவிரி நதிநீர்ப் பிரச்சினை. மத்தியிலே இன்றையதினம் புதிய ஆட்சி பொறுப்பேற்று இருக்கிறது. காவிரி நதிநீர் பிரச்சினையில் 1989-ஆம் ஆண்டே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, கடந்த 75 ஆண்டுக்காலமாக தீர்க்க முடியாத அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதற்காக, காவிரி நடுவர் மன்றத்தின் மூலம் இடைக்காலத் தீர்ப்பைப் பெற்று, தொடர்ந்து அணுகி காவிரி நதிநீர் பிரச்சினையில் இடைக்காலத் தண்ணீரைப் பெற்று, இன்றைக்கு விவசாயிகள், விவசாயத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அந்தவகையில், வரக்கூடிய ஆண்டிலும் நம்முடைய காவிரி நதிநீரை ஜூன் மாதம் 12-ஆம் தேதி அமைச்சர் அவர்கள் விடுவதாக அறிவித்திருந்த போதிலும்கூட, மத்திய அரசை அணுகி, காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் இடைக்காலத் தீர்ப்பின் மூலம் தண்ணீர் வருவதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், காவிரிப் பாசனக் கால்வாய்களைத் தூர் எடுக்கிற பணி சமீபத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆக, ஜூன் மாதம் 12 ஆம் தேதி அந்தத் தண்ணீரை விடுவதாக அறிவித்திருந்தாலும்கூட, அதை 20 ஆம் தேதி வரையிலாவது நீங்கள் ஒத்தி வைக்க வேண்டும். ஏனென்றால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள் ஆண்டுதோறும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறபோது, கால்வாய் சரி இல்லை என்பதால் அதன்மூலமாக பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நிலை மாற கொஞ்ச காலங்கள், அதாவது ஒரு வாரம் ஒத்திவைத்தால், அந்தப் பணிகள் ஓரளவுக்கு நிறைவு பெற்ற பின்னர், நீங்கள் காவிரித் தண்ணீரை மேட்டூரிலிருந்து திறப்பது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.



1998 மே 28] [திரு. ஜி. பழனிசாமி]

அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, ஓய்வூதியம் பெறுகின்ற ஓய்வூதியக்காரர்களுக்கு முதல் ஆண்டு 20 சதவிகிதம், இரண்டாவது ஆண்டு 20 சதவிகிதம், 5 ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்களுடைய ஓய்வூதியத் தொகையை வழங்கக்கூடிய முறை இன்றைய தினத்திலே இருக்கிறது. 5 ஆண்டுகளுக்குப் பிறகு, ஓய்வூதியம் பெறக்கூடியவர்கள், அநேகமாக உயிரோடு இருப்பார்களா என்றுகூட சில சந்தேகங்கள் இருக்கின்றன. இன்னும் எதிர்பார்க்கிறார்கள். தங்களுடைய மகனுடைய திருமணம், மகளுடைய திருமணம் ஆகியவற்றை இந்த ஓய்வூதியத்தின் மூலம் வரக்கூடிய பணத்தை வைத்து, நடத்தி முடிக்கலாம் என்று ஆதங்கத்தோடு இன்றையதினம் சில பேர்கள் இருக்கிற காரணத்தால், இதை இரண்டு ஆண்டுகளுக்கு நீட்டித்து, அனைத்தையும் வழங்குவது சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

பிற்பகல் 12-20

அதேபோல் கூட்டுறவுக் கடன் சம்பந்தமாக, இன்றைக்குத் தவணை தவறிய கடன்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. வட்டிகளை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட, அனேகமாக சட்டமன்றக் கூட்டம் முடிந்தபின்னால், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று இன்றைக்கு விவசாயிகள் அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நிலுவையில் 40 சதவீதம் வசூல் செய்தால்தான், மீண்டும் கடன் கொடுக்கலாம் என்ற நிலை இருக்கிறது. ஆகையினாலே, 10 சதவீதம் மட்டும் வசூல் செய்தால், கூட்டுறவுச் சங்கங்கள் மீண்டும் கடன் வழங்கலாம் என்ற நிலையைக் கொண்டு வரவேண்டும். இதைப்பற்றி நாடாளுமன்றத்திலே இன்றையதினம் விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. பல மாநிலங்களில் வேதனையால் பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகள் இறந்துபோன நிலைகளை எல்லாம் இன்றையதினம் நாடாளுமன்றத்திலே விவாதித்துக் கொண்டு இருக்கிறார்கள். பாரதப் பிரதமரும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிற செய்திகூட வந்து கொண்டிருக்கிறது. எனவே, கூட்டுறவுச் சங்கக் கடனில் 10 சதவீதம் வசூல் செய்தால், மீண்டும் கடன் வழங்கலாம் என்ற நிலையை நீங்கள் கொண்டு வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக பேண்டேஜ் துணி. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் சொக்கர் அவர்களுடைய சிவகாசி தொகுதியிலும், மாண்புமிகு உறுப்பினர் வி.பி. ராஜன் அவர்களுடைய ராஜபாளையம் தொகுதியிலும்தான் இந்த பேண்டேஜ் துணி உற்பத்தியாகிறது. அவர்கள் நேற்றையதினம் சென்னையிலே உண்ணாவிரதம் இருந்தார்கள். ஏற்கெனவே 25 இலட்சம் ரூபாய் வரையிலும் அதனுடைய உற்பத்தியைச் செய்யக்கூடியவர்களுக்கு இதுவரையிலே வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அதை 50 இலட்சமாக உயர்த்திக் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள், இந்த 8 சதவீதம் வரி மூலமாக. இதுவரையில், வணிகவரித் துறையில் இதுபோன்ற ஒரு வரி வசூல் இருக்கிறது என்றே வணிகவரித் துறைக்குத் தெரியாமல் இருந்திருக்கிறது. ஆகவே, இதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஏ-1 சிட்டி. சென்னை, ஏ-1 சிட்டியாக அறிவிக்கப்பட்டதால், மத்திய அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி உயர்த்தி வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால், மாநில அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படவில்லை. அதை வழங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று நம்முடைய மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நான் அவருடைய கவனத்திற்காகக் கொண்டு வருவது, ஓட்டல் உரிமையாளர்கள், தங்களுடைய வரியைச் சீரமைக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதன்மூலமாக வணிகவரித் துறை அதிகாரிகளுக்குத்தான் அதிக லாபம் கிடைக்கிறதே தவிர, ஓட்டல் மூலமாக அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரியைவிட அதிகாரிகளுக்கு வரக்கூடிய வணிக வரிதான் அதிகமாக இருக்கிறது. இதைப்பற்றி ஓட்டல் உரிமையாளர்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோல், வேலையற்ற இளைஞர்கள் பல இலட்சம் பேர்கள் கேபிள் டி.வி.யை நடத்தக்கூடிய தொழிலில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அதிலேகூட, நகரம், பேரூராட்சி, கிராமம் என்று சொல்லி, 10 ஆயிரத்தை 5 ஆயிரமாக ஆக்கி, 5 ஆயிரத்தை 2



ஆயிரமாக ஆக்கி, ஒரு இணைப்புக்கு 10 ரூபாய் எனபதை 5 ரூபாயாக ஆக்கினால், நாங்கள் முழுமையாகக் கட்டிவிடுகிறோம் என்ற கோரிக்கையை இன்றைய தினத்திலே வைத்திருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதத்திலே கலந்துகொண்டு பேச அனுமதித்த உங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரிச் சலுகையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாட்டுத் தீவனத்திற்கு வரி முழுமையாக விலக்கு அளிக்கப்படும் என்று கூறியபோதிலும், இன்னும் அதிகாரிகள் சிலர் இதில் நொண்டிச் சமாதானங்களைக் கூறிக்கொண்டு மாட்டுத் தீவனத்திற்கு முழு வரி விலக்கு அளிக்கவில்லை. இதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சேலம் மாவட்டத்திலே இருக்கின்ற சூசகோசம் என்ற ஸ்தாபனத்திற்கு விதிக்கப்படுகின்ற Additional Tax அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்தக் கூடுதல் விற்பனை வரியை நீக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் குறித்து சென்ற ஆண்டு இந்த அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதை அவருடைய ஞாபகத்திற்கு நான் கொண்டு வருகிறேன். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் ஒரு உதவியாளர் அவசியம் கொடுக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் கேட்டபோது, முதல்வர் அவர்கள், இந்த அவையிலே கூறினார்கள். அனைத்தையும் இந்த ஆண்டே அறிவித்துவிட்டால் அடுத்த ஆண்டு அறிவிப்பதற்கு என்ன இருக்கிறது என்று கூறினார்கள். ஆகவே, இதை மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும். ஏன் என்றால், ஒரு உதவியாளருக்கு கிட்டத்தட்ட 2 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். அதைக் கணக்கிலே வைத்தால்கூட, நீங்கள் ரூ. 1000 சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்திருக்கிறீர்கள். ஆக, அந்த உதவியாளரை கண்டிப்பாக

நீங்கள் நியமிப்பதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அடுத்த ஆண்டு என்று சொன்னது, 'இன்று ரொக்கம், நாளைக் கடன்' என்று சில கடைகளில் எழுதப்பட்டிருக்குமே, அதுபோல. *(சிரிப்பு).*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இதையெல்லாம் பார்க்கும்போது இந்தச் சட்டமன்றத்திலே அறிவிப்புகள் அனைத்துமே அறிவிப்புகளாகத் தான் இருக்கிறதேயொழிய, எதையுமே இந்த அரசு செய்யவில்லையோ என்ற கவலைதான் இன்றைக்கு இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், சென்ற கூட்டத்தொடரிலே பல அமைச்சர்கள் இந்த அவையிலே எனக்கு உறுதி கூறி இருக்கிறார்கள். வெண்ணாந்தூர் ஒன்றியத்திலே போதமலையிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும் என்று சென்ற ஆண்டு கூறி, இந்த ஆண்டும் அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். இதுவும் நடக்குமோ, நடக்காதோ தெரியவில்லை.

அடுத்தபடியாக வடுகம் கிராமத்திலே ஒரு கால்நடை ஆஸ்பத்திரி கேட்டிருந்தேன். சென்ற ஆண்டே அதைக் கேட்டிருந்தேன். அதுவும் இதுவரையில், இந்த ஆண்டுகூட கொடுக்கப்படவில்லை. அதைப்போல பல பணிகள் எங்களுடைய பகுதிக்காகக் கேட்டிருந்தேன், கொடுக்கப்படவில்லை. உதாரணத்திற்கு சட்ட அமைச்சரிடம் நீதிமன்றங்கள் கேட்டேன் இப்படி ஒவ்வொன்றையும் கேட்டதற்குப் பிறகும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிற்துறையில்கூட நான் பேச இருந்தேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் என்னைப் பேச அனுமதிக்காமல் வெளியேற்றிவிட்ட காரணத்தினால் தொழில் துறையில் நான் பேச வேண்டிய கருத்தினை இங்கே பேசுவது சிறப்பாக இருக்குமென்று நினைக்கின்றேன். சென்ற ஆண்டு இந்த அவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஒரு வாக்குறுதிப் பெற்றேன். ராசிபுரம் பெயரில்தான் ராசிபுரமாக இருக்கிறதேயொழிய மற்றவைகளில் ராசி இல்லாத புரமாக இருக்கின்றது. ஆகவே, அங்கு ஒரு தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டேன். அந்த நேரத்திலே





கண்டிப்பாக அங்கே தொழிற்சாலை அமைக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் உறுதி கூறினார்கள். எந்தக் காலக்கட்டத்திலே?

ஒரு நிகழ்வினை முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். மகாபாரதப் போரை எல்லாம் அவர்களுக்கு நினைவுகூர்ந்தேன். அவர்களுக்கு ஞாபகம் இருக்குமென்று நினைக்கின்றேன். பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமிடையே ஒரு நேரத்திலே பிரச்சினை ஏற்பட்டபோது அந்தப் பாண்டவர்கள் கௌரவர்களிடம் கேட்டார்கள். நாங்கள் குடியிருப்பதற்கு 5 கிராமங்களை எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்டார்கள். அது மறுக்கப்படுகிறது. அடுத்தபடியாக 5 வீடுகளாவது கொடுங்கள் என்று கேட்டார்கள். அதுவும் கொடுக்க மறுக்கப்படுகின்றது. அதற்குப் பிறகு 5 அடி நிலமாவது வேண்டுமென்று கேட்டு, அதுவும் மறுக்கப்பட்டு, குத்தூசி குத்துவதற்குக்கூட இடம் கொடுக்க முடியாது என்ற காரணத்தினால்தான் மகாபாரதப் போரே நடந்தது என்பது உங்களுக்கெல்லாம் தெரியும் என்று நினைக்கின்றேன். இவ்வளவெல்லாம் கூறியதற்குப் பிறகும், கண்டிப்பாக ராசிபுரத்தில் ஒரு பெரிய தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் கூறியதற்குப் பிறகும், அங்கே இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழிற்சாலை ஆரம்பிப்பதில் சிறிது காலதாமதம் ஏற்படுகிறது. அந்தத் தொழில் வளாகத்திலே தொழில் முதலீட்டுக் கழகத்திலே சென்று நான் கேட்டேன். நீங்கள் தொழில் முனைவோர்கள் கருத்தரங்கு நடத்துங்கள் என்று நம்முடைய மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டேன். அவர்கள் நடத்துவதாகக் கூறினார்கள். அங்கேயிருக்கின்ற அதிகாரிகளிடம் கேட்டேன், ஒரு கருத்தரங்கு நடத்துவதற்குக்கூட எங்களுக்கு இப்போது நிதி வசதி இல்லை என்று கூறிவிட்டார்கள். நான் கேட்கின்றேன். நான் இந்த அரசைக் கேட்கின்றேன். இதைத்தான் நான் கூறிக்கொண்டிருக்கிறேன். இது செயல் இழந்த அரசு, தூங்கிக்கொண்டிருக்கின்ற அரசு என்று நான் அடிக்கடி கூறுவதற்குக் காரணம், இது ஒன்றிலிருந்தே நீங்கள் தெரிந்து கொள்வீர்கள் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு பெரிய தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் வாக்குறுதி கொடுத்ததற்குப் பிறகும், அங்கே தொழில் முனைவோர்களின் கருத்தரங்கே நடத்தப்படவில்லை என்றால், நீங்கள் எப்போது

தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறீர்கள்? நீங்கள் சொன்ன வாக்குறுதியை எப்போது நிறைவேற்றப் போகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த கோவை குண்டு வெடிப்பு சமாச்சாரத்தைப் பொறுத்தவரையில், முதல்வர் அவர்கள் முதலில் திரு. அத்வானி அவர்களைக் கொல்வதற்கு வைக்கப்படவில்லை என்றார்கள். அதற்குப் பிறகு திரு. அத்வானியைக் கொல்வதற்குத்தான் வைக்கப்பட்டது எனறு வெள்ளை அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். அதைத்தான் நாங்கள் கேட்கின்றோம். இதற்கு உடனடியாக CPI விசாரணை வைக்கவேண்டுமென்று நாங்கள் ஏற்கெனவே கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அடுத்தபடியாக, நான் கேட்டுக்கொள்வது, இந்த சந்தன மரக்....

**திரு. ஜி. பழனிசாமி:** அவர்கள் வழக்கு இருக்கிறதே, சாதாரண வழக்கு இல்லை. நாங்கள் எல்லாம் போய் விசாரணை செய்யமுடியாது. அவர்கள் தொடர்ந்து எங்களையே கூப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** CPI அல்ல அது. C.B.I.

*பிற்பகல் 12-30*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்தபடியாக, ** நல்ல அதிகாரிகள் இங்கே இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா என்றுகூட முதல்வரவர்கள் கூறினார்கள். நான் தெளிவாகக் கூறுகின்றேன். **

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு தலைமைச் செயலாளரைப் பற்றி- ஊழலுக்கே சொந்தக்காரர்கள், கோடி கோடியாகக் கொள்ளை அடித்தவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி), நாட்டு மக்களுக்குத் தெரிந்தே இலஞ்சம் வாங்கியவர்கள், பொறுப்புள்ள ஒரு தலைமைச் செயலாளரைப பற்றி--இப்படிப் பொறுப்பற்ற முறையிலே பேசக்கூடாது. அது அவைக்குறிப்பிலும் இடம் பெறக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் சுந்தரம் அவர்கள் தலைமைச் செயலாளர் அவர்களைப்பற்றிக் குறிப்பிட்டது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** அமைச்சர் பேசியது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்,. முதலிலே. திரு. சுந்தரம் பேசட்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) பொதுவாக ஒரு மரபு இருக்கிறது, உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நான் தலைமைச் செயலாளர்மீது அபாண்டமாகக் குற்றம் சுமத்தவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரும்பத் திரும்ப அதையே சொல்லக் கூடாது.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அரசு அலுவலர்கள் இப்பொழுது இந்த அரசாங்கத்தில் செய்கிற செயல்களைப்பற்றிப் பேசலாமே தவிர, வேறு எதைப் பற்றியும் பேசுவதாக இருந்தாலும் முன்கூட்டி, தங்களிடத்தில் அதற்கான ஆதாரங்களைக் கொடுத்துவிட்டு, தாங்கள் அனுமதித்தால்தான் பேசலாம். அதுதவிர, அவர்களைப் பற்றி ஆதாரம் இல்லாத செய்திகளைப் பேசி ஓர் அவதூறை இந்த அவையில் ஏற்படுத்துவது முறையல்ல. அதைத் தாங்கள் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு நான் அனுமதித்த நேரம் முடிந்துவிட்டது. இன்னும் 1 நிமிஷம் அதிகமாகத் தருகிறேன். பேசி முடியுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அடுத்தபடியாக, இந்த வீரப்பனைப் பொறுத்தவரையில் நாங்கள் ஏற்கெனவே பல தடவை கூறியிருக்கிறோம். நேற்றைக்குக்கூட 4 பேரைக் கைதிகளாக வைத்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், ஒரு பத்திரிகை ஆசிரியர் அவரைச் சென்று சந்திக்கின்றார். அவர் சென்று சந்தித்து ஒரு கேசட்டை வாங்கிக் கொண்டு வருகிறார்.

அப்படியிருக்கும்பொழுது உங்களால் ஏன் இந்த வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை. கேட்டால், நீங்கள் 5 ஆண்டு என்ன செய்தீர்கள் என்று நீங்கள் கேட்பீர்கள். நாங்கள் கிட்டத்தட்ட 115 நபர்களாக இருந்த அந்தக் கூட்டத்தைக் குறைத்து இன்றைக்குக் கிட்டத்தட்ட 7 நபர்களாக அவர்கள் இருக்கக்கூடிய சூழ்நிலையை நாங்களெல்லாம் செய்திருக்கிறோம். ஆனால், இதைப்பற்றி முன்னாள் உள்துறை அமைச்சரவர்கள்கூடக் கூறியிருக்கின்றார்கள். பத்திரிகை நிருபர்களெல்லாம் சென்று பார்க்கும்பொழுது, ஏன் இவர்களால் பிடிக்க முடியவில்லை என்று கூறியிருக்கிறார். கர்நாடக முதலமைச்சரவர்கள்கூட, தமிழக அரசு எங்களுக்குச் சரியாக ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை என்று அதனுடைய உள்துறை அமைச்சரவர்களேகூட கூறியிருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் பார்க்கும்பொழுது உங்களுக்கு ஆதரவு கொடுத்த வீரப்பனைப் பிடிப்பதற்காக உங்களுக்குள் ஏதோ ஒரு பேரம் பேசப்படுகிறதா? நீங்கள் ஏன் இன்னும் பிடிக்காமல் இருக்கிறீர்கள்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுவரையில் நாம் ஒப்புதல் அளித்த மானியங்களுக்கு எல்லாம் நிதி ஒதுக்கீடு செய்யக்கூடிய சட்டப்பூர்வமான நடவடிக்கையை இன்றைக்கு மேற்கொள்வதின் வாயிலாக இந்த நிதிநிலை அறிக்கையின்மீது சட்டமன்றம் மேற்கொண்டிருக்கிற பணி இன்றைக்குச் செவ்வனே நிறைவேறுகிறது. அது நிறைவேறுவதற்குரிய இந்த காலகட்டத்தில் நாங்கள் வைத்த கோரிக்கையில் ஏதாவது கொஞ்சம் தொய்வுகள் ஏற்பட்டிருக்குமானால், நாங்கள் சொல்லத் தவறிய காரணத்தினால் அல்லது சொல்ல வேண்டிய முறையில் சொல்லி மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கனிவான இதயத்தில் நாம் நமக்குரிய அனுதாபத்தை முழுமையாக ஏற்படுத்த முடியவில்லை என்ற நிலையின் அடிப்படையில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லி இந்தக் குறையைப் போக்கிக்கொள்வதற்கு நான் நிற்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பெருமைக்குரிய பொன்னம்மாள் அவர்கள் நேற்றைக்கு வேறு கருத்தைச் சொன்னாலும், இன்றைக்கு உரிய கருத்தை, உண்மையான கருத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். எனவே, அதைக் கருத்திற்கொண்டு,



கருத்தாழம் மிக்க நம்முடைய உள்ளங்களையெல்லாம் அறிந்தது மட்டுமல்ல; நாட்டு எண்ணங்களையும் புரிந்தவர்; நாட்டு நிலைமைகளையும் அறிந்தவர். எனவே, அந்த வகையில் கொஞ்சம் குறைவாகத் தெரிகிறது. அந்தக் குறையைப் போக்கும்வகையில் தயவு செய்து ரூ. 9 ஆயிரம் என்று அறிவித்திருப்பதை-அது எந்தக் கணக்கை வைத்துப் போட்டார்களோ தெரியவில்லை; ஆந்திராவிலே ரூ. 18 ஆயிரம், அதிலே 50 பர்சென்ட் இது, தமிழ்நாட்டிலே இருக்கட்டும் என்று முதல்வரவர்கள் நினைத்தாரோ என்னமோ தெரியவில்லை. தயவுசெய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னும் கொஞ்சம் மகிழ்ச்சி ஏற்படக்கூடிய அளவுக்கு அதை உயர்த்த வேண்டும். அந்தச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

தொகுதியிலே ஒரு உதவியாளர் வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். எனவே, அருள்கூர்ந்து, அந்த உதவியாளரை இந்த ஆண்டிலேயே கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டும். தொகுதியிலே அலுவலகம் ஏற்படுத்துவதற்கு நேற்றையதினம் அவர்களுடைய கனிவான இசைவைத் தந்திருக்கிறார்கள். ஆனால், கட்டடம் கட்டுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகக்கூட ஆகும். அதுவரையில், கட்டடம் கட்டுவதற்கு முன்பு கட்டுப்பாடான வேலைகள் நடைபெறுவதற்காக ஒரு அலுவலரையும் தருவதற்கு உடனடியாக உத்தரவிட வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், எங்கள் பகுதியைப் பற்றிச் சில கோரிக்கைகள். பச்சைக்குப்பம் இருப்புப்பாதை. அந்த இருப்புப் பாதையிலே இருக்கக்கூடிய இடர்பாடுகள், சென்னையிலேயிருந்து கேரளா போகக்கூடிய, பெங்களூர் போகக்கூடிய வண்டிகளெல்லாம் மணிக்கணக்காக நின்றுதான் போக வேண்டுமென்ற நிலைக்கு தொடர்ந்து ஆளாகின்றன. எனவே, அந்தப் பச்சைக்குப்பம், பச்சையாகச் சொல்ல வேண்டுமானால் நாங்கள் மிகவும் வேதனைக்குள்ளாகி இருக்கிறோம். எனவே, அந்தப் பச்சைக்குப்பத்திலே ஒரு மேம்பாலமோ அல்லது வேறுவகையிலோ வாகனங்கள் நிற்காமல் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 மே 28

அதே நேரத்தில், இங்கிருந்து தப்பிவிட்டால், வாணியம்பாடியைக் கடந்தவுடனே, புதூரிலே நிற்க வேண்டிய நிலை. பேரதான புதூரே தவிர, வண்டிகள் நிற்பதைப் பொறுத்தவரை அது மிகப் பழங்காலத்திலேயிருந்து தொடர்ந்து வருகிறது. எனவே, அது குறித்தும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இன்னொன்று, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். நேற்றையதினம் எனக்குப் பேச வாய்ப்பு கிடைக்கவில்லை. அவர்களும் நேற்றையதினம் விட்டுப்போன குறைகளையெல்லாம் இன்றைக்குத்தான் நிறைவு செய்யும்வகையில் சொல்லியிருக்கிறார்கள். வாணியம்பாடியிலே நடுவூரிலே--வாணியம்பாடியைப்பற்றித் தெரிந்தவர்கள் அறிவார்கள். பாலாறு குறுக்கே ஓடுகிறது. மனிதர்கள் நடந்து சென்றுகூட போய்விடலாம். கிழக்குப் பகுதியையும், மேற்குப் பகுதியையும் சரியாகப் பிரிக்கிறது. கிழக்குப் பகுதியிலேதான் இரயில் நிலையம் இருக்கிறது, பஸ் நிலையம் இருக்கிறது, நெடுஞ்சாலை இருக்கிறது. மேற்குப் பகுதியிலே இருக்கின்ற கிராமங்களில் இருந்து எல்லாம் பஸ் நிலையத்திற்கு, இரயில் நிலையத்திற்கு வர வேண்டுமானால், இந்த ஆற்றைக் கடந்துதான் வரவேண்டும். இந்த ஆற்றிலே 1914-லே கட்டப்பட்ட ஒரு பாலம், அந்தப் பாலம் திடீரென்று இடிந்து இன்றைக்கு இடைவெளி ஏற்பட்டுவிட்டது. அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் இந்தப் பக்கம் வர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாலத்திற்கு முன்னுரிமை வழங்கி அந்தப் பாலம் கட்டப்பட்டால்தான் இரு பக்கங்களிலும் இருக்கின்ற மக்கள், அவர்களுக்கு இருக்கக்கூடிய இடைவெளியை அதிகமாக உணராமல் ஒரே ஊர் என்கிற நிலையில் அவர்கள் இருப்பார்கள். வாணியம்பாடி நகரம் மட்டுமல்ல, மேற்குப் பகுதியிலே இருக்கின்ற பல்வேறு கிராமங்களிலேயிருந்து கிழக்குப் பகுதிக்கு வர வேண்டுமென்றால், இந்த ஒரு பாலம்தான் இணைப்புப் பாலம். எனவே, இது குறித்து அரசு தீவிரமாகச் சிந்தித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். வாணியம்பாடி நகரமன்றத்திற்குட்பட்ட பகுதியில் அந்தப் பாலாறு ஓடுகிறது. எனவே, அந்த இடிந்த பாலத்தையும் அங்கே...(மணியடிக்கப்பெற்றது) பெரிய ஆறு என்று சொல்லக்கூடிய பாலாற்றினுடைய இன்னொரு பாலத்தையும் 1974-லே முதலமைச்சர்தான் CRF-Central Reserve Fund-லிருந்து வழங்கி,



1998 மே 28] [திரு. ம. அப்துல் லத்தீப்]

அங்கே ஒரு பாலம் கட்டப்பட்டது. அப்படிப் பாலம் கட்டுவதற்கு, பெங்களூர், ராமாபுரம், ஆரிமாணிபெண்டா, வெள்ஷிமாணிபெண்டா, ஜாபராபாத், வாணியம்பாடி, ஆலங்காயம், ஜமனாமரத்தூர், நம்முடைய திருவண்ணாமலை இந்த வழியாக பாண்டிச்சேரிக்கு தேசிய நெடுஞ்சாலை என்று அப்போது அறிவித்தார்கள். பெங்களூர் டு பாண்டிச்சேரி, அதற்காகத்தான் பாலமே அன்றைக்கு வழங்கப்பட்டது. அந்தப் பாலம் இருக்கின்றது. தேசிய நெடுஞ்சாலையாகவும் அது அறிவிக்கப்பட்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இந்தப் பாலத்தைப் பொறுத்தவரை அந்த நெடுஞ்சாலையில் வருகிறது. எனவே, தயவுசெய்து, அதற்கு ஏற்பாடு செய்து, அந்தப் பாலத்தை கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு கோடியே 35 இலட்சம் ரூபாயிலே அவர்கள் இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கி நகர்மன்றத்தின் சார்பாக அதை அறிவித்திருக்கிறார்கள். அதை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தேசிய நெடுஞ்சாலை என்று அது ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. எனவே, அதைச் செய்ய வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நகரம் இரண்டு பாதியாகப் பிரிந்திருக்கிறது. எனவே இதை தயவுசெய்து செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்னும் இரண்டு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன். நீங்கள் மணி அடிக்க, அடிக்க...

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள்தான் ஒத்துழைக்கிறேன் என்று சொல்லிவிட்டீர்களே?

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இன்னும் இரண்டு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் நீங்கள் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வனத் துறையைப் பொறுத்தவரையில் நான்

வனத் துறையினரை கேட்டுக்கொள்வது என்னவென்றால் இப்போது வெள்ளக்கல் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுவிட்டது. அந்தத் துறையினரும் அதற்கு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். ஆனால், உங்களுடைய தயவு இருந்தால்தான், நீங்கள் விரைந்து அதை ஒப்படை செய்தால்தான், நாங்கள் எங்களுடைய பணியைத் தொடங்க முடியும் என்ற நிலை உள்ளது. எனவே, தயவுசெய்து இப்போது இருக்கின்ற நிலையிலே, நீங்கள் உங்களுடைய ஒப்புதலைத் தந்து உடனே வெள்ளக்கல் திட்டம் நிறைவேறும் வகையிலே நீங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சந்தனத் தொழிற்சாலை திட்டத்திற்கு ஒப்புதலை அளித்திருக்கிறார்கள். கிட்டாக் கனியான அது இப்போது நமக்குக் கிடைத்திருக்கிறது. அதைச் சீக்கிரம் சுவைக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். வனத் துறையிலே இருந்துதான் அதற்கான ஒப்படைகளை எல்லாம் நீங்கள் செய்ய வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதைச் செய்யும்போது கொஞ்சம் comprehensive ஆகச் செய்தால்தான் viable unit-ஆக இருக்கும். ஏனென்றால் தெற்குப்பட்டு மாதிரி நீங்கள் இதையும் செய்துவிட்டீர்கள் என்றால், அதனாலே பலன் ஏற்படாது. சோப்பு, சந்தனத் தைலம், சந்தன பவுடர், என்று இப்படி சந்தனத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிற பொருட்களை எல்லாம் உற்பத்தி செய்கிற ஒரு தொழிற்சாலையாக அதை நீங்கள் ஆரம்பித்தால் அது ஒரு viable unit-ஆக இருக்கும் என்பதைக் கவனத்தில் கொண்டு அதன்படி முடிவுகளை எடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இடத்தைப் பார்வையிட்டு அதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பவள விழா காண்கிற இந்த நல்ல நேரத்தில் அவர்கள் நீடூழி வாழ வேண்டும் என்று இந்த அவையின் சார்பாக வாழ்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) அதன் நினைவாக எங்களுடைய வேலூரிலே வேலூர் பல்கலைக் கழகம் என்று ஒன்றை நீங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். சென்ற முறை சேலத்தில் ஆரம்பிக்கப்பட்டது



போல், இந்த முறை வேலூரிலே ஒரு பல்கலைக் கழகத்தை நீங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய விரிவாக்க மையத்தை சேலத்தோடு இணைத்து 18 ஆண்டுகளுக்கு முன்னாலே வேலூருக்கு கொண்டு வந்ததை, நீங்கள் இப்போது பல்கலைக் கழகமாக மாற்றியமைத்துத் தந்து எங்களுக்கு ஒரு நல்ல கல்விப் பணியாற்றுவதற்கு வாய்ப்பினை அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. சொக்கர் சார்பாக ஒன்றைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே, திரு. சொக்கர் தொகுதியிலேயும், திரு. வி.பி. இராசன் தொகுதியிலேயும் இருக்கக்கூடிய நெசவாளர்கள் bandage cloth தயார் செய்கிறார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு பழனிசாமி அவர்கள் அதைப் பற்றி விரிவாகப் பேசினார்கள். அதிலே 25 இலட்சம் ரூபாய் வரை அந்த நெசவாளர்கள் விற்றால் அவர்களுக்கு 8 சதவீதம் என்று வரிவிலக்கு அளிக்கிறீர்கள். அதை 50 இலட்சம் வரை வரிவிலக்கு என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குமேல் போகும் என்று சொன்னால், அதாவது 50 இலட்சத்தைத் தாண்டினால் அந்தத் தொகைக்கு அவர்கள் 8 சதவீத வரியை கணக்கிட வேண்டும். ஒருவேளை 50 இலட்சம் வரை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் விலக்கு அளித்துவிட்டார்கள் என்று சொன்னால், 50 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஒரு ரூபாய்க்கு விற்றால்கூட அதிலிருந்து கணக்கு ஆரம்பிக்க வேண்டும். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 50 இலட்சம் ரூபாய்க்கு மேலே விற்றால்தான் வரி, அதற்குக் கீழே இல்லையென்ற ஒரு நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று நான் அவர்கள் சார்பாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, வெண்ணெய்க்கு 4 சதவீதம் வரி என்று இருக்கிறது. பிராண்டு இல்லாத வெண்ணெய்க்கு நீங்கள் 4 சதவீதம் வரி போடுகிறீர்கள். அதை முழுக்க முழுக்க தள்ளுபடி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீரப்பனைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். வீரப்பனைப் பற்றிப் பேசுவதற்கு

நிச்சயமாக திரு. சுந்தரத்திற்கு தார்மீக அடிப்படையிலே உரிமை இருக்கிறதா என்று கேட்டால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அவருடைய தலைவியால் ஐந்து ஆண்டுகாலம் அந்த வீரப்பனை பிடிக்கமுடியாமல் போனது. நான் போலீஸைப் பற்றி குறை சொன்னபோதெல்லாம் போலீசுக்காக எவ்வளவு வக்காலத்து வாங்கமுடியுமோ அவ்வளவு வாங்கினார். ஆக்ரோஷமாகப் பேசினார். நாங்களெல்லாம், அவனைப் பிடிக்கவில்லையே என்று சொன்னபோது, காவல் துறையைப் பற்றிக் குறை சொல்வதா என்றெல்லாம் இதே அவையிலே எங்களை ஏசினார்கள். காவல் துறையைப் பற்றி குறை சொல்லலாமா என்றெல்லாம் கேள்வி கேட்டவர்கள் இப்போது வேறுவிதமாகப் பேசுகிறார்கள்.

பிற்பகல் 12-45

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசும்போது அவர் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தார். நீங்கள் உங்கள் கருத்தைச் சொன்னீர்கள். அவர், அவர் கருத்தைச் சொல்கிறார். நீங்கள் உட்காருங்கள். திரு. சி. ஞானசேகரன், நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்றும் நாங்கள் கேட்டோம். இன்றும் நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். எங்களுக்கு எல்லாம் சட்டம் சொல்லிக் கொடுத்த பேராசிரியர் கிருஷ்ணசாமி அந்த வலையிலே போய் மாட்டிக் கொண்டிருக்கிறார். இப்போது பேராசிரியர் கிருஷ்ணசாமி, பாயும் புலி என்கிற நெற்றிக்கண் நிருபர், சந்திரன் என்கிற போட்டோகிராபர் போன்றவர்கள் எல்லாம் இப்போது மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். இது வீரப்பன் நாடகத்தின் கடைசி அத்தியாயமாக இருக்க வேண்டும். நாம் அவனை சிறைப்பிடித்து சிறையில் அடைப்பதற்குப் பதிலாக, அவன் இன்று மற்றவர்களை சிறை பிடிக்கிறான். நிருபர்கள் ஏதோ சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தால் அவர்களும் போய் மாட்டிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒன்றே ஒன்றைக் கேட்க விழைகிறேன். மாண்புமிகு முதல்வர் காவல் துறை அதிகாரிகளை, புலன் விசாரணை செய்பவர்களை, அதிரடிப்



படையினர் மூலம் ஏற்கெனவே மாட்டிக்கொண்டு அவனோடு உடன் சென்று பிறகு வந்திருக்கக்கூடிய ஆசிரியர் மணி போன்றவர்களை அல்லது நக்கீரன் கோபாலன் போன்றவர்களை நீங்கள் விசாரித்து, அவர்கள் உதவியோடு, வீரப்பன் எங்கு மறைந்திருக்கிறான் என்பதை அவர்கள் வாயாலேயே அறிந்து அவனைக் கண்டுபிடிக்க வேண்டும். அந்தப் பணியை நீங்கள் உடனடியாகச் செய்து, வீரப்பனை நீங்கள் உடனடியாகப் பிடிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஒரு முறை, உலகமே கடலாக மாறினாலும்கூட நான் சரண்டர் அடைய மாட்டேன் என்கிறான். ஒரு முறை, நான் சரண்டர் அடையப் போகிறேன் என்று சொல்லி முதலமைச்சருக்கு கேசட்டைக் கொடுத்து அனுப்புகிறான். இப்படி மாறி, மாறி இரட்டை வேடம் போடக்கூடிய அப்படிப்பட்ட வீரப்பனை, ஒரு குற்றவாளியை நாம் விட்டுவைப்பது நல்லதல்ல. இன்னும் அவன் இந்த அரசுக்கு சவாலாக இருக்கக்கூடாது. ஆகவே, உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும். அவனைப் பிடித்து சிறையில் அடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்புத் துறையைப் பற்றி மாண்புமிகு செல்லக்குமார் அவர்கள் விரிவாகப் பேசினார்கள். தீயணைப்புத் துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரி, ஊழல் செய்தவர், இன்று அதனுடைய தலைவராக இருந்து கொண்டிருக்கிறார். 5 கோடி ரூபாய்க்கான டெண்டரில், அதிக விலைக்குப் பொருள்களை வாங்கியதால் 23.20 இலட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதேபோன்று அக்செசரிஸ் வாங்கியதில் 17.72 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஊழல் என்பது நிரூபணமாகி இருக்கிறது. ஊழல் செய்தவர் அப்ரூவர் ஆகியிருக்கிறார் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்து இருக்கிறார். ஏற்கெனவே நமக்குத் தகுந்த ஆவணங்கள் இருக்கும்போது, சான்றுகள் இருக்கும்போது, அப்ரூவர் ஒருவரை வைத்துத்தான் வழக்கை நிரூபிக்க முடியும் என்ற அவசியமில்லை. These are all completely based on documents. இப்போது இருக்கக்கூடிய சான்றுகளை வைத்துக்கொண்டே வழக்குகளை நிரூபிக்க முடியும். ஊழல் செய்தவரை நீங்கள் அப்ரூவராக எடுக்க வேண்டுமா? அல்லது அவரைத் தண்டிக்க வேண்டாமா என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. ஞானசேகரன்] [1998 மே 28

மதர் தெரசா பல்கலைக் கழகம் பந்தாடப்படுகிற காரணத்தால் 82 இலட்ச ரூபாய் இன்று பயன்படுத்தப்படாமல் அப்படியே கிடக்கிறது. இங்கு இருப்பதா, கொடைக்கானலில் இருப்பதா என்ற நிலை இருந்த காரணத்தால், Shifting Charge என்று சொல்லி, தேவையற்ற செலவு 10.48 இலட்ச ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். நாம் பணத்தை ஒதுக்குகிறோம். அந்தப் பணத்தைப் பயன்படுத்தி இருக்க வேண்டும். பயன்படுத்தாமல் இருக்கிறது. அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் ஒரு முடிவு எடுத்து, உடனடியாக இத்தகைய பணத்தைச் செலவழிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Electronic City உருவாக்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணம் 2½ கோடி ரூபாய் 3 ஆண்டு காலமாக பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. நாம் பணத்தை ஒதுக்குகிறோம். பணத்தை ஒதுக்கும்போதே அதன் Viability என்ன? அந்தத் திட்டத்தைச் செய்யமுடியுமா? பணத்தை ஒதுக்கியவுடன் அதைச் செலவு செய்ய முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். 3 ஆண்டு காலமாக 2½ கோடி ரூபாய் செலவிடப்படாமல் இருந்திருக்கிறது. இனி எதிர்காலத்தில் இப்படி இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின அனுமதி, Viability தெரியாமல் கும்மிடிப்பூண்டியில் இருக்கக்கூடிய ஒரு இடத்தில் சர்க்கரை ஆலை அமைப்பதற்காக 5 கோடி ரூபாய் அரசால் ஒதுக்கப்பட்டு அதுவும் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. திட்டம் போடுகிறபோதே ஆராயாமல், Viability-யைத் தெரிந்து கொள்ளாமல் 5 கோடி ரூபாய்-- அதே நேரத்தில் 5 இலட்சம் ரூபாய் இல்லாமல் எத்தனையோ திட்டங்கள் தடுமாறிக் கொண்டிருக்கின்றன. எங்களுடைய அரியலூர் கூட்டுறவு நூற்பாலை மூடிக் கிடக்கிறது. இதற்கெல்லாம் எதிர்காலத்தில் நீங்கள் ஒரு விடிவை உருவாக்கித் தர வேண்டுமென்று சொன்னால் ஒதுக்கக்கூடிய பணம் உடனடியாக செலவழிக்கப்பட வேண்டும் என்கின்ற ஒரு நிலையை தமிழ்நாட்டிலே நீங்கள் உருவாக்க வேண்டும். (மணியடிக்கப்பெற்றது).

ஆசிரியர் பயிற்சி பெற்ற மாணவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். நேற்றுகூட பருவப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஏற்கெனவே ஆசிரியர் பயிற்சி



1998 மே 28] [திரு. சி. ஞானசேகரன்]

முடித்துவிட்டவர்கள், உயர்நிலைப் பள்ளி, மேனிலைப் பள்ளி என்று இருந்தார்கள். அவர்களெல்லாம் உண்ணாவிரதம் இருந்தார்கள். 1-வது வகுப்பு முதல் 3-வது வகுப்பு வரை அவர்கள் பாடம் எடுக்கலாம் என்று இருந்தது. பிறகு அதையும் நிறுத்திவிட்டார்கள். பருவப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் 1500 பேர் இருக்கிறார்கள். அவர்கள் கரை சேர நீங்கள் துணைபுரிய வேண்டும். ஏற்கெனவே 28 இலட்சம் ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் பயிற்சியை முடித்துவிட்டு அரசுத் தேர்வு எழுத முடியாமல் இருக்கிறார்கள். அவர்களையும் தேர்வு எழுத வைத்து, அவர்களுக்கும், அந்தப் பயிற்சி முடித்தவர்களுக்கும் சான்று வழங்குவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று, சாராய சட்டத்திலே அது "Possession"-ல் இருந்தால்கூட Non-bailable-ஆக மாற்றினால்தான் ஓரளவிற்கு அதைத் தடுத்து நிறுத்த முடியும். இதற்கு தண்டனையைக் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டும். சாராயம் வைத்திருந்தாலும் அதை Non-bailable ஆக, ஜாமினிலே விடக்கூடாத ஒரு குற்றமாக நீங்கள் அறிவித்தால்தான் சாராயத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும், ஆந்திராவில் உள்ளதைப்போல, Proscuting Inspector-களை நியமித்து, இதைத் தடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கின்றேன். நன்றி வணக்கம்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதியொதுக்கீடு சட்டமுன்வடிவின் அடிப்படையில் பேரவையிலே உள்ள பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் அரிய கருத்துக்கள் பலவற்றை வழங்கியிருக்கின்றார்கள். கருத்துக்களை வழங்கத் தொடங்கிய போது பலரும் எனக்குப் பவள விழா வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் நான் என்னுடைய இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் நீண்ட நாள் வாழ வேண்டுமென்று சிலபேர் எனக்குச் சாபமிட்டார்கள். நான் அந்தச் சாபத்தையும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கின்றேன். பவள விழா ஆண்டு என்று குறிப்பிட்டு, இந்தப்

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 மே 28

பவள விழா ஆண்டிலே பல்கலைக்கழகம் வேண்டுமென்று நாடறிந்த ஞானசேகரன் வேண்டுகோள் விடுத்தார். பவள விழா ஆண்டு, இது தொடக்க ஆண்டு. பவள விழாவினுடைய நிறைவு விழாவின்போது ஞானசேகரனுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

இன்று விவாதிக்கப்பட்டு, உங்களுடைய ஒப்புதலைப் பெற இருக்கின்ற இந்த நிதியொதுக்கச் சட்டமுன்வடிவு, 22,513 கோடி ரூபாய்க்கான அனுமதியை உங்களிடத்திலே பெறுகின்ற சட்டமுன்வடிவாகும். இதில் 18,318 கோடி ரூபாய், சட்டமன்றப் பேரவையினால் வாக்களிக்கப்படுகின்ற தொகையாகும். மீதமுள்ள 4,195 கோடி ரூபாய் சாட்டப்பட்ட தொகை Charged amount -அதாவது, ஆளுநர் செலவுகளுக்காக, நீதிபதிகளுடைய செலவுகளுக்காக, சர்வீஸ் கமிஷன்--தேர்வாணையத்தினுடைய செலவுகளுக்காக, வட்டி செலுத்துதல் போன்ற செலவுகளுக்காக ஆகின்ற இந்தச் செலவுகளெல்லாம் 4,195 கோடி ரூபாய் என்கின்ற சாட்டப்பட்ட செலவினத் தொகையாக வருகின்றது. 1998 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் நாளிலே தொடங்குகின்ற நிதி ஆண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியிலிருந்து தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கான சட்டமுன்வடிவு, கடந்த மார்ச் திங்கள் 27 ஆம் தேதி இந்த அவையிலே அறிமுகம் செய்யப்பட்டு, இது தொடர்பாக விவாதம் நடைபெற்று, மாமன்றத்தின் உறுப்பினர்கள் பலர் இந்தச் சட்டமுன்வடிவை ஒட்டியும், அதற்கு அப்பாற்பட்டும் பல கருத்துக்களை இங்கே வழங்கியிருக்கின்றார்கள். இந்தத் தொகையில் முதலில் வாக்கெடுத்தது, 5,911 கோடியே 41 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய்-Vote on account- இந்தத் தொகையும் இதிலே உள்ளடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சட்டமுன்வடிவிலே அடங்கியுள்ள சில முக்கியமான ஒதுக்கீடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொரு மானியத்தின்போதும் தெரிந்து கொண்டிருந்தாலும்கூட, ஒட்டுமொத்தமாக ஒரு தொகுப்பாக நினைவூட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன்.

பிற்பகல் 12-55

கல்விக்கு 3,568 கோடி ரூபாய்; ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் என்பதற்கு 1,953 கோடி ரூபாய்;



1998 மே 28] [கலைஞர் மு. கருணாநிதி]

நுகர்பொருள் வழங்கல் 1166 கோடி ரூபாய்; ஊரக வளர்ச்சி 1,186 கோடி ரூபாய்; நகராட்சிப் பணிகள் 514 கோடி ரூபாய்; மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவம் 1,096 கோடி ரூபாய்; சமூக நலன் 458 கோடி ரூபாய்; காவல் துறை 709 கோடி ரூபாய்; வேளாண்மை 739 கோடி ரூபாய்; சாலைகள், பாலங்கள் 380 கோடி ரூபாய்; பாசனம் குறித்த மூலதனச் செலவு 262 கோடி ரூபாய்; குடிநீர் வழங்கல் 208 கோடி ரூபாய்; மாவட்ட நிர்வாகம் 459 கோடி ரூபாய்; தாழ்த்தப்பட்டோர் நலன் 434 கோடி ரூபாய்; பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் 90 கோடி ரூபாய். எனவே, கடந்த ஆண்டின் திட்ட ஒதுக்கீடுபற்றி நாம் எண்ண வேண்டுமேயானால், 4,052.6 கோடி ரூபாய், கடந்த ஆண்டின் திட்ட ஒதுக்கீடாக இருந்தது. 31-3-1998 முடிய, இந்தக் காலத்திற்கான திட்டச் செலவு, 4,134.5 கோடி ரூபாய் ஆகும். இது, திட்ட ஒதுக்கீட்டில், 102 விழுக்காடு என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல், இந்த நிதியாண்டிலேயும், மத்தியத் திட்டக் குழுவோடு கலந்து ஆலோசித்து நிர்ணயிக்கப்படுகின்ற திட்ட ஒதுக்கீட்டை நாம் பெறமுடியும் என்ற நம்பிக்கையையும் இந்த மாமன்றத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். 1998-99ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள புதிய திட்டங்களுக்கான வரைவு ஆணைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடும் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. முன்பெல்லாம், அறிவிக்கப்பட்டவைகளுக்கு வரைவு ஆணைகள் வருவதற்கே நீண்டகாலமாகும். அங்ஙனம் இல்லாமல், வரைவு ஆணைகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு வெளியிடும் நிலையிலே வைக்கப்பட்டுள்ளன. 1998-99ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டுள்ள புதிய திட்டங்களுக்கு இதைத் தவிர, இந்த நிதிநிலை அறிக்கையிலே, என்னென்ன புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டனவோ, அவை அனைத்திற்கும் 15-6-1998-க்குள் உரிய அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுவிடும் என்பதை நான் இங்கே மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், பல்வேறு துறைகளைச் சார்ந்த அமைச்சர்களும், தத்தம் மானியக் கோரிக்கை விவாதங்களின்போதும் பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றபோது, நிதித் துறைச் செயலாளர் மிகக் கண்டிப்பாகவும்

கனிவாகவும் கேட்டுக் கொண்டார்; இத்தோடு என்னை விட்டு விடுங்கள்; இதற்குமேல் ஒவ்வொரு மானியத்திலேயும் அமைச்சர்கள் ஒவ்வொரு அறிவிப்பைச் செய்து தொல்லைக்கு ஆளாக்காதீர்கள் என்று எவ்வளவோ கேட்டுக் கொண்டார். ஆனாலும் அமைச்சர்கள் நிதித் துறைச் செயலாளரைத் தொல்லைக்கு ஆளாக்க நினைக்காவிட்டாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அமைச்சர்களைத் தொல்லைக்கு ஆளாக்கி, அதன் காரணமாக பல அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அந்த அறிவிப்புகள்மீதும் உரிய அரசாணைகள் ஜூலை மாதம் 15-ஆம் தேதிக்குள் வெளியிடப்பட்டுவிடும் என்பதையும் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், 1996-97-ஆம் ஆண்டு நிலவரப்படி, உள்ளாட்சி மன்றங்களுக்கு இழப்பீட்டுத் தொகையாகவும், ஏனைய பிற பணிகளுக்காகவும், மானியங்களாகவும் வழங்கப்பட்ட தொகை 841 கோடி ரூபாய் என்பதை, மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். 1997-98 ஆம் ஆண்டில், 1,341 கோடி ரூபாய் என்ற அளவிலே வழங்கினோம். நடப்பாண்டில், இந்தத் தொகை உள்ளாட்சி மன்றங்களுக்கு 1,588 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும் நான் மிகுந்த மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி, கணிசமான கூடுதல் நிதியொதுக்கம் அளிக்கப்பட்டிருந்தாலும்கூட, பல்லாண்டுகளாக மேற்கொள்ளப்படாமல் இருக்கின்ற பல கட்டுமானப் பணிகளை, உள்ளாட்சி மன்றங்கள் மேற்கொள்வதற்கு, அதிகப்படியான நிதி தேவைப்படுவதால், தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதி, உலக வங்கியின் நிதியுதவி, நிதி நிறுவனங்களின் வாயிலாகக் கூடுதல் நிதி என நிதி திரட்டப்பட்டு, உள்ளாட்சி மன்றங்களின் பல்வேறு பணிகள் செயல்படுத்தப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அடிப்படை வசதிகளுக்கான நபார்டு நிறுவனத்திடமிருந்து சாலைகள் மேம்பாட்டிற்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் 503.41 கோடி ரூபாயும், நீர்ப்பாசன வசதிக்காக 24.72 கோடி ரூபாயும் இந்த அரசு பெற்றுள்ளதை நான் பெருமிதத்தோடு தெரிவித்துக் கொள்வேன். ஏனென்றால், இந்த நபார்டு நிறுவனம் நமக்கு வழங்குவதற்காக வைத்திருந்த தொகையை கடந்த கால அரசு, அ.இ.அ.தி.மு.க. அரசு பெற்றுக்கொள்ளவே முன்வரவில்லை.



ஏனென்றால், அது கணக்குக் கேட்கின்ற நிறுவனம். எனவே அதைப் பெற்றுக்கொள்ளவே முன்பிருந்த அரசு முன்வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் இந்தத் தகவலை என்னிடத்திலே எடுத்துரைத்து, இப்படி ஒவ்வொரு ஆண்டும் 200 கோடி ரூபாய், 250 கோடி ரூபாய் என்று நபார்டு நிறுவனம் மூலமாக வருகிறது; அதைக் கடந்த காலத்திலே இருந்த அரசு பெற்றுக்கொள்ளவே இல்லை என்று குறிப்பிட்டார்.

பிற்பகல் 1-00

உடனடியாக நான் அதைப்பற்றிய விவரங்களை எல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு எழுதி, அவர்களிடமிருந்து தகவல்களை சேகரித்து உடனடியாக நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மூலமாகவும், அரசுச் செயலாளர்கள் மூலமாகவும், நானே முன்னின்றும் மத்திய அரசு நிதித் துறையிடத்திலே பேசி நபார்டு நிறுவனத்திலிருந்து இந்த இரண்டு ஆண்டுகளிலே மாத்திரம் 503 கோடி ரூபாய் பெற்றிருக்கிறோம் என்றால், நீர்ப்பாசனத் துறைக்கு அஃதன்னியில் ஏறத்தாழ 25 கோடி ரூபாயும் பெற்றிருக்கிறோம் என்றால் இந்த அரசைத்தான் செயல்படாத அரசு தூங்குகிற அரசு என்று சில தூங்காத தம்பிகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நான் அதற்காகக் கவலைப்படவில்லை.

மேலும் இந்த நிதியாண்டிலேகூட நபார்டு உதவியோடு 210 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் பெருமையோடு இங்கே கூறிக்கொள்ள விரும்புகின்றேன். வருவாயைத் திரட்டுவதிலே சிறுசேமிப்பு ஒரு பிரதான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். 1998-99 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சிறுசேமிப்புக் கடனாக மத்திய அரசிடமிருந்து 1000 கோடி ரூபாய் பெற திட்டமிடப்பட்டுள்ளது. 1000 கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு திட்டமிட்டிருக்கிறோம். அதற்கு 1400 கோடி ரூபாய் சிறுசேமிப்பை நாம் திரட்டினால்தான் அதைக் காட்டி அந்த 1000 கோடி ரூபாயை நாம் பெறமுடியும். அதற்காக இந்த ஆண்டு முதல், வீட்டு வருமான சேமிப்புகளில் கணிசமான பகுதியை சிறுசேமிப்புத் திட்டத்தின்கீழ் வசூலிக்க திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. சிறுசேமிப்பில் மக்களை அதிக அளவில்

ஈடுபடுத்தத் தற்போதுள்ள முகவர்களுடைய எண்ணிக்கையை 10,000 என்பதை 20,000 என்கிற அளவிற்கு உயர்த்துவதற்கு நாம் திட்டமிட்டிருக்கின்றோம். எனவே சிறுசேமிப்பிலே 1400 கோடி ரூபாய் அளவுக்கு சேர்த்தால் 1000 கோடி ரூபாயை மத்திய அரசிடமிருந்து கடனாக நாம் பெறமுடியும். அது மாத்திரம் அல்ல. அந்த 1400 கோடி ரூபாயையே எங்களுக்குத் திருப்பித் தரவேண்டும் என்றுகூட மத்திய அரசோடு நாம் இன்றைக்கு வாதிட்டுக் கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறப்புப் பணிக் குழு என்று மாநில அரசுகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது குறித்து திரு. செகாவத் அவர்களுடைய தலைமையில் ஒரு குழு மத்திய அரசால் இன்றைக்கு அமைக்கப்பட்டிருப்பதை அவை உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். அது 22-ஆம் தேதி அன்று கூடிற்று; 22-5-1998 அன்று அந்தக் குழு கூடிற்று. 21-ஆம் தேதியே அவர்களுக்குக் கிடைக்கும் வகையிலே நான் ஒரு கடிதத்தை தமிழக அரசின் சார்பாக அனுப்பி வைத்திருக்கின்றேன். அந்தக் கடிதத்திலே நான் கேட்டிருக்கின்ற கோரிக்கைள் பல என்றாலும் ஒன்றிரண்டை இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். மைய அரசின் மொத்த வரிவருவாயில் 33 சதவிகிதம் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற நமது நெடு நாள் கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி அந்தக் கடிதத்திலே நான் எழுதியிருக்கின்றேன். அதேபோல, திட்டப் பணிகளுக்கான மைய அரசினுடைய உதவித் தொகையில் 70 சதவிகிதம் கடனாகவும், 30 சதவிகிதம் மானியமாகவும் வழங்கப்பட்டு வருவதை மாற்றி, 50 சதவிகிதம் கடனாகவும், 50 சதவிகிதம் மானியமாகவும் மாற்றி வழங்க வேண்டும் என்றும் நான் அதிலே கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

மத்திய அரசுக்கு இணையான ஊதிய விகிதம் மாநில அரசுப் பணியாளர்களுக்கு வழங்கியுள்ளதைக் கருதி மத்திய அரசு கூடுதல் உதவித் தொகையை மாநிலங்களுக்கு வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் அந்தப் பணிக் குழுவிடம் நான் அளித்திருக்கின்றேன். அதையெல்லாம் செகாவத் குழு பரிசீலித்து மத்திய அரசுக்கு பரிந்துரை செய்திருப்பதாகவும் அறிகிறேன். எனவே மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதி குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்தி வழங்கப்படும் என்ற நோக்கோடு, 1998-99 ஆம் ஆண்டுக்கான மத்திய அரசின்



வரவு-செலவுத் திட்டத்தை நாம் எல்லாம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். வரும் என்று எதிர்பார்க்கிறோம். அப்படி வருமேயானால் நாம் அறிவித்திருக்கின்ற எல்லாத் திட்டங்களையும் அட்டியின்றி நிறைவேற்ற முடியும். இல்லையெனில் அதற்காக வேறு முயற்சிகளிலே நாம் ஈடுபட வேண்டியிருக்கும் என்பதையும் நான் இந்த அவைக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-05*

இந்த விவாதத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை, தொகுதிப் பிரச்சினைகள், அல்லது இந்த நிதி ஆதாரம் அல்லாத வேறு பல பிரச்சினைகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள், புதிய தமிழகம் கட்சியின் சார்பாக உரையாற்றினார்கள். அன்றைக்கு அவர்கள் உரையாற்றும்போதும் இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கும் இதைத் தொடர்ந்து குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி எனக்குக் கிடைத்த விளக்கக் குறிப்பை முதலில் நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

நான் எப்போதுமே, இந்த விளக்கக் குறிப்புகள், அதிகாரிகளிடமிருந்து வருவதை அப்படியே நம்பிவிடுகிறவன் என்று சொன்னவன் அல்ல, சொல்லப் போகின்றவனும் அல்ல. இருந்தாலும் எனக்கு வந்த தகவல்களை முதலில் நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

தூத்துக்குடி மாவட்டம், புளியம்பட்டி காவல் நிலையத்தில் மதுவிலக்குச் சட்டப் பிரிவு 4 (1)-ல் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 28/98 மற்றும் அதே சட்டப் பிரிவு 4 (1) (a)-ல் பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 43/98 ஆகிய வழக்குகள் தொடர்பாக திருவைகுண்டம் வட்டம், கீழபூவாணியைச் சேர்ந்த திரு. செல்லையா மகன் கணேசன், வயது 37, புளியம்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளரால் கைது செய்யப்பட்டு 18-5-1998 காலை 11.50 மணிக்கு கோவில்பட்டி கிளைச் சிறையில் (சப் ஜெயில்) நீதிமன்ற விசாரணைக் கைதியாக அடைக்கப்பட்டார். இதில் லாக்-அப் சாவு ஏற்படவில்லை என்பது ஒன்று. சப்-ஜெயிலில் அடைக்கப்பட்டார். 18-ஆம் தேதி அடைக்கப்பட்ட அவர் 21-ஆம் தேதி அன்று மாலை 4.30 மணிக்கு உடல்நிலை குறைவு காரணமாக கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, சிகிச்சை பலன்

அளிக்காமல் அன்று மாலை 4.35 மணிக்கு அவர் இறந்து விட்டார். இது தொடர்பாக கோவில்பட்டி கோட்டாட்சியர் பொறுப்பு வகித்த தூத்துக்குடி உதவி ஆட்சியர் பிரேத விசாரணை மேற்கொண்டார். பிரேத பரிசோதனைக்காக 21-5-1998 அன்று இரவு 11.30 மணிக்கு பிரேதம் பாளையங்கோட்டையிலுள்ள திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது. பிரேதப் பரிசோதனை முடிந்தவுடன் உறவினர்களிடம் பிரேதத்தைப் பெற்றுக்கொள்ள கோரப்பட்டது. இறந்தவரின் உறவினர்கள் பிரேதத்தைப் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டதால், பிரேதம் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டது.

இதற்கிடையில் 22-5-1998 அன்று புளியம்பட்டியில் சுமார் 100 நபர்கள், ஒட்டப்பிடாரம், பாளையங்கோட்டை ரோட்டில் கூடி பேருந்து மறியலில் ஈடுபட்டார்கள். இரண்டு வண்டிகளை--மின்வாரிய வண்டி ஒன்று, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று--இரண்டையும் சிறைபிடித்து வைத்துள்ளார்கள்.

அவர்களிடம் தூத்துக்குடி உதவி ஆட்சியர், கோவில்பட்டி கோட்டாட்சியர் மற்றும் மணியாச்சி உதவி காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தியும், அவர்கள் சாலை மறியலைக் கைவிடவும் இல்லை, பிரேதத்தைப் பெற்றுக் கொள்ளவும் முன்வரவில்லை. அவர் காவல் துறையின் கொடுமையால் இறந்ததாகக் குற்றம் சாட்டுகிறார்கள். சம்பந்தப்பட்ட காவல் துறை சார்பு ஆய்வாளரை தற்காலிகப் பணி நீக்கம் செய்தால் மட்டுமே போராட்டத்தைக் கைவிடவும் மற்றும் பிரேதத்தைப் பெற்றுக் கொள்ளவும் வேண்டுமென அவர்களுடைய கட்சியின் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ. கூறியுள்ளதாக போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அவர்களிடம், பிரேதப் பரிசோதனைச் சான்று கிடைக்கப்பெற்றவுடன், அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் உறுதி அளிக்கப்பட்டும்கூட, அவர்கள் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண மாவட்ட நிர்வாகத்தினாலும், காவல் துறையினாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற இந்தச் செய்திகள் அவர்களிடமிருந்து பெறப்பட்டிருக்கின்றன.



இதிலே, நான் அதிகாரிகள் சொல்லுவதுதான் சரி, டாக்டர் கிருஷ்ணசாமி சொல்லுவது தவறு என்று ஒரேயடியாக சொல்ல விரும்பவில்லை. மேலும் இது குறித்த விசாரணையில் நான் நிச்சயமாக ஈடுபடுவேன். எந்த மட்டத்தில் இந்த விசாரணை நடைபெற வேண்டுமென்ற அளவில் சிந்தித்து, அதற்கான செயல்பாடுகளை இந்த அரசு உடனடியாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்தவகையிலும் அமைதியான முறையிலே இந்தக் காரியம் நடைபெறவும், இதனால் எந்த அல்லலும், அமளியும் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ளவும், உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்படவும் இந்த அரசு தயக்கம் காட்டாது என்ற உறுதியை தெரிவித்து இந்த அளவில் இதற்கான விளக்கத்தை நான் நிறைவு செய்கிறேன்.

பிற்பகல் 1-10

ஒன்று, தொடர்ந்து இந்த நிதிநிலை அறிக்கை மற்றும் மானியங்களுடைய விவாதங்களிலே, விலைவாசி இந்த ஆட்சியிலே உயர்ந்து விட்டது, உயர்ந்து விட்டது என்ற ஒரு குரல் எழுப்பப்பட்டு வருகிறது. அந்தக் குரல் தொடர்ந்து எழுப்பப்பட்ட காரணத்தினால் ஒரு சில விவரங்களை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1991 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட நாளன்று துவரம் பருப்பினுடைய விலை ஒரு கிலோ ரூ. 14.50. 30-3-1996 அன்று ஜெயலலிதா அவர்களுடைய ஆட்சியில், அதாவது ஜனவரி, பிப்ரவரி, மார்ச்-மாதம் துவரம் பருப்பு ஒரு கிலோ விலை 34 ரூபாய். கழக ஆட்சியிலே, 1991-இலே 14.50 ரூபாய் துவரம் பருப்பு, ஆனால் 34 ரூபாய் 1996 ஆம் ஆண்டு. இப்போது 34-ஐ குறைத்து துவரம் பருப்பு கிலோ 22 ரூபாய் என்று ஒரு ரகம், 26 ரூபாய் ஒரு ரகம். சில இடங்களில் 29.50 ரூபாய் என்ற அளவிலே அந்த விலை இருக்கிறது.

உளுத்தம் பருப்பு 31-1-1991-கழக ஆட்சி கலைக்கப்பட்ட காலகட்டத்தில் 11 ரூபாய் ஒரு கிலோ, அது ஜெயலலிதா ஆட்சியில் 32 ரூபாய். இப்போது அது ஓரளவு குறைக்கப்பட்டு ஒரு கிலோ 17 ரூபாய் என்றும், 21 ரூபாய் என்றும் உளுத்தம் பருப்பு விற்கப்படுகிறது.

ஒன்றாம் நம்பர் புளி கழக ஆட்சியில் 31-1-1991-ல் ரூ. 7.50. ஜெயலலிதா ஆட்சியில் 33 ரூபாய். இன்றைக்கு 23 ரூபாய். இரண்டாம் நம்பர் புளி கழக ஆட்சியில் 31-1-1991-ல் ரூ. 5.75. ஜெயலலிதா ஆட்சியில் 25 ரூபாய். இப்போது அது குறைக்கப்பட்டு 18 ரூபாய்.

கடுகு ரூ. 6.50 கழக ஆட்சியில் 1991 ஆம் ஆண்டு. ஜெயலலிதா ஆட்சியில் 25 ரூபாய். இன்றைக்கு 18.50 ரூபாய்.

ஒன்றாம் நம்பர் மிளகாய் கழக ஆட்சியில் 1991 ஆம் ஆண்டு ரூ. 10.50. ஜெயலலிதா ஆட்சியில் 48 ரூபாய். இன்றைக்கு 36 ரூபாய். இரண்டாம் நம்பர் மிளகாய் கழக ஆட்சியில் 1991 ஆம் ஆண்டு 9 ரூபாய் கிலோ. ஜெயலலிதா ஆட்சியில் 38 ரூபாய். இன்றைக்கு அது ரூ. 32.50-ஆகக் குறைந்திருக்கிறது.

தேங்காய் எண்ணெய் 48 ரூபாய் கழக ஆட்சியில் 1991 ஆம் ஆண்டு. ஜெயலலிதா ஆட்சியில் 97 ரூபாய். இப்போது அது குறைந்து 45 ரூபாய் என்றும் சில இடங்களில் 55 ரூபாய் என்றும் விற்கப்படுகிறது.

நல்லெண்ணெய் கழக ஆட்சியில் ரூ. 30.50. ஜெயலலிதா ஆட்சியில் 56 ரூபாய். இன்று அது குறைக்கப்பட்டு ரூ. 35 என்றும் ரூ. 40 என்றும் விற்கப்படுகிறது.

கடலை பருப்பு 8 ரூபாய் கழக ஆட்சியில், ஜெயலலிதா ஆட்சியில் ரூ. 20.50, இன்றைக்கு ரூ. 13.50.

சீயக்காய் கழக ஆட்சியில் ரூ. 7.50. ஜெயலலிதா ஆட்சியில் 34 ரூபாய். இன்றைக்கு 21 ரூபாய்.

பொன்னி அரிசி நம்பர் 1 கழக ஆட்சியில் 91 ஆம் ஆண்டு ரூ. 5.50, ஜெயலலிதா ஆட்சியில் 18 ரூபாய். இன்றைக்கு 10 ரூபாய். பொன்னி நம்பர் 2 கழக ஆட்சியில் 5 ரூபாய். ஜெயலலிதா ஆட்சியில் 16 ரூபாய். இன்றைக்கு 9 ரூபாய்.

சிறுமணி கழக ஆட்சியில் 4 ரூபாய். ஜெயலலிதா ஆட்சியில் ரூ. 10.50. இன்றைக்கு ரூ. 8.50 வெளி மார்க்கெட்டிலே.

இட்லி அரிசி கழக ஆட்சியில் ரூ. 3.50, ஜெயலலிதா ஆட்சியில் ரூ. 9.00. இன்றைக்கு ரூ. 6.50 அல்லது ரூ. 7.00



இதுதான் விலைவாசி விவரத்தைப் பொறுத்தவரையில் நான் தருகின்ற விளக்கம், உண்மையான விளக்கம்.

பிற்பகல் 1-15

சாராயத்தைப்பற்றி நம்முடைய ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இன்று இல்லாவிட்டாலும், கடந்த இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு பேசிய அ.தி.மு.க. உறுப்பினர்களும் மற்றவர்களும் கூட, எல்லா கட்சி உறுப்பினர்களும்கூட இன்றைக்கு கள்ளச்சாராயம் கடலாகப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கிறது, அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே இருவிதமான கருத்துக்களுக்கு இடமே கிடையாது. கள்ளச்சாராயத்தை ஒழிப்பது என்பதிலே எல்லோருக்கும் ஒரே குறிக்கோள்தான். ஆனால், அதை ஒழிப்பது எப்படி என்பதிலேதான் சில மாறுபாடான கருத்துக்கள் இருக்கின்றன. சாத்தூரிலேகூட சில பேர் கடந்த 18-ந் தேதியன்று கள்ளச்சாராயம் அருந்தி இறந்திருக்கிறார்கள். அதை வைத்து அ.தி.மு.க.வினுடைய தலைவியானவர்கள், ஜெயலலிதா அவர்கள் ஓர் அறிக்கை விட்டிருக்கின்றார்கள். அந்த அறிக்கையிலே ஏதாவது உண்மை எங்கேயாவது இருக்கிறதா என்று தேடித் தேடிப் பார்த்தேன். கள்ளச்சாராயத்தைக்கூடத் தேடிக் கண்டுபிடித்து விடலாம் போலிருக்கிறது. ஜெயலலிதா விட்ட அறிக்கையிலே உண்மையைத் தேடிக் கண்டுபிடிப்பது அவ்வளவு சிரமமான காரியமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதிலே சொல்லியிருக்கிறார்கள். "கடந்த 18 ஆம் தேதியன்று காமராசர் மாவட்டம் சாத்தூரில் கள்ளச்சாராயம் குடித்தவர்கள் 10 பேர் இறந்து போயிருக்கிறார்கள்" என்று. இறந்தது 5 பேர்தான். 5, 10 ஆகியிருக்கிறது, ஜெயலலிதா அறிக்கையிலே. நம்முடைய தாமரைக்கனிக்கு நன்றாகத் தெரியும் அவர் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர், பக்கத்திலே இருப்பவர். முதலிலே 2 பேர், பிறகு 3 பேர், கடைசியாக 5 பேர் இறந்தார்கள் என்றுதான் விவரம் வந்திருக்கிறது. ஆனால், ஜெயலலிதா, அறிக்கையிலே 10 பேர் என்று கூறியிருக்கிறார்.

அதுமாத்திரமல்ல, அந்த அறிக்கையில் அவர்கள் குறிப்பிடுகிறார்கள், "எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை" என்று.

இது சம்பந்தமாக சாத்தூர் காவல் நிலைய பொறுப்பு உதவி ஆய்வாளர் குமாரவேல், அவருடைய பொறுப்பற்ற தன்மைக்காக, தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். அது மாத்திரமல்ல, டி.எஸ்.பி.--சாத்தூர் துணைக் கண்காணிப்பாளர் என்.எம். பொன்னுசாமிக்கு கள்ளச்சாராயத்தை ஒழிக்க பல அறிவுரைகள் கொடுத்தும்கூட இரண்டு முறை, அவருடைய காவல் எல்லையிலே மரண சம்பவங்கள் உண்டாக அவர் காரணமாக இருந்ததால், அவர்மீதும் துறை நடவடிக்கை எடுக்கவும், அவரைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது.

ஜெயலலிதா தன்னுடைய ஆட்சியில் கள்ளச்சாராயமே இல்லை, கருணாநிதி ஆட்சியிலேதான் கள்ளச்சாராயம் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது என்று சொல்கிறார். நான் ஒன்றைச் சொல்லி, ஒன்றை நியாயப்படுத்த விரும்பவில்லை. அப்போது ஓடவில்லையா கள்ளச்சாராயம் என்று கேட்டு, இப்போது ஓடுவதிலே என்ன தவறு இருக்கிறது என்று நான் கேட்கின்ற அளவுக்கு அவ்வளவு அறிவு கூர்மை அற்றவன் அல்ல நான். எனவே, நான் நினைவுபடுத்த விரும்புவது அதுவல்ல. ஜெயலலிதாவினுடைய ஆட்சியில், இதே சாத்தூரில் 15-10-1995 அன்று, கள்ளச்சாராயம்--விஷச் சாராயம்--அருந்தி செத்துப் போனவர்கள் 28 பேர். 28 பேர் சாத்தூரிலே 1995 ஆம் ஆண்டு இறந்து போயிருக்கிறார்கள். தமிழகம் முழுவதும் எடுத்துக்கொண்டால், 5 ஆண்டு கால ஜெயலலிதா ஆட்சியில், 30 நிகழ்வுகளில், 136 பேர் இந்தக் கள்ளச்சாராயத்தாலே இறந்து போயிருக்கிறார்கள். நான் மீண்டும் சொல்கிறேன். என் வாதத்தை நியாயப்படுத்துவதற்காக இதைச் சொல்லவில்லை. விவரங்கள் சரியாக மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

இன்னொன்று சொல்கிறார் ஜெயலலிதா. இதுதான் ரொம்ப வேடிக்கை. தாமரைக்கனிக்குக்கூட கோபம் வரும் என்று நினைக்கிறேன்.

"கள்ளச்சாராயத்தை ஒழிப்பதற்காக, தனது ஆட்சியில் காவல் துறையில் மதுவிலக்கு அமல் தனிப் பிரிவை உருவாக்கி, கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களை ஒழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டேன்" என்று தன்னைத்தானே அம்மையார் அவர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையா அது? அல்ல. இந்த மதுவிலக்குப் பிரிவை 1971 ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்தபோது 'ஆயத் தீர்வை மற்றும் மதுவிலக்குப் பிரிவு' என்று ஒன்றை ஆரம்பித்தேன். அதற்குப்பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 1979 ஆம் ஆண்டுதான் அவர்கள் 'மதுவிலக்கு அமல் பிரிவு' என்ற அந்தப் பிரிவை, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ஆரம்பித்தார்கள். இந்தப் பெருமையைக்கூட எம்.ஜி.ஆர்-க்கு விட்டுத்தர அம்மையார் அவர்களுக்கு இஷ்டமில்லை.



இதற்கு முன்பு இன்னொரு அறிக்கையிலேகூட அப்படித்தான், எம்.ஜி.ஆர். செய்ததை, தான் செய்ததாகவே சொன்னார்கள். அவரும், நானும் ஒன்று. ஆகவே சொல்கிறேன் என்று அவர் வாதமிடலாம். ஆனால், அவர் வேறு முதலமைச்சர்; இவர் வேறு முதலமைச்சர். அவர் முதலமைச்சராக இருந்த காலம் வேறு; இவர் முதலமைச்சராக இருந்த காலம் வேறு. அதையெல்லாம் மக்களுடைய கண்களிலே மண்ணைத் தூவி மறைத்துவிட்டு, "நான்தான் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவைக் கொண்டு வந்தேன், அதைக் கருணாநிதி கெடுத்துவிட்டார்" என்று சொல்வது எவ்வளவு தவறான வரலாற்றுப் பொய்யுரை என்பதைத் தயவுசெய்து நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். எனவே, இந்த மதுவிலக்கு அமல் பிரிவைத் தோற்றுவித்தவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் 1979 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர். அவர்கள்தான் தோற்றுவித்தார். 1971-ஆம் ஆண்டு மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையை நான் தோற்றுவித்தேன். அதை அமல்படுத்துகின்ற பிரிவைத் தோற்றுவித்தவர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தான் என்பதை நான் ஞாபகப்படுத்துகிறேன்.

அதுமாத்திரமல்ல, "1971 ஆம் ஆண்டிலே, ஓட்டேரியிலே கள்ளச்சாராயம் குடித்துப் பல பேர் பேசமுடியாமல் ஆகிவிட்டார்கள் கருணாநிதி ஆட்சியிலே" என்று எல்லாம் அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதுவும், கடைந்தெடுத்த உண்மைக்கு மாறான செய்தியாகும். அந்தப் பகுதியில் "காவல் நிலைய சரக எல்லை--அயனாவரம் காவல் நிலையத்தினுடைய சரக எல்லையில், 2-7-1976 அன்று எரிசாராயத்தைக் குடித்து 118 பேர் இறந்தார்கள். 193 பேர் பாதிக்கப்பட்டார்கள். இவையெல்லாம் கவர்னருடைய ஆட்சியில். அன்றைக்கு இருந்த தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டு, அதற்குப் பிறகு வந்த கவர்னருடைய ஆட்சியிலேதான் 118 பேர் அயனாவரம் காவல் நிலைய சரகத்திலே

இறந்தார்களேயல்லாமல், அம்மையார் சொல்வதைப்போல கழக ஆட்சியிலே அல்ல.

பிற்பகல் 1-20

எந்த ஆட்சியில் நடந்திருந்தாலும் காங்கிரஸ் ஆட்சியில் இறந்திருக்கிறார்கள், கள்ளச் சாராயம் குடித்து; அண்ணா ஆட்சியில் இறந்திருக்கிறார்கள்; எம்.ஜி.ஆர். ஆட்சியிலே கள்ளச் சாராயம் அருந்தி இறந்திருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியில் இறந்திருக்கிறார்கள், பக்தவத்சலம் ஆட்சியில் இறந்திருக்கிறார்கள். ஆனாலும் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதிலே நீ மேலா, நான் மேலா, உன் காலத்திலே அதிகமா, என் காலத்திலே அதிகமா என்றெல்லாம் கேட்டுக்கொண்டிராமல், எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே குறிக்கோளோடு கள்ளச் சாராயத்தை ஒழிக்கின்ற அந்தப் பணியினை நாம் நிறைவேற்ற வேண்டும். அதற்கு இந்த அவையிலே இருக்கின்ற எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் ஒத்துழைக்க வேண்டும். எல்லா கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். அப்படி ஒத்துழைக்க முன்வருவார்களேயானால், அதை அமைதியாக, அதே நேரத்திலே கண்டிப்பாக நாம் நிறைவேற்ற முடியும் என்ற உறுதியை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விவாதத்தினுடைய உரையில் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி அதை ரெக்கார்டு செய்து, அதிலே, அது சரியாக இருந்தாலும் தவறாக இருந்தாலும் கவலை இல்லாமல் ஏதாவது சொல்ல வேண்டுமென்று சொல்கின்ற வகையிலே அல்ல. முன்பு இருந்த ஆட்சியைப்பற்றி, இன்றைக்கு இருக்கின்ற மத்திய அமைச்சர்கள் தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் என்ன சொன்னார்கள் என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தச் சட்டமன்றத்தைப்பற்றி என்ன சொன்னார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏதோ, எங்கேயோ பேசி, மேடையிலே பேசி, பத்திரிகையிலே வரும் செய்தி அல்ல. கவர்னர் பெருமானாக இருந்த சென்னா ரெட்டியிடத்திலே கொடுத்து அவர் அரசுக்கு அனுப்பி, அவைகள் ஆவணங்களாக இந்த அரசிலே பதிவாகி இருக்கின்ற விஷயங்களைத்தான் சொல்கிறேன். எனவே, இதற்குப் புறம்பானவை அல்ல, இங்கே பதிவாகியிருக்கின்றவை. கவர்னர் மாளிகைக்குச் சென்று கொடுக்கப்பட்ட புகார், அங்கேயிருந்து இங்கே முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டு அது ரெக்கார்டு செய்யப்பட்டு வைக்கப்பட்ட ஆவணத்திலிருந்துதான் நான் படிக்க விரும்புகின்றேன்.





"The AIADMK Government headed by Ms. Jayalalitha is corrupt.
The Chief Minister hereself is misusing her office and is amassing
wealth. It is a case of planned subversion of law by the Chief Minister
and other Ministers. A corrupt political structure has been evolved in
the State. The L.T.T.E. has become very active.

ஜெயலலிதா தலைமையிலே நடைபெறும் அ.இ.அ.தி.மு.க. அரசு
ஊழல் மயமானது. முதலமைச்சரே தன்னுடைய பதவியைப்
பயன்படுத்தி சொத்துக்களைக் குவித்துக் கொண்டிருக்கிறார்.
முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் திட்டமிட்டு சட்டத்தைக்
கையிலே எடுத்துக்கொண்டுள்ளார்கள். மாநிலத்தில் ஊழல் மயமான
சூழ்நிலைதான் உலவுகிறது. விடுதலைப் புலிகள் மிகவும் தீவிர
நடவடிக்கையிலே ஈடுபட்டுள்ளார்கள். மேலும். "The Chief
Minister and other Ministers are looting the State.--Looting the State—
There is a large scale corruption. The Government machinery is
paralysed. The bureaucracy is silenced. The Police force is made
helpless. The crime rate is alarmingly increasing. People with
criminal records are ruling the State and manning various Corporations.
There is complete breakdown of the constitutional machinery. The
Speaker of the Tamil Nadu Legislative Assembly Mr. Sedapatti Muthiah
is acting in a high handed manner. The Opposition is not allowed to
raise the issue of corruption in the Assembly. One, Mr. Tamaraikani,
M.L.A. is often used by the ruling party to physically attack the
opposition Members. Of late, there are attempts to silence the
judiciary also. False cases are foisted against the close relatives of
judges who discharges their constitutional duties." இதற்குத் தமிழ்
மொழி பெயர்ப்பு தேவையில்லை என்று கருதுகிறேன்.
இதையெல்லாம் கொடுத்தது யார் என்றால் இன்றைய மத்திய
அமைச்சராக இருக்கின்ற திருவாளர் வாழப்பாடி இராமமூர்த்தி
அவர்கள்தான். கவர்னர் சென்னா ரெட்டி அவர்களிடத்திலே,
16-3-1994 ஆம் ஆண்டு கொடுத்திருக்கிறார்.
இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு, திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சியைப்பற்றி, அதிலே உள்ள அதிகாரிகளைப்பற்றியும்
குறை சொல்லுகின்ற அளவிற்கு துணிவு ஏற்படுவது உள்ளபடியே
பாராட்டத்தக்கதுதான். ஏனென்றால் இந்த அவையிலே
ஆளுங்கட்சியினர் நிரம்பி இருந்தபோது, தம்பி பரிதி இளம்வழுதி,
இன்றைய துணை சபாநாயகர் அன்றைக்கு என்ன பாடுபட்டார்

என்பதையும், ஏன் இன்னும் அதிகமாக இருந்த காங்கிரஸ் உறுப்பினர்கள்கூட என்ன பாடுபட்டார்கள் என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, நாம் இரண்டு பேர் தனியாக போகிறோமே என்ன ஆகுமோ என்று, இரண்டு மூன்று பேர் தனியாக இருக்கிறோமே என்று பயப்படாததற்கு என்ன காரணம் என்றால், தாமரைக்கனியோ அல்லது சுந்தரமோ, மற்றவர்களோ பயப்படாததற்கு என்ன காரணம் என்றால், அவர்களுக்கு இந்த அண்ணன் மீது அவ்வளவு நம்பிக்கை இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி). நம்மை எல்லாம் அன்பாக நடத்துவான்; நம்மை எல்லாம் கொடுமையாக நடத்தமாட்டான் என்று.

பிற்பகல் 1-25

அதைப்போல, சபாநாயகர் அவர்களும், துணை சபாநாயகரும் அப்படி நடத்தமாட்டார்கள்; அவர்கள் எல்லாம் அண்ணா வழியை கொஞ்சம்கூட தவறாமல் (மேசையைத் தட்டும் ஒலி) பின்பற்றக்கூடியவர்கள் என்கின்ற அந்த நம்பிக்கை இருக்கின்ற அந்தக் காரணத்தினாலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் எல்லாம் இந்த அவையிலே எதையும் பேசுகின்றார்கள்; எவ்வளவோ எதிர்ப்பான கருத்துகளை எல்லாம்கூட எடுத்துக் காட்டுகின்றார்கள். நான் பயந்துகொண்டு, இன்றைக்கு, சட்டசபையைக்கூட ஒரு நாள் யாருக்கோ பயந்து கொண்டு நீடித்து இருப்பதாகச் சொன்னார்கள். இதெல்லாம்கூட சொக்கர் கோபித்துக் கொள்ளக்கூடாது; அழகிரி கோபித்துக் கொள்ளக்கூடாது; நம்முடைய ஞானசேகரன் எல்லாம் கோபித்துக் கொள்ளக்கூடாது. தாமரைக்கனிக்கு ஒரு துணிச்சல் ஏன் வருகிறது என்றால், நான் பயப்படுகிறேன் என்று எதிர்கட்சித் தலைவரே கல்கிக்கு பேட்டி கொடுக்கிறார்; எதிர்க்கட்சித் தலைவர் பாலகிருஷ்ணன் அவர்களே, ஆட்சியைக் கலைத்து விடுவார்களோ என்று நான் பயப்படுகிறேன் என்று அவரே கல்கிக்கு பேட்டி கொடுத்து இருக்கிறார். அதைப் பார்த்தவுடன் தாமரைக்கனிக்கு, நாம் ஏன் சொல்லக்கூடாது? எதிர்க்கட்சித் தலைவரே சொல்கிறார்; தோழமைக் கட்சித் தலைவர் பாலகிருஷ்ணனே சொல்கிறார்; அவர் சொல்லும்போது நாம் ஏன் சொல்லக்கூடாது? அப்படி என்று தாமரைக்கனியும் சொல்கிறார்.

“முதலில் தி.மு.க. ஆட்சி நன்றாகத்தான் இருந்தது. ஆனால், சமீப காலங்களில் ஆட்சிக் கலைப்பு பற்றிய செய்திகள் கருணாநிதியிடம் கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. 3.52, 3.56



என்ற பிரிவுகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க சட்ட பூர்வமாக அனுமதி கிடையாது என்று தெரிந்தும், கலைஞர் பயப்படுவதற்கான காரணம் புரியவில்லை. இந்த பயத்தின் விளைவான தயக்கத்தின் காரணமாக நிர்வாகம் ஸ்தம்பித்து நிற்கிறது.” இது ஒன்று போதும்; ஆட்சியைக் கலைப்பதற்கு. நிர்வாகம் ஸ்தம்பித்து நிற்கிறது என்று எதிர்க்கட்சித் தலைவரே ஒரு பிரதான பத்திரிகையில், வாரப் பத்திரிகையில் சொல்கிறார்; இன்னும் பலவும் சொல்கிறார். கொடும்பாவி பற்றி எல்லாம் சொல்லி இருக்கிறார். அதற்குள் நான் நுழைய விரும்பவில்லை. முதலமைச்சர் கருணாநிதி கொடும்பாவியைக் கொளுத்தினால் போலீஸ்காரர்கள் சும்மா இருப்பார்களா என்று கேட்டு இருக்கிறார். 1996 ஆம் ஆண்டு அ.தி.மு.க.-வினர் பல இடங்களில் என்னுடைய கொடும்பாவிகளைக் கொளுத்தினார்கள். அப்போது நாங்கள் சும்மா இருந்தோமா இல்லையா என்பது தாமரைக்கனிக்கு தெரியும். அதனாலே, தாமரைக்கனிக்குத் தைரியம் எப்படி வந்தது; அவருக்கு வந்த தைரியத்துக்கு என்ன காரணம் என்றால், இதுபோன்ற பேட்டிகளும் இதுபோன்ற பேச்சுகளும்தான் என்பதை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறகு, வேறு சில செய்திகள். வரிகள் குறைப்புபற்றி எல்லாம் பேசப்பட்டது. ஆனால், அக்காவுக்கு ரொம்ப வருத்தம். “நானும் பல நாட்களாகக் கேட்கிறேன், தேங்காய்ப் பால், தேங்காய்ப் பால் என்று; அதற்கு வரியை குறைக்கமாட்டாயா என்று கேட்கிறேன்” என்றார். நானும் பல நாட்களாக அதிகாரிகளோடு அதுபற்றி பேசிப் பார்த்தேன். கடைசியாக, இப்போது அக்கா அவர்கள் இங்கே பேசியவுடன்-- அக்கா என்று சொன்னால் மாத்திரம், அது பத்திரிகையில் வந்தால் யாருக்கும் புரியாது--பொன்னம்மாள் அவர்கள் பேசியபிறகு, நான் நிதிச் செயலாளரோடு கலந்து பேசி எடுத்த முடிவு, தேங்காய்ப் பாலுக்கு வரி அறவே ரத்து செய்யப்படுகிறது என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கால்நடைத் தீவனத்திற்கு முழு வரி விலக்கு அளிக்கப்பட்டது. அதைப்பற்றி சுந்தரம்கூட இங்கே பேசினார். மற்றும் பல உறுப்பினர்கள் பேசி இருக்கின்றார்கள். நம்முடைய சொக்கர் பேசி இருக்கின்றார். அதைப்பற்றிச் சில சந்தேகங்களை எழுப்பி இருக்கிறார். . இந்த வரி விலக்கு, கால்நடை வைத்து இருப்போர்க்கு விற்கப்படும் காம்பவுண்டு

கால்நடைத் தீவனத்திற்கு, Compound Cattle Feed-க்கு அளிப்பதில் சில நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன என்று சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் எனது கவனத்திற்குக் கொண்டு வந்து இருக்கின்றார்கள். அதைப் பரிசீலித்து, கால்நடைகளை வைத்து இருப்போர் வாங்கும் காம்பவுண்டு கால்நடைத் தீவனத்திற்கு வரி விலக்கு இருக்குமாறு விற்பனைச் சட்டத்தின்கீழ் உள்ள அட்டவணைக்கு தேவையான மாறுதல்கள் செய்யப்படும் என்ற உறுதியை நான் இங்கே அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர். சொக்கர், நா. பெரியசாமி, என்.எஸ். ராஜ்குமார் மன்றாடியார், ஜி.கே. மணி, எம்.ஏ. லத்தீப், ஐ. கணேசன், எல். சந்தானம் ஆகியோர் பதப்படுத்தப்படாத வெண்ணெய்க்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். இயற்கையான பதப்படுத்தப்படாத வெண்ணெய், பதப்படுத்தப்பட்ட வெண்ணெய் என்று பிரித்து வரி விதிப்பதில் சில சிரமங்கள் உள்ளன. என்றாலும், இயற்கையான பதப்படுத்தப்படாத வெண்ணெய், பெரும்பாலும் வணிகச் சின்னம் இல்லாத வெண்ணெயாக இருக்கும் என்று கருதப்படுகிறது. பொதுவாக, ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் ரூபாய் வரை வியாபாரம் செய்யும் சிறு வியாபாரிகளுக்கு வரி விதிப்பது இல்லை என்பதை 1996-97 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்து இருந்தேன். அதன்படி 3 லட்சம் ரூபாய் வரை வெண்ணெய் வியாபாரம் செய்யும் சிறு வணிகர்களுக்கு வரி விதிப்பு இல்லை. என்றாலும், தற்போது உறுப்பினர்கள் கொடுத்து உள்ள கோரிக்கைகளைப் பரிசீலித்து, வணிகச் சின்னம் இல்லாத வெண்ணெய்க்கு மாத்திரம் 4-5-1998 முதல் முழு வரி விலக்கு அளிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கின்றேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இதனால் வணிகச் சின்னம் இல்லாத வெண்ணெய் வியாபாரம் 3 லட்சத்திற்கு மேற்பட்டாலும் அதற்கு வரி விதிப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



நம்முடைய திருவேங்கடம் போன்ற உறுப்பினர்கள் முதலில் தொடங்கி, அதைத் தொடர்ந்து பல உறுப்பினர்கள் பேசியிருக்கின்றார்கள்.--சர்க்கரை ஆலைகள் விவசாயிகளிடமிருந்து, கரும்பை எடுக்காத காலகட்டத்தில், விவசாயிகளே தாங்கள் விளைவித்த கரும்பை அரவை செய்வதற்கு தங்களுக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பைப் பயன்படுத்துகிறார்கள் என்று. இதற்காக மின் இணைப்பு வைப்புத் தொகையாக 5 ஆயிரம் ரூபாயும், ஒரு யூனிட் மின்சாரத்திற்கு 5 ரூபாய் என்றும், கரும்பு விவசாயிகளிடம் தற்போது வசூலிக்கப்பட்டு வருவதாக அவையிலே உறுப்பினர் கலசப்பாக்கம் திருவேங்கடம் தெரிவித்தார். இந்தக் கோரிக்கை மேலும் பல விவசாயிகளிடமிருந்து அரசுக்கு வந்துள்ளது. இந்தக் கோரிக்கையை ஏற்று, கரும்பு விவசாயிகளின் நலன் கருதி இதற்கான மின் இணைப்பு வைப்புத் தொகையை ஏற்கெனவே 5000 ரூபாயிலிருந்து ரூ. 500 ஆகக் குறைத்தோம். ஒரு யூனிட் மின்சாரத்திற்கு தற்போது வசூலிக்கப்படும் 5 ரூபாய் என்பதை ரூ. 1.25 என்று குறைத்தும் வசூலிக்க இந்த அரசு முடிவெடுத்து, 6-4-1998-ல் அறிவித்தேன். மின்சார மோட்டார் பொருத்துவது மற்றும் தனியாக மின் இணைப்பு வழங்குவது ஆகியவற்றில் உள்ள சிரமங்கள் குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதுகுறித்து அதிகாரிகளோடு மேலும் விவாதிக்கப்பட்டது.

விவசாயிகள் தாங்கள் பயிர் செய்த கரும்பை, சர்க்கரை ஆலைகள் அரைவைக்கு எடுக்காத காலகட்டத்தில், அவர்கள் தாங்களே வெல்லம் தயார் செய்ய முன்வருவார்களேயானால், அவர்களுக்கு, விவசாயத்திற்கு இலவசமாக மின்சாரம் வழங்குவதைப்போல மின்சாரக் கட்டணம் இல்லாமல் இலவசமாக மின்சாரத்தை வழங்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி).

Gauze மற்றும் bandage துணிகள் பற்றி இங்கே இந்த விவாதத்தின் இறுதியில் பேசிய திரு. ஞானசேகரன் போன்றவர்கள் சொன்னார்கள். பல உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். இதுகுறித்து உறுப்பினர்கள் வி.பி. இராசன், ஆர். சொக்கர், கே. எம். விஜயகுமார் மற்றும் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் போன்ற அந்த வட்டாரத்து சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். நம்முடைய பழனிசாமி அவர்களும் அதைப்பற்றி இங்கே இன்றைக்கு உரையாற்றும்போது

குறிப்பிட்டிருக்கின்றார்கள். அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து ஏற்கெனவே ஆண்டுக்கு 25 லட்சம் ரூபாய் வரையிலான விற்பனைத் தொகை உள்ள விசைத்தறி தயாரிக்கும் காஸ் மற்றும் பாண்டேஜ் துணிகளுக்கு, தமிழ்நாடு பொது விற்பனை வரியிலிருந்து 1-4-1998 முதல் வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. வரிவிலக்கு அளவினை உயர்த்தவேண்டுமென்ற சிறு விசைத்தறி உற்பத்தியாளர்களின் கோரிக்கையை சட்டமன்ற உறுப்பினர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். சிறு விசைத்தறி உற்பத்தியாளர்களின் நலனையும், அதில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலனையும் கருத்திற்கொண்டு, திரு. ஞானசேகரன் இங்கே குறிப்பிட்டதைப்போல, ஆண்டுக்கு 50 லட்சம் ரூபாய் வரையிலான விற்பனைத் தொகை உள்ள விசைத்தறியில் தயாராகும் காஸ் மற்றும் பாண்டேஜ் துணிகளுக்கு, தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திலிருந்து 1-4-1998 முதலும் மற்றும் மத்திய விற்பனை வரிச்சட்டத்திலிருந்து இன்று முதலும், வரி விலக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கின்றேன். மத்திய விற்பனை வரிச் சட்டத்திலிருந்து இன்று முதல் என்று நான் சொன்ன காரணம், ஏற்கெனவே முன் தேதி போடுவதற்குச் சட்டத்தில் இடம் இல்லை. ஆகவே இன்று முதல் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி).

புதிய வட்டங்கள் சிலவற்றை நான் ஏற்கெனவே அறிவித்தேன். அப்படி அறிவித்தபோது 2, 3 வட்டங்கள் விடுபட்டுவிட்டன. அந்த 2, 3 வட்டங்களை மீண்டும் நான் இங்கே அறிவிப்பதால், மற்ற வட்டங்கள் எல்லாம் என்னை வட்டமிட்டுவிடக் கூடாது என்கின்ற வேண்டுகோளை முன்வைத்து, அவைகளை அறிவிக்கின்றேன்.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டத்தை இரண்டாகப் பிரித்து, காரியாப்பட்டியைத் தலைநகராகக் கொண்டு ஒரு புதிய வட்டமும், வேலூர் மாவட்டத்தில் உள்ள குடியாத்தம் மற்றும் வாலாஜா ஆகிய வட்டங்களைச் சீரமைத்து, காட்பாடியைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு புதிய வட்டமும், திருச்சி மாவட்டம், முசிறி வட்டத்தை இரண்டாகப் பிரித்துத் தொட்டியத்தைத் தலைநகராகக் கொண்டு ஒரு புதிய வட்டமும் இந்த ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.





அடுத்த பிரச்சினைக்கு வேகமாகச் செல்கின்றேன். ஏனென்றால் சில வட்டங்கள் கிளம்பிவிடக்கூடும். (சிரிப்பு) இது சுதந்திர தின பொன் விழா ஆண்டு. என்னுடைய பவள விழா ஆண்டு என்பதைவிட நான் அதிகமாக நேசிப்பது, இந்தச் சுதந்திர தின பொன் விழா ஆண்டைத்தான். அதைப்போல, அதிகமாக நான் நேசிப்பது, திராவிட இயக்கத்தினுடைய அரசியல் பிரிவான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொன் விழா ஆண்டும் இந்த ஆண்டுதான். அந்த திராவிட இயக்கத்தின் பரந்த மனப்பான்மையை, அந்த பரந்த மனப்பான்மையை உபதேசித்த பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பேருள்ளம், அதன் அடையாளமாக-ஏற்கெனவே உங்களுக்குத் தெரியும்- பல பெரியவர்கள், கவிஞர்களுடைய புத்தகங்கள் எல்லாம் நாட்டுடைமையாக ஆக்கப்பட்டிருக்கின்றன. பாரதியார், பாரதிதாசன், தேவநேயப் பாவாணர், மறைமலையடிகள், அறிஞர் அண்ணா, சிலம்புச் செல்வர் ம.பொ.சி., பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், திரு.வி.க., கல்கி, இவர்களுடைய எழுத்துக்களெல்லாம் அரசுடைமையாக ஆக்கப்பட்டிருக்கின்றன. சுதந்திர தினப் பொன் விழா ஆண்டு என்பதை உத்தேசித்து, தேசிய எழுத்தாளர்கள், மறைந்த தேசிய எழுத்தாளர்கள் அவர்களுடைய நூல்களையெல்லாம் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதியன்று அரசுடைமையாக ஆக்குவது என்று தீர்மானித்துள்ளோம். யார் யாருடைய நூல்கள் என்றால், கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை, பா. ஜீவானந்தம், நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம், மூதறிஞர் இராஜாஜி, வ.உ. சிதம்பரனார், சுத்தானந்த பாரதி, அகிலன், ஏ.எஸ்.ஏ. ஐயர், வா.ரா., கா.மு. ஷெரீஃப், நாவலர் சோமசுந்தர பாரதியார், * பரளி நெல்லையப்பர், வ.வே.சு. ஐயர், காரைக்குடி சா. கணேசன், எஸ்.டி.எஸ். யோகி ஆகியோரைக் கௌரவிக்கும் வகையில் அவர்கள் எழுதிய நூல்களையெல்லாம் அரசுடைமையாக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி). அதற்கென அந்தப் பதிப்பகத்தாருடன் கலந்து பேசி, அவர்களிடமிருந்து உரிய தொகை கொடுத்து அந்த உரிமங்கள் பெறப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 1-35

அதைப்போலவே, சென்னை மாகாணத்தினுடைய முன்னாள் முதலமைச்சர் மறைந்த பி.எஸ். குமாரசாமி ராஜா அவர்களுடைய

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திரும்பப் பெறப்பட்டது.

நூற்றாண்டு விழாவும் இந்த ஆண்டு வருகின்றது. இந்த நூற்றாண்டு விழா தமிழக அரசின் சார்பில் அவர் பிறந்த நாளான ஜூலைத் திங்கள் 8-ஆம் நாள் இராஜபாளையத்திலே விமரிசையாகக் கொண்டாடப்படும் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், குமாரசாமி ராஜா அவர்களைக் கௌரவப்படுத்தும் வகையில் அவர்களது நூற்றாண்டையொட்டி மத்திய அரசின் சார்பில் அஞ்சல் தலை ஒன்றை வெளியிட வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் மத்திய அரசுக்கு 7-5-1998 அன்று கடிதம் எழுதி இருக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குமாரசாமி ராஜா அவர்களுடைய அந்த நூற்றாண்டு விழாவிற்கு இந்தியாவினுடைய குடியரசுத் தலைவர் அவர்களையும், முடியுமானால் பிரதமர் அவர்களையும் அழைத்து அந்த விழா கொண்டாடப்படும். நம்முடைய தமிழகத்தினுடைய தலைவர்களும் அதிலே கலந்துகொள்வார்கள் என்பதையும் தெரிவித்து, இந்த இனிய நற்செய்தியோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் நிலையத்தில் மரணம் அடைந்த கணேசன் சம்பந்தமாக நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன். அதுசம்பந்தமாக....

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒருவரைப் பேசவிட்டால், அப்புறம் மற்றவர்களையும் அனுமதிக்க வேண்டும்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.





**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி மக்கள் சார்பாக, இந்த விசைத் தறியால் தயாரிக்கப்படக்கூடிய பேண்டேஜ் துணிக்கு விற்பனை வரி விலக்கை உயர்த்தித் தந்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். அதில், ரூபாய் 50 இலட்சத்திற்கு மேலே போகக்கூடிய தொகைக்கு நீங்கள் வரி விலக்கைத் தந்திருக்கின்றீர்கள். நன்றி. ஆனால் 50 இலட்சத்தைத் தாண்டும்போது முதல் ஒரு ரூபாயிலிருந்தே வரி விதிப்பு இருக்கின்றது. அப்படியில்லாமல் இருக்க வேண்டும். இதுநாள் வரையிலும் அதிகாரிகளுக்கும் அதற்கு வரி இருந்ததா, இல்லையா என்பது தெளிவாகத் தெரியவில்லை. வணிகர்களுக்கும் தெரியவில்லை, உற்பத்தியாளர்களுக்கும் தெரியவில்லை. ஆகவே, இதுவரையிலும் உள்ள Period-ஐ நீங்கள் waiver செய்துதர வேண்டுமென்ற இந்த இரண்டு கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, waiver கேட்டால் அதிகாரிகள் வைவார்கள். அதனால் அதை விட்டு விடுகின்றேன்.

மன்னிக்கவும். ஒரு சிறு தவறு நடந்துவிட்டது. மறைந்த தேசிய எழுத்தாளர் என்று சொன்னேன். சொல்லிக்கொண்டு வரும்போது அன்பின் காரணமாக * சேர்த்துவிட்டேன். அந்தப் பெயரைப் பத்திரிகையாளர்கள் விலக்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திரும்பப் பெறப்பட்டது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/1998) நிறைவேற்றப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.





ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1998), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

*பிற்பகல் 1-40*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1998) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல் திருத்தங்கள் இல்லை.

[பேரவைத் துணைத் தலைவர்] [1998 மே 28

பிரிவுகள் 2 மற்றும் 3 மற்றும் இணைப்புப் பட்டியல் ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/ 1998) நிறைவேற்றப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



1998 மே 28]

**(இ) இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1998), மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/ 1998) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 1-4-1998 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/1998) நிறைவேற்றப் பெற வேண்டும்".

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## (@) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1998), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1998) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலச் சீர்திருத்தச் சட்டத்தை ஏற்கெனவே 1961-ல் கொண்டு வந்தோம். 5 பேர் கொண்ட குடும்பத்திற்கு 30 ஏக்கர், அதற்கு மேலே இருக்கிறவர்களுக்கு 5 ஏக்கர் என்று கொண்டு வந்தோம். கொண்டு வந்தோம் என்று சொன்னால், அதிலே ஏதாவது நிலம் இருக்கிறதா? நிலம் இல்லை என்று நான் கருதுகிறேன். நிலம் இருந்து யார் யாருக்குக் கொடுக்கப்பட்டது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதோடு நான் இந்தச் சட்டமன்றத்திலே இல்லாத ஒரு விஷயத்தைப் பேசிவிட்டேன். எனக்கு அது வேதனையாக இருக்கிறது. என்ன வேதனை என்றால், எம்.எல்.ஏ-க்களுக்கான சம்பளம் பற்றி எல்லோரும் சொன்னதால் சொல்லிவிட்டேன். அதை

---

@ 30-4-1998 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்** வெளியிடப்பட்டுள்ளது.

நான் விரும்பவில்லை. இருந்தாலும் அது எனக்குப் பெரிய பயமாகப் போய்விட்டது. ஏனென்றால், எனது தொகுதியிலே, 'அக்காள் போய் சம்பளம் பற்றிப் பேசி இருக்குதப்பா' என்று சொல்வார்கள். ஆகவே தயவுசெய்து எல்லோருடைய கோரிக்கைகளுக்காக, கார் வேண்டுமென்று சொன்னேனே தவிர எனக்காகவோ, நான் ஏற்றுக்கொள்வதற்காகவோ இதைச் சொல்லவில்லை என்பதைச் சொல்லி நான் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மையார் இங்கே எழுப்பிய பிரச்சினை, அத்தோடு இது இணைக்கப்படவில்லை. இணையவில்லை, இணையாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.





பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1998) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(உ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1998), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

[1998 மே 28

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1998) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@26-5-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1998 மே 28] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்சவரம்பு நிர்ணயித்தல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 21/1998) நிறைவேற்றப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 7. அறிவிப்பு-தொடர்ச்சி

### (ஆ) நேற்றைய நிரலில் எஞ்சியுள்ள சட்டமுன்வடிவுகளை மறுநாள் எடுத்துக்கொள்ளுதல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து பேசுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்

என்று கேட்டுக்கொள்கிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் விமான வேகத்திலே போய்க்கொண்டு இருப்பீர்களானால், பிறகு Forest Act மற்றும் Motor Vehicles Acts இருக்கின்றன. அவற்றிலே விவாதிக்க வேண்டியது இருக்கிறது. எங்களுக்குக் கருத்துச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். எனவே, இந்த அளவிற்கு வேகமாக நிறைவேற்ற வேண்டிய அவசியம் இல்லை. நாளைக்குக்கூட வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியானால் இன்னும் இரண்டு நாட்கள் நீட்டிக்க வேண்டி இருக்கும்.

**திரு. சி. ஞானசேகரன்:** எங்களுக்குக் கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். இப்போது மணி 1.48 ஆகிவிட்டது என்பதற்காக வேகமாகப் போனால் எப்படி? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாளைக்கு மற்ற சட்டமுன்வடிவுகள் நிறைய இருக்கின்றன.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து, அவசரப்படவேண்டாம் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றோம். ஏன் என்றால், இதிலே எங்கள் சுய நலத்திற்காகச் சொல்லவில்லை. தமிழ்நாட்டு மக்களுக்காக நாம் சட்டங்களை இயற்றிக் கொண்டிருக்கிறோம். எத்தனையோ விஷயங்களைப்பற்றி எவ்வளவோ நேரம் நாம் பேசுகின்றோம். இந்த மாதிரி ஒரு அசுர கதியில் சட்டத்தை நிறைவேற்றவேண்டும் என்று துடிப்பது ஏன் என்று எங்களுக்கு விளங்கவில்லை. ஏன் என்றால், எங்களுடைய உறுப்பினர் பொன்னம்மாள் அக்காள் அவர்கள் சொன்ன, ரெயிஸ் செய்த, இஷ்யூ பற்றி எல்லாம் என்ன என்று புரிந்துகொள்ளக்கூடிய அளவுக்குக்கூட எனக்கு சக்தி இல்லை. ஆனால், அதைப்பற்றி அவர்களுக்குத் தெரிந்திருக்கும். எனக்கு சில விஷயங்களைப்பற்றித் தெரியலாம். மற்ற உறுப்பினர்கள், ஆளும்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் நிறைய விஷயங்களை சொல்லவேண்டும் என்று நினைக்கலாம். எனவே, தயவு செய்து வாய்ப்புக் கொடுக்கக்கூடிய அளவிலே, இந்தச் சட்டமன்றத்திலே இயற்றப்படக்கூடிய, நிறைவேற்றப்படக்கூடிய சட்டங்கள், புரியாதவர்களும் புரிந்துகொள்ளக்கூடிய அளவிலே நீங்கள் நேரத்தை ஒதுக்கித்தந்து அவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று





மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நீங்கள் நிறைவேற்றிய நில உச்சவரம்புச் சட்டத்தைக்கூட நாளைக்கு சேர்த்து எடுத்துக்கொண்டு, அவற்றுக்கும் சேர்த்துப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நாளைக்கு வேறு 23 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. அவற்றோடு இவற்றையும் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், இன்னும் இரண்டு நாட்கள் நீட்டிக்க வேண்டியிருக்கும். அப்படி நீட்டித்தால், அதற்கு ஒரு விமர்சனம்கூட சொல்கிறார்கள். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக சட்டமுன்வடிவுகளை அவசர வேகத்தில் நிறைவேற்றக்கூடாது. ஏனென்றால், ஒவ்வொரு விஷயமும் பரிசீலித்து, விவாதித்து, தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம். நீண்டகாலம் நிலைக்கின்ற அந்த விஷயத்தை அவசர கதியில் நிறைவேற்றக் கூடாது. போதுமான அவகாசம் கொடுத்துத்தான் விவாதித்து தீர்மானிக்கவேண்டுமென்பதை வலியுறுத்துகின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய வேண்டுகோளை ஏற்று (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்லிவிடுகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அவையை நீட்டிக்கவேண்டுமென்று திட்டம் போட்டிருக்கிறீர்கள். அதற்குப் பிறகு எதற்குப் பேசி விவாதம் செய்ய வேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதற்குத்தான் நான் சொன்னேன். இன்னும் 23 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் சேர்த்து விரிவாக விவாதிக்க வேண்டுமென்றால் இன்னும் 2, 3 நாட்களாகும். அதற்கும் ஒரு விமர்சனம் வரும் என்று சொன்னேன். சொல்லி முடித்தவுடன் எழுந்து விட்டார்கள் பாருங்கள். திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** ஒரேயொரு விஷயம். தாமரைக்கனி அவர்கள் இங்கே ஆட்சேபிக்கின்றார்கள். 1994 ஆம் ஆண்டு உள்ளாட்சிச் சட்டம் இதே பேரவையில் நிறைவேற்றப்பட்டபோது

எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்ததற்குப் பின்னர் விவாதமே இல்லாமல் நிறைவேற்றப்பட்டது. எனவே, எந்த ஒரு சட்டத்தையும் விவாதமே இல்லாமல் நிறைவேற்றுகிற இயல்பைக் கொண்டவர்களால் சொல்கிற விமர்சனத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு நாம் தீர்மானிக்கக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்களுடைய ஏகோபித்த கருத்தை ஏற்றுக்கொண்டு மீதமுள்ள சட்டமுன்வடிவுகள் நாளை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-5-1998) காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.52 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.





# 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*165.* 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள, பெட்ரோல், டீசல் மற்றும் சிமிட்டி நீங்கலாக விற்பனை செய்யப்படும் ஏனைய சரக்குகளுக்கு, யாதொரு வணிகராலும் செலுத்தத்தக்க சலுகை வீதத்திலான வரித்தொகை தொடர்பாக வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 21-3-1998 ஆம் நாளிட்ட 80 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

*166.* வணிக விற்பனைப் பெயருடன் அல்லது வணிக விற்பனைப் பெயரின்றி, மசாலாப் பொடி அதன் அனைத்து வகைகளிலும் செய்யப்படும் விற்பனைமீது செலுத்தத்தக்க வரித் தொகை வீதத்தைக் குறைப்பது தொடர்பாக, வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 7-4-1998 ஆம் நாளிட்ட 110 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

*167.* 1997ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண் 1) (வணிகம்) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்).

*168.* 1997ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண். 2) (வருவாய் வரவினங்கள்) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்).

*169.* 1997ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாள் முடிய காலவரைக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (எண் 3) (சிவில்) (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்).

*170.* தமிழ்நாடு அரசின் *1996-97* ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள், (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் *151(2)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்).

*171.* தமிழ்நாடு அரசின் *1996-97* ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் கணக்குகள் (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் *151(2)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனையத் தாள்கள்.

**248.** மதிப்பீட்டுக் குழுவின் பன்னிரெண்டாவது முதல் பதினைந்தாவது வரையிலான அறிக்கைகள், *1997-98. (4 அறிக்கைகள்)*

**249.** பொதுக்கணக்குக் குழுவின் நூற்று பதினைந்தாவது முதல் நூற்று இருபத்தி மூன்றாவது வரையிலான அறிக்கைகள், *1997-98. (9 அறிக்கைகள்)*

**250.** பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி ஒன்பதாவது முதல் அறுபத்தி மூன்றாவது வரையிலான அறிக்கைகள், *1997-98. (5 அறிக்கைகள்)*

***251.*** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை, *1997-98.*

219103

2

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.